விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 14 செவ்வாய்க்கிழமை (28.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 160

# சீர்குலைந்த நிலையில் இலங்கைச் சுதந்திரம்

## இனவாதத்திற்கு எதிரான சர்வதேச அமைப்பு ஐ.நாவில் முறைப்பாடு

(ஜெனிவா)

இலங்கையில் சுதந்திரமாக ஒன்றுகூட முடியாத நிலைமை காணப்படுவதாக சகலவிதமான ஒடுக்குமுறைகள் மற்றும் இனவாதத்திற்கு எதிரான சர்வதேச இயக்கம் தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 23ஆம் அமர்வுகள் நேற்று ஜெனிவாவில் ஆரம்பமானது.

இதன்போது அவ்அமைப்பு தனது அறிக்கையை வெளியிட்டது. அதில், இலங்கையின்பல பாகங்களிலும் சுதந்திரமாக ஒன்று கூடும் உரிமை மறுக்கப்பட்டுள்ளதாகவும், அமைதியான ஆர்ப்பாட்டங்கள் மீது

(19ஆம் பக்கம் பார்க்க)



நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டு நேற்றுமுன்தினம் சீனா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குழுவினருக்கு பீஜிங் சர்வதேச விமான நிலையத்தில் பெரும் வரவேற்பளிக்கப்பட்ட போது ...

## நவநீதம்பிள்ளை ஆகஸ்டில் இலங்கை வருகிறார்



(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 25 ஆம் திகதியன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கை அரசாங்கம் 2011 ஆம் ஆண்டு விடுத்த அழைப்பை ஏற்றே நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்வதாக நேற்று நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித

(20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு அரசியலில் நேற்றுடன் 43 வயது

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் அறிமுகமாகி நேற்றுடன் 43 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

24 வயது இளைஞனாக மஹிந்த ராஜபக்ஷ இருந்தபோது பெலியத்த தொகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்டு 1970 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

2004 ஏப்ரல் மாதம் 6 ஆம் திகதி நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்டார். அத்துடன் இலங்கையின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதியாக 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 திகதி பதவியேற்றார். (செ-11)

## பௌத்த சாசன அமைச்சை கோத்தாவிற்கு வழங்குங்கள்

### கோருகிறது பொது பல சேனா

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு பௌத்த சாசன அமைச்சு வழங்கப்பட வேண்டுமென பொது பல சேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

பௌத்த சாசன அமைச்சு பௌத்த மக்களுக்கு உரிய முறையில் சேவையாற்றத் தவறியுள்ளதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த விடயம் குறித்து தீர்மானம் எடுக்க வேண்டிய தருணம் உருவாகியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.


பௌத்த சாசன அமைச்சைப் பாதுகாக்கும் பொறுப்பை பாதுகாப்புச் செயலாளரே சிறந்த முறையில் நிறைவேற்றுவார் என அவர் தெரிவித்துள்ளார்.

பௌத்த சாசன அமைச்சின் நடவடிக்கைகள் குறித்து ஒரு வார காலத்திற்குள் தீர்மானம் எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சிங்கள பௌத்தர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கட்சி பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (செ-11)

## இனப் படுகொலையாளிகளை வரலாறு தண்டிக்கும்!

### வீரமணி செறிந்த பேச்சு



(சென்னை)

இனப்படுகொலைக்குக் காரணமான சர்வாதிகாரிகள் - கொடுங்கோலர்கள் அவர்கள் எந்த நாட்டுக்காரர்கள்.

ஆனாலும், வரலாறு தண்டிக்காமல் விடுவதில்லை என திராவிட கழகத்தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## மற்றுமொரு தேரர் தீக்குளிக்க முயற்சி

(கண்டி)

போகாவத்த இந்திரரத்ன தேரரின் சடலம் எடுத்துச் செல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து, மாளிகாகந்த சுதத்த தேரர் என்பவர் தீ குளித்து தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார். பாதுகாப்பு தரப்பினர் தலையிட்டு அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

கொல்லப்பட்ட தேரரின் உடல் தொடர்பான இறுதி கிரியைகளை மேற்கொள்ள சென்ற இராவணா சக்தி அமைப்பினர், மல்சாலைக்கு சென்றிருந்தனர் அப்போது, சடலம் எடுத்துச் செல்லப்பட்டு விட்டது என்ற செய்தி அறிந்த அவர்கள் ஆத்திரமடைந்து குழப்பத்தில் ஈடுபட்டனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## வடபகுதிக்கான உரிமைகள் மறுக்கப்படுவது ஏன்? - அசாத் சாலி

(கொழும்பு)

நாட்டில் அதிகாரத்தைப் பரவலாக்கும் நோக்கில் அறிமுகம் செய்யப்பட்டதே அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம். இன்று அதன் பலன்களைஏனைய மாகாண மக்கள் அனுபவித்து வருகின்ற நிலையில் வட பகுதி மக்களுக்கு மட்டும் இந்த உரிமைகள் மறுக்கப்படுவது ஏன்? இவ்வாறு கேள்வி எழுப்பினார் தேசிய ஐக்கிய முன்னணியின் பொது செயலாளர் அசாத் சாலி.



கடந்த சனிக்கிழமை தேசிய ஐக்கிய முன்னணியின் அக்குறணை கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஒரு வரவேற்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவா இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், நவசமசமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன, புதிய சிஹல ஊறுமய கட்சிதலைவர்மன மேந்திர ஆகியோரும் இந்த வைபவத்தில் பங்கேற்றனர். பெருந்திரளான பிரதேசவாசிகளும் இதில் கலந்து கொண்டனர்.

இங்கு தொடர்ந்து பேசிய அசாத் சாலி,

இந்த நாட்டில் சகல இனங்களும் சம உரிமைகளோடு

(20ஆம் பக்கம் பார்க்க)

## தீக்குளித்த தேரருக்காக நேற்றும் ஆர்ப்பாட்டம்

(கண்டி)

பௌத்த தர்மத்திற்காகவும், நாட்டிற்காகவும் மக்களுக்காகவும் தீக்குளித்து உயிர்துறந்த போவத்தகே இந்திர ரத்ன தேரரின் கோரிக்கைகளை அரசாங்கம் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி பௌத்த அமைப்புகள் சில கண்டியில் நேற்று மாலை ஆர்ப்பாட்டம் நடத்தின.

கண்டி நகர மத்தியிலுள்ள ஜோர்ஜ் ஈ.டி.சில்வா கூரைப் பூங்காவில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், கண்டி பௌத்த ஒன்றிய அமைப்பு, பொது பல சேனா உட்பட பல்வேறு பௌத்த அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

நாட்டில் பௌத்த தர்மத்திற்கு ஏற்றவாறு பௌத்த அரசியல் சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற வேண்டும்,

பலவந்தமாக மதமாற்றம் செய்கின்றவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்,

சாவமத, சர்வ இன அமைப்புகள் இல்லாதொழிக்கப்பட வேண்டும்,

மாடுகள் கொல்லப்படுவதற்கு முற்றாக தடை விதித்தல் போன்ற கோரிக்கைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.

நாட்டிற்காகவும், பௌத்த மக்களுக்காகவும் உயிர் தியாகம் புரிந்த போவத்தகே இந்திர ரத்ன தேரரை நினைவு கூருவதுடன், அவரின் அபிலாஷைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்

(19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு குழந்தைகளுடன் ஆற்றில் குதித்த தாய்

## குழந்தைகள் இருவரும் பலி

மட்டக்களப்பு மீராவோடையில் தனது இரண்டு குழந்தைகளுடன் ஆற்றில் குதித்த தாய் தெய்வாதீனமாக காப்பாற்றப்பட்டுள்ளதுடன் குழந்தைகள் இருவரும் பலியாகியுள்ளனர்.



குறித்த தாய் நேற்று திங்கட்கிழமை காலை 11 மணியளவில் தனது இரண்டு குழந்தைகளுடன் ஆற்றில் குதித்துள்ளார்.

சம்பவத்தில் அவருடைய இரு குழந்தைகளான பூஜா (வயது-7) மற்றும் மூன்றரை வயதான மீனுஜா ஆகிய இருவரும் பலியாகியுள்ளனர்.

அவர்களுடைய சடலங்கள் மாஞ்சோலை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

பிரதேசவாதிகளினால் காப்பாற்றப்பட்ட தாய் மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாகவே குறித்த தாய் தனது இரண்டு குழந்தைகளுடன் ஆற்றில் குதித்துள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாக தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் விசாரணகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (செ-11)

# கீதாஞ்சலியின் பாதுகாப்பு பொலிஸார் மீது தாக்குதல்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் திருமதி ந.கீதாஞ்சலியின் பாதுகாவலர்களான பொலிஸார் மீது இனந்தெரியாத குழுவொன்று தாக்குதல் நடத்தியுள்ளது.

வவுனியா வைரவபுளியங்குளத்தில் நேற்று முன்தினமிரவு 10 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றதாக திருமதி ந.கீதாஞ்சலி உறுதிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியாவில் தங்கியிருந்த போது தனது பாதுகாப்புக்கான பொலிஸார் இருவருடன் சாரதியும் உணவு பெறுவதற்காக வைரவபுளியங்குளம் பகுதிக்குச் சென்றிருந்தனர். இவ்வேளை அப்பகுதிக்கு வந்திருந்த இளைஞர் குழுவொன்று எனது பாதுகாவலர் மற்றும் சாரதி மீது தாக்குதலை நடத்தியதாக தெரிய வந்தது.

இதன்போது ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் பலத்த காயங்களுக்குள்ளாகி வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை, வவுனியா பொது வைத்தியசாலை பொலிஸார், காயமடைந்த பொலிஸாரிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சம்பவம் இடம்பெற்ற இடத்திலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-250,266)

# வடக்குத் தேர்தல் சந்தேகமே!

## கருணாநிதி

இலங்கையில் ஜனாதிபதியும், அமைச்சர்களும், ஆளுங்கட்சியும், அதன் கூட்டணிக் கட்சிகளும் தொடர்ந்து மேற்கொண்டு வரும் பிடிவாதமான முயற்சிகளின் விளைவாக இலங்கை வடக்கு மாகாணத்தில் குறிப்பிட்டபடி தேர்தல் நடைபெறுமா என்பது கேள்விக் குறியாகி இருக்கிறது என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கருணாநிதி இலங்கை விவகாரம் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தமிழர்களின் மாகாணத்திற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரம் மட்டுமே வழங்கிடக்கூடிய வகையில், இலங்கை அரசியல் சட்டத்தின் 13-வது திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழினம் குறித்து சிங்கள அரசுடன் ஏற்படுத்தப்பட்ட எந்த ஒப்பந்தமும் நிறைவேற்றப்பட்டது இல்லை என்ற எதிர்மறைப் பின்னணியைக் கொண்டது இலங்கை அரசியல் வரலாறு. சிங்களப் பேரினவாதிகள் 13-வது சட்டத்திருத்தத்தை எப்படியாவது ரத்துச்செய்திட வேண்டும் என்பதற்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார்கள்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க என்பவர், இலங்கை வடக்கு மாகாணத்திற்கு தேர்தல் நடத்துவது என்பது போரில் இறந்த இலங்கை இராணுவ வீரர்களை அவமதிக்கும் நிகழ்வாகும் என்றும் பேசியிருக்கிறார்.

அவர் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் கருத்தரங்கு ஒன்றில் பேசும் போது 13-வது திருத்தத்தை ரத்து செய்வதற்கும் மாகாண கவுன்சில் திட்டத்தை நீக்கம் செய்வதற்கும் தனிநபர் தீர்மானம் ஒன்றை இலங்கை நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்போவதாக அறிவித்திருக்கிறார்.

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மாகாணத்தில் தேர்தல் நடத்தி, நிலம் தொடர்பாகவும் காவல்துறை தொடர்பாகவும் அதிகாரம் வழங்குவது என்பது மோசமான விளைவுகளையே ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளார்.

இவை அனைத்தும் ஈழத்து தமிழர்களிற்கும் எதிரான செயற்பாடுகளே ஆகும். இந்நிலையில் வடக்குத் தேர்தல் நடைபெறுவது சந்தேகமே என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (செ-11)

# தமிழ்ச்செல்வனின் மனைவி கிளிநொச்சிக்கு திடீர் விஜயம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் மனைவியும், மகளும் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

கிளிநொச்சி மகா வித்தியாலயத்திற்குச் சென்று தங்கள் பிள்ளைகளின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொண்டதாகவும், தலைவர் பிரபாகரனால் பிள்ளைகளுக்கு வைக்கப்பட்ட பெயர்களை மாற்ற வேண்டியிருப்பதாக திருமதி தமிழ்ச்செல்வன் தெரிவித்ததாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் தாங்கள் நான்கு வருடங்களாக இருண்ட யுகத்திற்குள் இருப்பதாகவும், தனது பிள்ளைகள் நான்கு வருடங்களாகப் பாடசாலையைக் காணவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்ததாக சம்பவத்தினை அவதானித்தவர்கள் தெரிவித்தனர். இவருடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த நால்வர் சேர்ந்து வந்ததாகவும் நேரில் கண்டோர் தெரிவித்துள்ளனர். (செ-11)

# இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படமாட்டாது

## ஏ.கே.அந்தோனி தெரிவிப்பு

இலங்கை இராணுவ வீரர்களுக்கு தமிழக மண்ணில் பயிற்சி அளிக்கப்படமாட்டாதென இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி தெரிவித்துள்ளார்.

தஞ்சையில் 180 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட விமான நிலைய ஓடுதளத்தை பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அந்தோனி திறந்து வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டி அளித்த அவர்,

இலங்கை இராணுவ வீரர்களுக்கு மத்திய அரசு தமிழக மண்ணில் பயிற்சி அளிக்காது என்றார். மேலும், அமைதியை இந்தியா விரும்பினாலும் பாதுகாப்பு விடயத்தில் எதையும் விட்டுக் கொடுக்காது என்றார்.

அத்துடன் தஞ்சை விமான நிலையத்தை மேலும் விரிவாக்கும்திட்டம்உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (செ)


## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா (Prima), கிறீன் வலி (Green Vally) & சந்தலங்கா (Sandalanka) 'A' தரமான புறொயிலர் கோழிக் குஞ்சுகள் நியாயமான விலையில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். தொகையான கொள்வனவாளர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும். முன் பதிவு செய்யவும்.



1.நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்,யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 021 2226944
2.சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை.
தொ.பே. இல. 077 8996085

(2837)

## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை, மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(C-1660)

## செல்லா சினிமா

யாழ்ப்பாணம்




## யாழ்.நகரில் மருத்துவக் கருவிகள்

பல்கலை மாணவர்களுக்கு, மருத்துவர்களுக்கு மருத்துவ மனைகளுக்கு வேண்டிய மருத்துவக் கருவிகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். மருந்துச்சாலைகளுக்கு, மருத்துவமனைகளுக்கு நாமே நேரில் வந்து பொருட்களை ஒப்படைப்போம்.

தொடர்புகளுக்கு:
Contact@medconlk.com
Medcon (PVT) Ltd,
No.218 1/1, Hospital Road, Jaffna.
0214923587, 0717943439

(2857)

## தற்போது யாழ் நகரில்...

edexcel | UNIVERSITY OF WOLVERHAMPTON

சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

(சி-3441)

**BTEC HND in Computing & Systems Development**

- நவீன உலகின் தொழிற்சந்தை வாய்ப்பு மற்றும் மாற்றங்களை கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்ட பாடநெறிக் கட்டமைப்பு
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் வாய்ப்பினை (Job Oriented) உறுதிப்படுத்தும் முழு நேர தீவிர பயிற்சி நெறியுடன் கூடிய கற்கை நெறி
- நவீன மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூட வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்
- BCAS Campus இன் Colombo தலைமையகத்திலிருந்து வருகை தரும் முழு நேர விரிவுரையாளர்கள்



பதிவு செய்யும் முதல் 25 மாணவர்களுக்கு ஆரம்பக் கட்டணம் இலவசம்

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Building Careers - Transforming Lives

Macro Ads

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஆயுளின் எதிரிகள்

"மனிதனுக்கு ஆயுள் நூறு வருடங்கள் என்று சொல்லுகிறார்கள்... ஆனாலும் அதிகம் பேர் பூரணமாக ஆயுள் முழுவதும் வாழ்வதாகத் தெரியவில்லை.

இது ஒரு சந்தேகம். இதே சந்தேகம் திருதராஷ்டிரனுக்கும் வந்தது.

உடனே திருதராஷ்டிரன் விதுரனைப் பார்த்துக் கேட்கிறான்.

''ஏன் இப்படி... யாருமே பூரண ஆயுள் வாழ்வதில்லையே'' இதற்கு விதுரர் பதில் கூறுகிறான்.

''ஆறு கூரிய வாள்கள்... மனிதனுடைய ஆயுளை அழிக்கிறது'' என்றார்.

அது என்ன ஆறு கூறிய வாள்கள்?

அவரே கூற ஆரம்பிக்கிறார்; அதிக கர்வம், அதிகமாகப் பேசுவது, தியாக மனப்பான்மை இல்லாமை, கோபம், சுயநலம், நண்பர்களுக்குத் துரோகம்– இவைதான் ஆயுளை வெட்டக்கூடிய கத்திகள்.

அதிக கர்வம் என்ற வாள் ஒரு முக்கியமானது.

தான் கெட்டிக்காரன். தன்னிடம் அதிகம் பணம் உள்ளது. தன்னாலேதான் அனைத்தும் நிறைவேறுகிறது. இப்படியெல்லாம் நினைப்பது பிழை... "நான்" என்ற கர்வம் கூடாது. அழிவிற்குக் காரணமாக மாறி விடுகிறது.

இரண்டாவது அதிகம் பேசுவது. அதாவது வீண் வம்பை விலைக்கு வாங்குவது.

அது இடைஞ்சலைக் கொண்டு வந்து விடும். நமது பேச்சு கடுமையாக இருக்கக்கூடாது.

உண்மையானதாக இருக்க வேண்டும். பிரியமானதாக இருக்க வேண்டும். நன்மையைக் கருதியதாக அமைய வேண்டும். அதுதான் நல்லதாகும்.

மூன்றாவது விடயம்; அனைத்தையும் நாம்தான் அனுபவிக்க வேண்டும் என்ற மனப்பான்மை. ஆசை அதிகரித்துத்தான் நமக்குத் தியாக மனப்பான்மை ஏற்படுவதில்லை. பிறருக்கு உதவுவதற்காகத்தான் நாம் இந்த உலகத்திலே பிறந்திருக்கிறோம். இதை உணர்ந்தவர்கள் தியாக மனப்பான்மை கொண்டவர்கள்.

அடுத்த படியானது கோபம்; ''கோபம்'' தான் மனிதனுடைய முதல் எதிரி.

கோபத்தை வென்றவன்தான் யோகி. கோபத்திலே இருக்கிறவனுக்கு தர்மம் எது– அதர்மம் எது என்று தெரியாது. அந்த விவேகத்தை இழந்து விடுவான். பாவம் செய்ய ஆரம்பித்து விடுவான். அதனாலே கோபப்படாமல் இருக்க பழகிக் கொள்ள வேண்டும். அடுத்தவர்கள் கோபப்பட்டால் அதை நாம் சகிக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

அடுத்தது ''சுயநலம்'' – சுயநலம்தான் அனைத்துத் தீமைகளுக்கும் காரணமாக அமைகிறது.

தங்களது காரியம் நிறைவேற வேண்டும் என்பதற்காக எந்தப் பாவத்தையும் செய்ய துணிந்து விடுகிறோம். இப்படியானவர்கள்தான் சுயநலவாதிகள்.

அயலவர்களின் சந்தோஷத்தைப் பார்த்து நாம் சந்தோஷப்பட வேண்டும். மற்றவர்களின் துன்பத்தில் பங்கேற்க வேண்டும். இப்படியாக இருந்தால் சுயநலம் போய் விடும்.

ஆறாவது விடயம்; நண்பர்களுக்குத் துரோகம் செய்வது. இவ்வுலகில் நல்ல நண்பர்கள் கிடைப்பது அபூர்வம். அப்படியிருக்கும் போது அவர்களுக்குத் துரோகம் செய்ய நினைப்பது எவ்வளவு பெரிய அக்கிரமம்.

யாரிடமும் நாம் சிநேக மனப்பான்மையுடன் பழக வேண்டும். கருணை காட்ட வேண்டும்.

இந்த ஆறு விடயங்களிலும் சற்று கவனமாக இருந்தால், வெற்றிகரமான வாழ்க்கை நிச்சயம்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# மாகாணசபை அதிகாரத்தை நீக்க எவரையும் அனுமதிக்க முடியாது

## போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் தெரிவிப்பு

மாகாணசபை அதிகாரத்தை நீக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. மாகாண சபை அதிகாரத்தில் கை வைத்தால் தமிழர்கள் சுய சார்பு அரசியலை முன்னெடுப்பார்கள் என போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக அவ்வியக்கம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மாகாணசபை அதிகாரம் தொடர்பாகவும் 13 ஆம் ஆவது திருத்தம் தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்கள் பல்வேறு தரப்பினராலும் கூறப்பட்டு வருகின்றன.

கருத்துக்கள் கூறவும் ஆர்ப்பாட்டங்களை நடத்தவும் ஜனநாயக நாட்டில் யாருக்கும் சுதந்திரம் உண்டு. தங்கள் அரசியல் மேம்பாட்டுக்காக யாரும் எதையும் செய்யலாம். பின் வாசல் வழியாக அதிகாரத்தை கைப்பற்ற நினைக்கும் எவரும் தமிழ் மக்களின் உரிமைகள் மீது கைவைத்துத் தாம் தமது இலக்கை அடையலாம் என்று எண்ணினால் அது வெறும் பகல் கனவாகவே முடியும்.

ஏனென்றால் 13 ஆவது திருத்தமானது ஒரு உள்நாட்டு அரசியல் சார்ந்த பிரச்சினை அல்ல. 1983 களின் பின்னர் இலங்கையின் இனப் பிரச்சினை சர்வதேச மட்டத்தை எட்டிய போது மிகவும் இறுக்கமான வெளியுறவுக் கொள்கையை அணி சேரா கொள்கையை கடைப்பிடிக்கும் வல்லரசு நாடான இந்தியா தனது பிராந்திய நலன்களையும் தமிழகத் தில் வாழும் ஆறு கோடி தமிழ் மக் களினதும் உணர்வுகளையும் மதி த்து தனது வெளியுறவுக் கொள்கையில் சிறு விட்டுக் கொடுப்புக்களுடன் நடந்துகொண்டமை ஒரு துணிச்சலான முயற்சியாகும்.

எனவே இந்த மாகாண சபை நடைமுறையில், இந்திய அரசாங்கத்தின் பிந்திய நலன்கள் பெரிதும் சம்பந்தப்பட்டுள்ளன. 13 ஆவது திருத்தத்தினை ஏற்றுக்கொள்ளாமையே விடுதலைப்புலிகளின் இராணுவ அரசியல் தோல்விக்கும் காரணமாகும்.

தமிழ் மக்களின் நலன்களுக்கு அப்பால் இந்தியாவின் வல்லாதிக்க சம நிலையினை தெற்காசிய பிராந்தியத்தில் பேணுவதற்கான இறுதித் துரும்புச் சீட்டாக இந்த 13 ஆவது திருத்தம் விளங்குகிறது. மூவாயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய இராணுவ வீரர்களை பலிகொடுத்து ஒரு இளம் துடிப்புள்ள நேரு குடும்ப வாரிசு ராஜீவ் காந்தியையும் இழந்துள்ள இந்திய அரசியல் இலங்கை விடயத்தில் மேலும் ஒரு தோல்வியை சந்திக்க விரும்பாது என்பதே உண்மை.

தமிழ் மக்களை பலவீனப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு இப்போது இந்தியாவின் கண்ணைக் குத்தும் வேலையையே பொது பல சேனாவின் கலபொட அத்தே ஞான சார தேரரும், தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்சவும் ஜாதிகஹெல உறுமயவின் சம்பிக்கரணவக்க போன்றோரும் செய்து வருகின்றனர்.

மாகாண சபை அதிகாரத்துக்கும் 13 ஆவது திருத்தத்துக்கு எதிராகவும் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் இல ங்கை தீவின் நல்லிணக்கத்துக்கு நிரந்தரமான தடையை ஏற்படுத்துவ்துடன், தமிழ் மக்களின் அரசியலை சுயசார்பு நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதுடன் உல்க நாடுகளின் ஆதரவினை தமிழ் மக்கள் பெறுவதற்கும் இது நிச்சயம் வழிவகுக்கும் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 90 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 80 | 80 | 120 | 100 |
| தக்காளி | 100 | 120 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 60 | 60 |
| கோவா | 100 | 90 | 80 | 120 |
| கரட் | 120 | 100 | 120 | 140 |
| பூசணி | 40 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 200 | 140-200 | 120-200 | 120-180 |
| பெரிய வெங்காயம் | 60 | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | 70 | -- | 100 |
| பயற்றங்காய் | 30 | 40 | 60 | 40 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 | 160 |
| பீற்றூட் | 100 | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 100 | 90 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 250 | 250 | 600 | 400 |
| போஞ்சி | 120 | 120 | 120 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 70 | 50 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 120 | 50 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40-50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 | 120 |

# இராசி பலன்

*28.05.2013*
*(வைகாசி 14, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு*
*சதுர்த்தி பின்னிரவு 12.56 மணிவரை*
*பூராடம் பிற்பகல் 4.44 மணிவரை*
*இராகுகாலம் 2.52-4.22 மணிவரை*
*சுபநேரம் 10.22-11.52 மணிவரை*
*சங்கடஹர சதுர்த்தி விரதம்,*
*அக்கினி நாள் முடிவு*

**மேடம்** மகிழ்ச்சி அதிகரித்து மனம் மாற்றம் காணும் நாள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், பூர்வீக சொத்துக்களால் நன்மையுண்டு.

**இடபம்** உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வெளியூர்ப் பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.

**மிதுனம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கேட்பீர்கள்.

**கடகம்** வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, உடல் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், சுவாரஸ்யமான நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்.

**சிங்கம்** சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவம் இல்லத்தில் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கன்னி** பொருளாதார முன்னேற்றம் கருதி சில திட்டங்களை மேற்கொள்வீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டு பெற வேண் டிய நாள், தொலைபேசி வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம்.

**துலாம்** சகோதர ஒற்றுமை பலப்படும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன நன்மையுண்டு.

**விருச்சிகம்** நண்பர்கள் மூலம் சுப செலவுகள் வந்து சேரலாம், தனவரவு திருப்திகரமாக அமையும், உறவினர் வருகையுண்டு, புதிய சொத்துக்கள் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**தனுசு** கற்பனை மிகுதியான நாள், மற்றவர்களின். விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, செய்தொழிலில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மகரம்** இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், சுப விரயங்கள் கூடும், சயன சுகக் குறைவான நாள்

**கும்பம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும், காரிய அனுகூலமுண்டு.

**மீனம்** தூரதேச செய்திகள் வந்து சேரும் நாள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் கைகூடும், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று நடைபெறலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழில் பிரதேசங்களில் வான்தோண்டல் அவசியமானது

## நீரியல் வளத்துறை உதவி பணிப்பாளர் தெரிவிப்பு

(தும்பளை)

கடற்றொழில் பிரதேசங்களைப் பொறுத்த வரை வான்தோண்டல் அவசியமான ஒன்றாகும் என யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் கணேசமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை முனையில் வான்தோண்டல் நிகழ்வின் தொடக்க நிகழ்வு கடந்த சனிக்கிழமை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க இளைப்பாற்று மண்டபத்தில் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னரும் பலமுறை இந்த வான்கள் தோண்டப்பட்டபோதும் கடல் கொந்தளிப்பாலும் பாறைகளின் சரிவுகளாலும் மூடப்பட்டு வருகின்றன.

இந்த வான்களை இங்குள்ள மக்கள் தமது முழுமையான பாதுகாப்புடன் பாதுகாத்து வருதல் வேண்டும்.

குருநகர்ப் பகுதியில் தேர்ச்சி பெற்றவர்கள் வலைகளைப் பாவித்து இவ்வான்களை பாறைகள் மூடாதவாறு பாதுகாத்து வருகின்றனர்.

இதேபோன்று இங்குள்ள மக்களும் தமது கடல் செல்லும் வான் பாதையைத் தாமே பாதுகாத்து வருதல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-3-19)



நன்றி: மிரர்

## பயிற்சி நெறிகளுக்கான நேர்முகத் தேர்வு

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட தொழிற்பயிற்சி நிலையம் அமைந்துள்ள கைதடி நுணாவில் அறவழி கட்டடத்தில் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பின்வரும் பயிற்சி நெறிகள் ஆரம்பமாகவுள்ளன.

தையல், அழகுக்கலை, கணனி மென்பொருள், கணனி வன்பொருள், தகவல் தொழில்நுட்ப ஆகிய பயிற்சி நெறிகள் இடம்பெறவுள்ளன.

இப் பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளும் இளைஞர், யுவதிகளுக்கான நேர்முகத் தேர்வு, பயிற்சி நெறி சம்பந்தமான கலந்துரையாடல் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பயிற்சி நிலையத்தில் நடைபெறும் எனவும் மேலதிக தொடர்புகளுக்கு 0772247902 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-3-37)

## கஞ்சாவுடன் கைதாகிய அறுவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

நெடுந்தீவு கடற்பரப்பில் 102 கிலோகிராம் கஞ்சாவுடன் கைதாகிய ஆறு பேருக்கும் ஊர்காவற்றுறை நீதிமன்றம் விளக்கமறியலை நீடித்துள்ளது.

கடந்த சித்திரை மாதம் 27 ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் 102 கிலோகிராம் கஞ்சா வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவரும் 2 யாழ்ப்பாண மீனவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட 4 மீனவர்கள் தமிழ்நாட்டின் வேதாரணியம், இராமேஸ்வரத்தைச் சேர்ந்ததோடு மற்றைய இருவரும் நெடுந்தீவு மற்றும் புங்குடுதீவினைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் அனைவரும் ஊர்காவற்றுறை நீதவான் ஆர்.எஸ்.எம்.மகேந்திரராஜா முன்னிலையில் அன்றைய தினமே பொலிஸாரினால் முற்படுத்தப்பட்டிருந்தனர். வழக்கை விசாரணை செய்த நீதவான் குறித்த ஆறு மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரணை செய்த நீதவான் சந்தேக நபர்களுக்கு விதிக்கப்பட்ட விளக்கமறியலை நீடித்துள்ளார்.

மேலும் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருள் இரசாயன பகுப்பாய்வுக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இக் கஞ்சா கேரளா கஞ்சாவை விட மாறுபட்டதோடு அதிக பெறுமதி வாய்ந்தது எனவும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட அத்தியட்சகர் எம்.எம்.ஜெப்றி தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இவ்வருடத்தில் கைப்பற்றப்பட்ட பெறுமதி மிக்க கஞ்சா இது எனவும் அவர் தெரிவித்தார். (செ-4)

## கும்பாபிஷேக விழா

(கரணவாய்)

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திர காளி அம்பாள் தேவஸ்தான கும்பாபிஷேக விழா (மணவாளக் கோலம்) எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணியளவில் சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

மாலை 7 மணிக்கு பூசைகள் நடைபெற்று மின்சார தீபங்களால் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் விநாயகர் சகிதம் பத்திர காளி அம்பாள் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (செ-3-60)

* * *

தெல்லிப்பழை அம்பனை அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பதிகுஷ்டா அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேக பெருவிழா நாளை புதன்கிழமை முற்பகல் 11.24 மணி முதல் 11.48 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

இக் கும்பாபிஷேக பெருவிழாவன்று **கும்பாபிஷேக மகத்துவம்** எனும் தலைப்பில் மகாவித்துவான் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (செ-2)

* * *

(யாழ்ப்பாணம்)

திருவண்ணை நகர் இந்துக் கல்லூரி அருள்மிகு சிவஞான வைரவர் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வு நாளை புதன்கிழமை முதல் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத்திற்கு முதல் நாளான இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை எண்ணெய் சாத்தும் நிகழ்வும் நாளை புதன்கிழமை காலை 7.50 மணிக்கு கும்பாபிஷேகமும் நடைபெறும் என இந்து இளைஞர் கழகமும், கல்லூரிச் சமூகமும் அறிவித்துள்ளன. (அ)




## பாபா பிரதிஷ்டையும் கும்பாபிஷேகமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சீரடி சாயி மந்திரில் துவாரகமாயி பாபா விக்கிரக பிரதிஷ்டையும் மஹா கும்பாபிஷேகமும் நடைபெறவுள்ளன.

இதன்படி பிரதிஷ்டை நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை இரவு 10.22 மணி தொடக்கம் 11.52 மணிவரை நடைபெறவுள்ளது. நாளை புதன்கிழமை காலை 6 மணி தொடக்கம் 10.30 மணி வரை பக்தர்கள் பாற்காப்பு சாத்துதலும் முற்பகல் 11 மணிக்கு கும்பாபிஷேகமும் இடம் பெறவுள்ளவுள்ளன.

அத்துடன் தொடர்ந்து பன்னிரண்டு நாட்கள் மாலை 4 மணிக்கு பாபாவிற்கு பாலாபிஷேகம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வரி செலுத்துநர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

நிதியமைச்சின் அறிவுறுத்தலின் கீழ் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தினால் வரி செலுத்துநர்களுக்கான விழிப்பூட்டல் கருத்தரங்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சுன்னாகம் கதிரமலை சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பா.சிவாஜி அறிவித்துள்ளார்.

இதற்கமைய சுன்னாகம், மல்லாகம், மருதனார்மடம், தெல்லிப்பழை, உடுவில், அளவெட்டி பிரதேசங்களிலுள்ள வர்த்தகர்கள், வரி செலுத்துவோர், கணக்காளர், வரி செலுத்த தம்மை பதிவு செய்ய விரும்புபவர்கள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் இக்கருத்தரங்கில் பங்குபற்றமுடியும்.

இக்கருத்தரங்கில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் பிரதான வரிகளான வருமான வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, பெறுமதிசேர் வரி, முத்திரை வரி போன்றவற்றுக்குத் தெளிவான விளக்கங்கள் கொடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

## சங்கானை பகுதியில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் மக்களுக்கான தேசிய ஆள் அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கான நடமாடும் சேவை ஒன்று எதிர்வரும் ஜூன் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை சங்கானைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந் நடமாடும் சேவையில் நிறம் மாறிய அல்லது தரவுகள் அழிந்து போன அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்கும் காணாமல் போன அடையாள அட்டைக்குப் பதிலாக பிரதி அடையாள அட்டை என்பவற்றை பெறவும் முடியும்.

மற்றும் புதிய அடையாள அட்டைக்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கை என்பன நடைபெறவுள்ளன.

தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு ஐந்து வர்ணப் புகைப்படங்கள், பிறப்புச் சான்றிதழின் முதற் பிரதியுடன் நகல் பிரதி மற்றும் 15 ரூபா பெறுமதியான முத்திரைகள் கொண்டு வருதல் வேண்டும்.

பிறப்புச் சான்றிதழ் அற்றவர்கள் பாடசாலை விடுகைப் பத்திரம், திருமுழுக்குச் சான்றுதல், விண்ணப்பதாரின் (ஆண், பெண்) பிறந்த திகதி குறிப்பிடப்பட்டுள்ள பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ், இலங்கைக் குடியுரிமைச் சான்றிதழ் (பிறந்த திகதி குறிப்பிடப்பட்டிருப்பின்), வெளிநாட்டுப் பயணக் கடவுச்சீட்டு, பிறப்பு நிகழ்ந்தவுடன் கணிக்கப்பட்ட ஜாதகக் குறிப்பேடு ஆகிய ஆவணங்களில் ஒன்று அல்லது அதற்கு மேல் கொண்டு வருதல் வேண்டும்.

மேலும் தகவல்கள் தேவைப்படுவோர் நடமாடும் சேவை இடம்பெறும் திகதிக்கு முன்னதாக தவறாது உங்கள் பகுதி கிராம அலுவலரை சந்தித்து ஆலோசனை பெற்றுக் கொள்ளலாம்.

அல்லது 0758086565 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-3-15)

## கலந்துரையாடல்

யாழ்.மாவட்ட பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரியகுளத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பகுதிநேர ஆசிரியர் ஒன்றியம் கேட்டுள்ளது. (செ)

## பொதுநிலையினரின் வருடாந்த மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினர் கழகத்தால் முன்னெடுக்கப்படும் பொதுநிலையினருக்கான வருடாந்த மாநாடு எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு புனித பத்திரிசியார் கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

**நம்பிக்கையில் வேரூன்றி, வாழ்வில் கனி கொடுப்போம்** என்னும் கருப் பொருளில் இடம்பெறும் இம் மாநாட்டின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்ளவுள்ளார்.

இதன்போது பொதுநிலையினர் தினப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இம் மாநாட்டில் ஒவ்வொரு பங்குத் திருச்சபையில் இருந்தும் பிரதிநிதிகள் பங்குபற்றவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விமாணி தெரிவுக்கான போட்டிப் பரீட்சை

### வழிகாட்டல் செயலமர்வு - 2013

இம்முறை மூன்று வருட ஆசிரிய சேவைக்காலம் பார்க்காத நிலையில் விரைவில் நடைபெறவுள்ள தேசிய கல்வி நிறுவக "கல்விமாணி பாடநெறி தெரிவுக்கான போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு" எதிர்வரும் (05.06.2013) ஞாயிற்றுக்கிழமை கர்லை 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது. பங்குபற்றுவோர் பின்வரும் தொலைபேசி என்னுடன் தொடர்புகொண்டு முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

தொ.பே: 0779360607

பா.தனபாலன்- பணிப்பாளர்,
ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனம்,
528, பலாலி வீதி, திருநெல்வேலி.

(2854)



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540
E-mail : valampurijaffna@gmail.com


## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்: 11
ஆதன இலக்கம்: 50/73
நவாலி வீதி.

வட்டாரம் 11 நவாலி வீதியைச் சேர்ந்த ஆதன இலக்கம் 50/73 இல் அமைந் துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற் குப் பகுதி, மானிப்பாய் கோவில் பற்று நவாலி இறை இடாப்பில் என்னும் பெய ருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 3 குளி 4.50 கொண்ட ஆதனம்) இவ் ஆதனமா னது யாழ்ப்பாணம் நவாலி வடக்கைச் சேர்ந்த மாணிக்கம் ஜெயக்கொடி என்பவர்களால் அறுதி உறுதி மூலம் ஞானசேகரன் பெண் ஜெயக்குமாரி ஆகிய இவர்களுக்கு குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாக ராசா முகதாவில் நிறைவேறிய 11119 ஆம் இலக்க 2009.07.30 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப் படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய் துள் ளார்கள். இவ் இடாப்பில் நிலப்பரப்பு 3குளி 4.5 கொண்ட இவ் வாதனத்தை உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத் தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் ஞான்சேகரன் பெண் ஜெயக்குமாரி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதீனத் தின் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
வலி.தென்மேற்கு பிரதேச சபை. மானிப்பாய். (2855)


## இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1988 இந்து(V)<br>நட்சத்திரம்:அவிட்டம் 4<br>உயரம்: 5'8"<br>கி.பா : 49.25<br>தககைமை/தொழில்:A/L பொலிஸ் உத்தியோகத்தர்<br>தொ.இ:B1865 | பிறப்பு: 1985 இந்து (V)<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5' 1"<br>கி.பா- 35<br>தகைமை/தொழில்: BCS, முகாமைத்துவ உதவியாளர்<br>தொ.இ:G1867 |
| பிறப்பு: 1982 றோ.க (V)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 2<br>உயரம்: 5' 8"<br>கி.பா:21, 1 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L,Cvil விரிவுரையாளர்<br>தொ.இ:B1868 | பிறப்பு: 1988 இந்து (V)<br>நட்சத்திரம்:-மூலம் 2<br>உயரம்: 5'6" கி.பா- 35<br>தகைமை/தொழில்: A /L , நூலகவிஞ்ஞானம்<br>தொ.இ:G1870 |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம்: திருவோணம் 1<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்: MBCS, MSC, Software eng.<br>தொ.இ:B1869 | பிறப்பு: 1975 இந்து (V)<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>உயரம்: 5'3"<br>கி.பா : 06 8 இல் செவ்<br>தகைமை/தொழில்: BBA,MCA கற்பித்தல் தனியார் நிறுவனம் சைவபோசனம்<br>தொ.இ:G1873 |
| பிறப்பு: 1988 RC (V)<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்: 5' 9"<br>கி.பா: --<br>தகைமை/தொழில்:A/L, தனியார்<br>தொ.இ:B1871 | பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>உயரம்: 5' 4"<br>கி.பா:36, 8 இல் செவ்<br>தகைமை/தொழில்: Engineer தனியார்<br>தொ.இ:G1874 |

சகல தொடர்புகளுக்கும்:-
## கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி



## தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்
☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

(C-3199)

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER



## union assurance வேலைவாய்ப்பு

இலங்கையின் முன்னணி வகிக்கும் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாகவும்25வருடங்களைபூர்த்திசெய்துள்ளதுமானயூனியன்அசூரன்ஸ் கம்பனியின் சுன்னாகம் பிராந்திய கிளைக்கான பதவி வெற்றிடங்கள்

☆ நிதி ஆலோசகர்
☆ நிதி முகாமையாளர்
☆ சிரேஷ்ட நிதி முகாமையாளர்

- மேற்படி பதவிக்கான Basic Allowance 12500/= தொடக்கம் 35000/= உடன் வரையறுக்கப்படாத ஊதியம்.
- Brilliant Starter Allowance
- Laptop வசதி
- மோட்டார் வாகனக் கடன் வசதி
- வீட்டுக் கடன் வசதி
- இலவச வெளிநாட்டு சுற்றுலா வசதி

(சி-3425)

**மேற்படி பதவிக்கான தகைமைகள்**

- க.பொ.த. சாதாரண தரத்தில் தமிழ், கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
- சந்தைப்படுத்தல் துறையில் முன்அனுபவம்.(கட்டாயமல்ல)
- மேற்படி தகைமையுடைய இளைஞர், யுவதிகள்
- அரச, தனியார் துறைகளில் இருந்து ஓய்வுபெற்ற ஊழியர்கள்
- பகுதி நேரமாக வேலை செய்ய விரும்புபவர்கள்.

யாவரும் நேர்முகத் தேர்விற்கு தோற்ற முடியும்.

காலம் : 29.05.2013 புதன்கிழமை
நேரம்: முற்பகல் 9.30 மணி
இடம்: யூனியன் அசூரன்ஸ் PLC
இல. 160, 1/6 K.K.S வீதி, சுன்னாகம் (சம்பத் வங்கிக்கு மேல்)
தொடர்புகட்கு: கு.முல்லைக்குமரன் 0772277383
ஜெ.ஜெகதீஸ்வரன் : 0773538524





வண்ணை திருவருள்மிகு
## ஸ்ரீ வீரமாகாளியம்பாள் ஆலய
### வருடாந்த கொடியேற்ற
### பெருந்திருவிழா - 30.05.2013

நாளை மறுதினம் (30.05.2013) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அகில இலங்கை இந்திய புகழ்பூத்த நாதஸ்வர தவில் வித்துவான்களின் இசைமாரி முழக்கத்துடன் கொடியேற்றப் பெருந்திருவிழா மிகச் சிறப்பாக இடம்பெறவுள்ளது. அம்பிகை அடியவர்கள் அனைவரும் அலை அலையாக வருகை தந்து அம்பிகையின் கொடியேற்ற வைபவத்திலும் நண்பகல் நடைபெறும் மகேஸ்வர பூசையிலும் (அன்னதானத்திலும்) கலந்து சிறப்பித்து அம்பிகையின் அருட்கடாட்சத்தினைப் பெற வாரீர்! வாரீர்!!

(சி-3437) இங்ஙனம்: கொடியேற்றப் பெருந்திருவிழா உபயகாரர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகள் இன்று இருந்திருந்தால் கெடுபிடிகளுக்கு வாய்ப்பே இல்லை!

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)



விடுதலைப் புலிகளைப் பல நாடுகள் ஒன்று சேர்ந்தே அழிந்திருந்தன. புலிகள் இன்று இருந்திருந்தால் வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் பல்வேறு கெடுபிடிகள் ஏற்படுவதற்கு வாய்ப்பே இருந்திருக்காது என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

ஒன்றிணைந்த நாட்டுக்குள் இறைமை, சுயநிர்ணய உரிமை, பாதுகாப்பு ஆகியவற்றுடன் கூடிய ஒரு தீர்வையே நாம் வேண்டி நிற்கிறோம். அதற்கு மேல் எதையும் கேட்கவில்லை. எமது கோரிக்கை நியாயமானது, நீதியானது என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டு அங்கீகரித்துள்ளது.

எமக்கான தீர்வு கிடைக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

மேலும் எமது கோரிக்கைகளையும் அபிலாஷைகளையும் சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

சிங்கள மக்கள் எம்மை நேசிக்கின்றனர். எங்களுக்கு தீர்வைத்தர தயாராக உள்ளனர். ஆனால் அரசியல் தலைவர்கள்தான் தமது சுயநலனுக்காவும் தமது பதவிகளுக்காகவும் எமது உரிமைகளைத் தர மறுக்கின்றனர்.

விடுதலைப் புலிகளை பல நாடுகள் ஒன்று சேர்ந்தே அழிந்திருந்தன.

புலிகள் இன்று இருந்திருந்தால் வடக்கு கிழக்கில் இடம்பெற்று வரும் பல்வேறு கெடுபிடிகள் ஏற்படுவதற்கு வாய்பிருந்திருக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (செ-2)

# மாடுகளை வதை செய்வதை தடுத்து நிறுத்துவது கடினம்

## சவாலான விடயம் என்கிறார் அமைச்சர் ஜோன்

(கொழும்பு)

இலங்கையில் மாடுகளை வதை செய்வதைத் தடுக்க முடியாது என பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

மாடுகளை இறைச்சிக்காக வதை செய்வதைத் தடுப்பது தொடர்பில் சட்டங்கள் இயற்றுவது நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிப்பட்ட ரீதியில் மாடுகள் வதை செய்யப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது .

இப்படி கொடூரமான முறையில் மாடுகள் வதை செய்யப்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். சிலர் மிகவும் மோசமான முறையில் மாடுகளை லொறிகளில் ஏற்றிச் சென்று கொடூரமான முறையில் வதை செய்கின்றனர்.

இதனை நான் மட்டுமன்றி வேறு எவரும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை .

மாடுகள் வதை செய்யப்படுவதைத் தடை செய்தால் மாட்டிறைச்சியை உண்போருக்கு நாம் பதிலளிக்க தயாராக இருக்க வேண்டும் . இது நடைமுறையில் மிகவும் சவாலான விடயம்.



இதேவேளை கட்டாய மத மாற்றங்களை விடவும் பரிசுப் பொருட்களுக்காக மத மாறும் செயற்பாடுகள் இப்பொழுது அதிகரித்துள்ளன. இவ்வாறு மதம் மாறும் செயற்பாடுகளில் பௌத்தர்கள் ஈடுபடக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (செ-2)



கைதடி முதியோர் இல்லத்தில் புதிதாக அமைக்கப்பட்ட விடுதியின் திறப்புவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. வடமாகாண சபை நிதியில் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, அவரது பாரியார் மற்றும் முதியோர்கள் இணைந்து நாடாவெட்டி திறந்து வைப்பதையும் தொடர்ந்து வடமாகாண சிறுவர் பராமரிப்பு நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்ட ஆளுநர் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கி மகிழ்வதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## ஒன்றுகூடல் செயலமர்வு

(பூந்தோட்டம்)

வடமாகாண பாடசாலைகளில் ஆலோசனை வழி காட்டலில் ஈடுபடும் உளவளதுணையாளர்களுக்கான ஒன்றுகூடல் செயலமர்வு நாளை மறுதினம் உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உளநல மருத்துவ நிபுணர் வைத்திய கலாநிதி சிவயோகம் தலைமையில் நடைபெறும் இவ் ஒன்றுகூடல் நிகழ்வில் வடமாகாண பாடசாலைகளில் கடமையாற்றும் உளவளதுணையாளர்களை கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வி பணிப்பாளர் வ.செல்வராஜா தெரிவித்துள்ளார். (செ-266)

# சிறுநீரக நோய் சிகிச்சைகளுக்காக வருடாந்தம் 400 கோடி ரூபா

## சுகாதார அமைச்சு ஒதுக்கீடு செய்கிறது

சிறுநீரக நோய் சிகிச்சைக்காக அரசாங்கம் வருடாந்தம் 400 கோடி ரூபாவைச் செலவிடுவதாகவும் தொடர்ந்தும் சிறுநீரக நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளைத் தட்டுப்பாடின்றி அரசு வழங்கும் எனவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவை வைத்திய சாலையிலுள்ள சிறுநீரக நோய் சிகிச்சை மத்திய நிலையத்திற்கு 140 மில்லியன் பெறுமதியான இரு டயலசிஸ் இயந்திரங்களைக் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வடமத்திய மாகாணத்திலும் குருநாகல் -பொலனறுவை மாவட்டத்திலும் உள்ள சில பகுதிகளில் மட்டுமுள்ளதாக அறிவிக்கப்பட்ட சிறுநீரக நோய் தற்பொழுது நாடு பூராகவும் பரவி உள்ளதாக கூறுகின்றனர். இந்நிலையில் நாடு பூராகவும் சிறுநீரக நோய் சிகிச்சை நிலையங்கள் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

சிறுநீரக நோய் அனுராதபுரம்-பொலனறுவை-குருநாகல் மற்றும் பதுளை மாவட்டங்களின் சில பகுதிகளில் இருப்பதாக அறிவிக்கப் பட்டது. தற்பொழுது நாடு பூராகவுமிருந்து சிறுநீரக நோய் குறித்து அறிவிக்கப்படுகிறது.

புதிதாக அம்பாந்தோட்டை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் இருந்து புற்று நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். சிறுநீரக நோய்க்கு மாத்திரமின்றி ஏனைய தொற்றா நோய்களான உயர் இரத்த அழுத்தம் -இருதய நோய் ,நீரிழிவு நோய் என்பவற்றுக்கு சிகிச்சை அளிக்கவும் அரசாங்கம் சமமான செலவு செய்து சிறுநீரக நோய் பரவுவதைத் தடுப்பது குறித்து சுகாதார அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளதோடு இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க தேவையான வசதிகளையும் அளித்து வருகிறது என்றும் அமைச்சர் கூறினார். (செ-2)

## எரிபொருள் சுத்திகரிப்பு பணிகள் மீண்டும் விரைவில் ஆரம்பம்

சபுஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின்பணிகளை எதிர்வரும் இரு தினங்களில் ஆரம்பிப்பதற்கு உத்தேசித்துள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம்தெரிவித்துள்ளது.

சுத்திகரிப்புக்கான மசகு எண்ணெய் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தமை காரணமாக சபுஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையை பணிகள் முடங்கியுள்ளன.

இந்நிலையில் கடந்த 24 ஆம் திகதி மசகு எண்ணெய் ஏற்றிய கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

மசகு எண்ணெய் இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக கடந்த 15 ஆம் திகதி சபுஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-2)

# நடைபாதை விற்பனையிலிருந்த வர்த்தக பொருட்கள் அகற்றப்பட்டன

## மன்னார் நகரசபை நடவடிக்கை

மன்னார் பஸார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கென நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளை மீறி நடைபாதையில் விற்பனை செய்த வர்த்தகநிலையங்களின்பொருட்களை மன்னார் நகரசபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் அகற்றியுள்ளனர்.

அத்துமீறி நடைபாதையில் வர்த்தகப் பொருட்களை வைத்து விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு மன்னார் நகரசபை தொடர்ந்து அறிவுறுத்தல்களை விடுத்து வந்துள்ளது.

இந்த அறிவுறுத்தல்களையும் மீறி தங்களது வர்த்தகப் பொருட்களை நடைபாதையில்வைத்து விற்பனைசெய்து வந்த 10 இற்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களின் பொருட்களே நேற்று முன்தினம் அகற்றப்பட்டுள்ளதாக மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

இந்த வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக உள்ள நடைபாதையுடன் கூடிய கழிவுநீர் வாய்க்கால் மீது தங்களது வர்த்தக நிலையங்களை விஸ்தரித்து பொருட்களை வைத்து விற்பனையில் இந்த வர்த்தகர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இதனால் பல மாதங்களாக குறித்த பகுதியில் உள்ள நடைபாதையின் அருகேயுள்ள கழிவுநீர் வாய்க்கால் துப்புரவு செய்ய முடியாத நிலையில் காணப்பட்டது.

மேலும் டெங்கு நுளம்பு பெருகுவதற்கான வாய்ப்பும் ஏற்பட்டதாக அவர் கூறினார்.

இந்த நிலையிலேயே மன்னார் நகரசபையின் சுத்திகரிப்பு பணியாளர்கள் குறித்த வர்த்தக நிலையப் பொருட்களை அகற்றியதுடன் குறித்த நடைபாதையுடன் கழிவுநீர் வாய்க்காலையும் துப்புரவு செய்ததாகவும் அவர் கூறினார்.

இனிவரும் நாட்களில் பாதசாரிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடைபாதையை ஆக்கிரமித்து வியாபாரம் மேற்கொள்ளும் வர்த்தக நிலையங்களின் பொருட்கள் பறிமுதல் செய்யப்படும் என்பதோடு குறித்த வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும் எனவும் மன்னார் நகர சபையின் தலைவர் எச்சரித்துள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகில்களின் எழுச்சியும் வீழ்ச்சியும்

**அறிமுகம்**

மேகமூட்டம் உள்ள நாட்களில் சற்றுக் கவனத்துடன் வானத்தைப் பாருங்கள். பஞ்சுக் கூட்டம் போல் தோன்றுபவை கியூமுலஸ் (Cumulus) முகில்களாகும். இவை பொதுவாக ஒரு கிலோமீற்றரிலும் கூடிய உயரங்களில் தென்படும். மெல்லிய படையாகத் தெரிபவை ஸ்றாரஸ் (Stratus) வகை முகில்களாகும். வானம் தெளிவாக உள்ள நாட்களில் மெல்லிய நார்கள் போல மிக உயரத்தில் தெரிபவை சிறஸ் (Cirrus) வகையைச் சேர்ந்தவை.

இவை எல்லாம் பொதுவாக பூமியிலிருந்து ஒரு கிலோமீற்றரிலும் சற்றுக்குறைவான உயரங்களிலிருந்து 18 கிலோமீற்றர் உயரங்கள் வரை காணப்படும். முகில்களை இன்னும் பல கூறுகளாகவும் வகைப்படுத்தலாம்.

இந்தக் கட்டுரையில் இவற்றை விளக்கப் போதிய இடமில்லை. முகில்கள் எவ்வாறு தோன்று கின்றன என்பது பற்றியும் அவை

மிகச்சிறிய நீர்த்துணிக்கை என்றால் அது எந்தளவு பருமன்? இத் துணிக்கையை ஒரு கோளமாகக் கருதினால் அதன் ஆரை ஒரு மில்லி மீற்றரின் நூறில் ஒரு பங்கிலும் சிறியதாகும்.

இது மிகச்சிறிதுதானே. ஆகவே விழாது என்கின்றீர்களா? அதுதான் இல்லை. ஒரு தனி நீர் மூலக்கூறின் பருமனை வைத்துப் பார்த்தால் இந்தத் துணிக்கையில் கோடி கோடி ($10^{14}$) நீர்மூலக் கூறுகள் இருக்கும். காற்று (அதாவது வளி) மண்டலம் பிரதானமாக நைதரசன், ஒட்சிசன் மூலக் கூறுகளால் ஆனது. நீர் மூலக்கூறொன்று நைதரசன், ஒட்சிசன் மூலக்கூறுகளிலும் சற்றுத்தான் நிறை குறைந்தது. அப்படியிருக்கையில் கோடி கோடி நீர்மூலக்கூறுகளாலான நீர்த்துணிக்கைகள் இந்தக் காற்று மண்டலத்தில் விழாமல் இருப்பது அதிசயம்தானே? இப்படிப் பற்பல கோடி துணிக்கைகள் அருகருகே இருப்பதுதான் முகிலாகும்.

கேள்விகளைத் தொடர்ந்து எழுப்பாது, சுமார் பத்து இலட்சம்(ஒரு மில்லியன்) எண்ணிக்கைக்கு மேலானவை சேரும்போது தான் ஒரு சொட்டு மழைத்துளி தோன்றுகின்றது. இது பற்றிப் பின்பு பார்ப்போம்.

சமுத்திரங்கள், நீர்நிலைகள் அத்துடன் தாவரங்கள் என்பவற்றிலிருந்து ஆவியாகும் நீரானது தனித்தனி மூலக்கூறுகளாக (நைதரசன், ஒட்சிசன் போன்று) வளிமண்டலத்தில் பரவியிருக்கிறது. இது சிறுதுணிக்கைகளாக ஒன்று சேர இரண்டு விடயங்கள் நடைபெறவேண்டும்.

முதலாவதாக ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலையில் நீராவி ஒடுங்குவதற்கு ஒரு குறித்த அளவுக்கு மேல் நீராவி அந்த வளிமண்டலப் பகுதியில் இருக்கவேண்டும், இதனை நாங்கள் நிரம்பல் நிலை என அழைப்போம்.


தேவையானளவு நீராவி மூலக்கூறுகள் இருந்தாலும் அவை ஒடுங்குவதற்கு அல்லது ஒடுங்குவதை ஊக்குவிப்பதற்கு ஏதாவது ஒரு மிகச் சிறிய துணிக்கை தேவை. காற்றிலுள்ள தூசு துணிக்கைகளே இதனைச்



த்தில் செல்வதை தொலைக்காட்சியில் பார்த்திருப்பீர்கள். இந்தப் பலூனின் கீழ்ப்பகுதி எரிக்கப்படும் நெருப்பினால் உண்டாகும் அடர்த்தி குறைந்த சூடான காற்று பலூனை நிரப்புவதனாலேயே அது மேலெழும்புகிறது.

வெப்பக்காற்று பலூன்

இதைப்போன்றே சூரிய சக்தியினால் சூடான காற்றும் நீராவியும் மேலெழும்புகி



கியூ முலஸ் (Cumulus)



ஸ்றாரஸ் (St



சிறஸ் (Cirrus)

வானத்தில் எவ்வாறு விழாமல் நிற்கின்றன (அல்லது ஓடுகின்றன) என்பது பற்றியும் இறுதியாக அவை எவ்வாறு மழை வீழ்ச்சியாக பூமியை நோக்கி வருகின்றன என்பது பற்றியும் மட்டும் இங்கு ஆராய் வோம்.

சூரியனின் வெப்பத்தால் சமுத்திரங்களிலும் வேறு நீர் நிலைகளிலும் உள்ள நீர் ஆவியாகி மேலே செல்கின்றது என்றும் இந்த நீராவியே முகில்களாக மாறி வானத்தில் அசைகின்றது என்றும், இவை குளிர்ச்சியடையும் போது மழையாக கீழே விழுகின்றது என்றும் படித்திருப்பீர்கள்.

ஆனால் நீராவி ஏன் மேலே செல்கின்றது? மேலே சென்ற நீராவி ஏன் ஓரளவு உயரத்தில் மேகமாகத் தரி த்து விடுகின்றது. இந்து மேகம் என்பது உண்மையில் என்ன? இந்த மேகம் அல்லது முகில் ஏன் கீழே விழுவதில்லை? ஏன் சில சமயங்களில் மட்டும் நீராக அல்லது பனிச் சதில் (Snow) களாக விழுகின்றன? இந்த வினாக்களை நீங்கள் கேட்டதுண்டா? நல்லது முதலில் மேகம் அல்லது முகில் என்றால் என்ன? என்ற கேள்விக்குரிய விடையைப் பார்ப்போம்.முதலில் முகில் என்பது நீராவியல்ல என் பதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீராவி கண்ணுக்குத் தெரியாது. முகில் என்பது மிகச்சிறிய நீர்த்துணிக்கைகளாலோ அல்லது மிகச்சிறிய பனிக்கட்டித் துணிக்கைகளாலோ இரண்டினதும் கலவையாலோ ஆக்கப்பட்டதொன்றாகும்.

முகில்கள் எவ்வாறு தோன்றுகின்றன என் பதை முதலில் பார்ப்போம்.

**முகில்களின் தோற்றம்**

முகில்களின் தோற்றம் பற்றிப் பொதுவாக எங்களுக்குத் தெரிந்த விடயங்கள் உண்மையானவைதான். தெரியாத விடயங்களும் சில உண்டு.

முதலாவதாக ஏற்கனவே கூறியதுபோல முகில்கள் நீராவியல்ல. நீராவி என்பது வாயு நிலையிலுள்ள நீர்மூலக்கூறாகும். காற்றிலுள்ள நைதரசன், ஒட்சிசன் போன்ற மூலக் கூறுகள் எவ்வாறு கண்ணுக்குத் தெரிவதில்லையோ அதேபோல ஆவிநிலையிலுள்ள நீர்மூலக் கூறுகளும் கண்ணுக்குத் தெரியாதவை. எம்மைச் சுற்றியுள்ள காற்றில் எப்போதும் நீராவி உள்ளது. (பாலைவனங்கள் தவிர).எங்கள் கண்ணுக்குத் தெரிவது பல கோடி நீர்மூலக்கூறுகள் சேர்ந்து உருவாக்கும் மிகச்சிறிய துணிக்கைகளே!

அடுப்பில் நீரைச்சூடாக்கும் போது நீராவி கண்ணுக்குத் தெரிகின்றதே என்று கூறுகின்றீர்களா? அது நீராவி அல்ல. சூடான நீரிலிருந்து ஆவியாகும் நீர்மூலக்கூறுகள் குளிராக காற்றை அடையும்போது ஒடுங்கித் தோன்றும் மிகச்சிறிய நீர்த்துணிக்கைகளையே நீராவி என நாம் நினைக்கின்றோம். ஒரு விதத்தில் நீரைச் சூடாக்கும்போது எமது கண்ணுக்குத் தெரிவது முகில்தான்.

இந்த மிகச்சிறிய நீர்த்துணிக்கைகளில் செய்கின்றன. சற்றேனும் தூசு இல்லாத இடத்தில் மிக அதிக அளவில் இருந்தால் தவிர நீராவி மூலக்கூறுகள் நீராக ஒடுங்கமாட்டா.

நல்லவேளையாக மிக சுத்தமானது என்று நாங்கள் கருதும் காற்றில்கூட ஒரு கன மீற்றர் சுமார் ஆயிரம் தூசு துணிக்கைகள் இருக்கின்றன. அறை ஒன்றினுள் ஒரு சிறு துவாரத்தினூடாக சூரியஒளி உள்வரும்போது அல்லது ரோச்லைட் பயன்படுத்தும்போது இதை நீங்கள் உணர்வீர்கள். இந்த தூசு. துணிக்கைகள் ஏன் விழவில்லை என்று நீங்கள் யோசித்தது உண்டா?

தூசுத் துணிக்கைகளில் இருந்து, வெப்பநிலையிலும் குறைவாக இருந்து காற்றில் போதியளவு நீராவி மூலக்கூறுகளும் இருந்தால் பூமி க்கு அண்மையிலேயே அவை ஒடுங்கி சிறு நீர்த்துணிக்கைகளாக மாறும். இதுவே குளிர்காலத்தில் நாம் காணும் பனிப்புகார் (Mist, fog) ஆகும்.முகில் தோன்றுவது இதிலும் கொஞ்சம் சிக்கலான விடயமாகும். சூரியனின் வெப்பசக்தியினால் ஆவி யாகும் நீர் மூலக்கூறுகளும் பூமிக்கு அருகேயுள்ள காற்றின் மூலக்கூறுகளும் அவை சூடாக இருப்பதனால் வேகமாக அசைகின்றன. இதனால் கூடியளவு இடத்தைப் பிடிக்கின்றன. இதனால் அவற்றின் அடர்த்திகுறைய அவை மேல் எழும்புகின்றன.

மிகப்பிரமாண்டமான வெப்பக்காற்று பலூன் (hot air balloon) இல் மனிதர்கள் வான

ன்றன. மேலே வெப்பநிலை குறைவென்பதால் இவை குளிர்வடையும்.காற்றின் மூலக் கூறுகளிலும் பார்க்க நீராவி மூலக்கூறுகள் இலகுவில் ஒடுங்கக்கூடியவை (அறை வெப்ப நிலையில் நீர் திரவமாகத்தானே காணப் படுகின்றது.!) இதனால் மேலெழுந்த இந்த நீராவி மூலக்கூறுகள் போதியளவில் இருந்து தூசு துணிக்கைகளும் அங்கு காணப்பட்டால் குளிர்வடையும் போது சிறுசிறு நீர்த் துணிக்கைகளாக அவை ஒடுங்குகின்றன. இத்தகைய


கலாநிதி நா.சிவபாலன்
இரசாயனவியல் சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


பற்பல கோடி நீர்த்துணிக்கைகளே மேகமாக எங்கள் கண்களுக்குத் தென்படுகின்றன.

**முகில்கள் ஏன் விழுவதில்லை?**

1589ஆம்ஆண்டில் கலிலியோ கலிலி செய்து காட்டியதாகக் கூறப்படும் ஒரு பரிசோதனை பற்றி அறிந்திருப்பீர்கள்.

சுமார் 183 அடி உயரமான இத்தாலியிலுள்ள பீசா கோபுரத்திலிருந்து (Tower of pisa) வெவ்வேறு நிறையுள்ள இரண்டு பொருட்களை விழவிட்ட போது இரண்டும் ஒரே சமயத்திலேயே பூமியை அடைந்தன.

(தொடரும்)

# பெரியதம்பனை வீதி திருத்தப்படவில்லை

## மக்கள் அவதி

பெரியதம்பனை ஊடான பிரமாணலங்குளம் -மடு பிரதான வீதி நீண்டநாட்களாக திருத்தப்படாமையால் மக்கள் போக்குவரத்து செய்வதில் இடர்பாடுகளை எதிர் நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

பிரமாணலங்குளத்தில் இருந்து மடுவுக்கு செல்லும் 20 கிலோமீற்றர் நீளமான இப்பிரதான வீதியை மடு, பாலம்பிட்டி, தட்சணா மருதமடு, முள்ளிக்குளம், கிரிசுட்டான், சின்ன பண்டிவிரிச்சான், பெரிய பண்டிவிரிச்சான், பெரியதம்பனை ஆகிய கிராமங்களை சேர்ந்த மக்கள் போக்குவரத்து செய்ய பயன்படுத்துகின்றனர்.

இப்பகுதி மக்கள் மீள்குடியேறி மூன்று ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் இன்னும் இவ்வீதி புனரமைக்கப்படாமையினால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ளும் இம்மக்கள் தமது உற்ப த்தி பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

இதேவேளை பாடசாலைக்கு செல்லும் மாணவர்களும் பெரும் சிரமங்கள் எதிர்கொள்வதுடன்மாரி காலத்தில் சொல்லொணா துன்பங்களுக்கு முகம் கொடுத்துவருகின்றனர்.

வைத்தியசாலை வசதிகள் இப்பகுதியில் இன்மையால் நோயாளர்களை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இப்பகுதியில் அமைந்துள்ள மயானத்திற்கு செல்லும் வீதி பல இலட்சம் ரூபா பெறுமதியில் புனரமைக்கப்பட்ட போதிலும் அது கவனிப்பாரற்று காணப்படுவதுடன் இப்பகுதி கிராமங்களில் உள்ள உள்ளக வீதிகளும் செப்பனிப்படவில்லை.

எனவே அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான இவ்வீதியை மிக விரைவில் புனரமைக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள்கோரிக்கை விடுக்கின்றனர். (செ-2-266)

# இலங்கையின் அபிவிருத்தி பணிகளுக்கு நோர்வேயின் ஒத்துழைப்பு அவசியம்

*அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு*

இலங்கையின் அபிவிருத்திப் பணிகளுக்கு நோர்வேயின் ஒத்துழைப்பு அவசியமானது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முனைப்புக்களில் நோர்வே வழங்கிய ஒத்துழைப்பு நன்றி பாராட்டப்பட வேண்டியது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நோர்வே தேசிய தின நிகழ்வில் கலந்து கொண்ட போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மீளமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எழுந்துள்ளதாகவும் உயர்கல்வித் துறையிலும் நோர்வே பல்வேறு உதவிகளை வழங்கி வருவதாகவும் இதன் போது அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (செ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**த**ற்கொலை முடிவுக்கு யாரெல்லாம் வருகிறார்கள்.

+ மனச் சோர்வால் அவதியுறுகிறவர்கள்.

+ மனச்சிதைவினால் பாதிப்பிற்கு உள்ளாகிறவர்கள்.

+ திடீர் உணர்வு எழுச்சிக்கு ஆளாகி தூண்டப்பட்டு முடிவு எடுப்பவர்கள்.

+ தான் ஒரு பிரச்சினையில் சிக்கிக் கொண்டதால் அதற்கு உதவி தேவை. ஆனால் எப்படிக் கேட்டுப் பெறுவது என்று தெரியாததால் தற்கொலை மூலம் சமுதாயத்திற்கு உணர்த்துதல். அதாவது சமுதாயத்துடன் தொடர்பு கொள்ளும் முறை தெரியாமை.



# தற்கொலை முடிவுக்கு ஏன் வருகின்றார்கள்?

+ வாழ்ந்தது போதும் என்று மேதாவித்தனமாக தத்துவார்த்தமாக முடிவு செய்கிறவர்கள்.

+ ஒரு தற்காலிகமான பிரச்சினைக்காக தற்காலிகமான சங்கடத்தில் இருந்து மீளத் தெரிந்தும் தெரியாமலும் நிரந்தரமான முடிவு எடுப்பதென தவறாக கருதுபவர்கள்.

ஆனால் பொதுவாக தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தவர்களைக் கேட்கும் போது அவர்களால் சொல்லப்படும் காரணங்கள்

வீட்டில் பிரச்சினைகள், பாடசாலைகள் அல்லது கல்லூரிகளில் பிரச்சினை, வேலையில் பிரச்சினை. தொழிலில் பிரச்சினை. உறவுகளில் முறிவு, பெற்றோரின் அரவணைப்பு மற்றும் ஆறுதல் இல்லாமை, வறுமை, கடன் சுமை, காதலில் தோல்வி, படிப்பில் தோல்வி, பெற்றோர் வெறுத்து ஒதுக்குகிறார்கள், போட்டியில் தோல்வி, நிம்மதி இல்லை என்ற உணர்வு, அவமானப்படுத்தப்பட்டேன் அல்லது அசிங்கப்படுத்தப்பட்டேன், அவமானம் மற்றும் அசிங்கத்தை ஏற்படுத்த, தண்டனையிலிருந்து தப்பிக்க, பழிவாங்க.

இப்படியாக நூற்றுக்கணக்கான காரணங்கள் சொல்லப்படுகின்றன. இவை அனைத்தையும் ஒரு சில தலைப்புக்களிலே அடைத்து விடலாம்.

உறவில் முறிவு என்பதை கணவன்- மனைவி, பெற்றோர்- பிள்ளை, காதலன்- காதலி, முதலாளி- தொழிலாளி, தலைவன்- தொண்டன் என்ற எல்லா வகையிலும் நோக்கலாம்.

அவமானம் என்பது காதலில் தோல்வி, படிப்பில் தோல்வி, தேவையில்லா தண்டனை, நம்பிக்கை துரோகம் என்ற பல வகையிலும் புரிந்துகொள்ளலாம்.

பொருளாதார நெருக்கடி, கடன்சுமை, இழப்பு, தவறான முடிவு என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இப்படியாக காரணங்களையும் சம்பவங்களுக்குவிளக்கங்களையும் அடுக்கிக்கொண்டே போகலாம். இந்த காரணங்கள் அனைத்துக்கும் தற்கொலைதான் தீர்வா? என்று சிந்தித்துப் பார்த்தால் விபரீதம் புரியும். அறிவீனம் புலப்படும்.

இதையெல்லாம் கருத்தில் கொண்டு தான் ஒன்றும் இல்லாத விடயத்துக்கு இப்படி செய்து கொள்கிறார்கள் என்று அங்கலாய்க்கிறோம். சின்ன விடயத்தை பெரிதுபடுத்துகிறார்களே என்று ஆத்திரப்படுகிறோம். எனவே பிரச்சினைகள் காரணமில்லை. குறிப்பிட்ட பிரச்சினையை விட மிகப் பெரிய பிரச்சினைகளையெல்லாம் இதே நபர்கள் சந்தித்திருப்பார்கள், சமாளித்து இருப்பார்கள்.

நல்ல மனநலத்தோடு இருக்கும் போது நின்று நிதானித்து செயற்பட முடிகிறது. ஆத்திரப்படும் பொழுது உணர்ச்சிகளின் எழுச்சி மிகுதியானது. அறிவு செயற்படாமல் போகும். எனவே தற்காலிகமான- உணர்ச்சி கரமான முடிவுகளே எடுக்கிறார்கள்.

சமீபத்தில் கணவர் திட்டினார் என்றும் கேட்பதைக் கொடுக்கவில்லை என்றும் அதனால் மனைவி தற்கொலை செய்து கொண்டதாகவும் செய்தி வருகிறது.

கணவர் ஏமாற்றிவிட்டார், துரோகம் செய்து விட்டார், அம்மா திட்டிவிட்டார், காதலன் கோபித்துக் கொண்டான் என்றெல்லாம், காரணம் சொல்கிறார்கள். ஏன் தாமதமாக வந்தாய் என்று கேட்டதற்காக தற்கொலைக்கு முயற்சித்த பிள்ளைகள் இருக்கிறார்கள். இவையெல்லாம் உணர்ச்சிக் கொந்தளிப்பால், ஆவேசத்தினால், ஆத்திரத்தினால் ஒரு நொடியில் எடுக்கப்படும் முடிவுகள் ஆகும். அச் சில நிமிடங்கள் மட்டும் நிதானித்து யாரோடாவது கலந்து பேசி சில நிமிடங்களைத் தவிர்த்தாலே நிதானம் வந்துவிடும். உணர்ச்சி கொந்தளிப்பு அடங்கி ஆத்திரம், ஆவேசம் குறைந்து நிதானம் பிறக்கும். அறிவு தன் வேலையைச் செய்யும். முடிவுகள் எல்லோருக்கும் பயனுள்ளதாக இருக்கும்.

மக்கள் அனைவரும் விஞ்ஞானிகள் அல்ல. ஒரு இரசாயனம் என்ன செய்யும். எவ்வளவு பாதுகாப்பானது என்று தெரியாது. ஒரு வேகம் எவ்வளவு அழிவை ஏற்படுத்தும் என்று புரியாது. அசிட் குடிப்பவர்கள், மாத்திரை விழுங்குபவர்கள் ,விஷம் அருந்துவர்கள் கொளுத்திக்கொள்ள முயற்சிப்பவர்கள் என்று தற்கொலைக்கு முயன்று அவை முயற்சியாக மாறி தப்பிப் பிழைத்தவர்கள் அநேகம் பேர். அவர்களிடம் பேசிய போது அத்தருணத்தில் தான் உயிர் விட வேண்டும், சாக வேண்டும் என்று முடிவு செய்ததாகவும் அதன் பிறகு தற்பொழுது அது எவ்வளவு பைத்தியகாரத்தனம் என்று புரிகிறது .தேவையில்லாத செயல், வீணான விபரீதம் என்று வருத்துவதாகவும் அநேகர் கூறியுள்ளனர்.

எனவே, தற்கொலை முடிவு அவ்வளவு தற்காலிகமானது என்று மக்கள் உணர வேண்டும். ஆனால் விபரீதம் நிரந்தரமாகும் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும் .

மனைவி தன்னைத்தானே கொளுத்திக் கொண்டு உயிர் விட முயற்சித்து அவளைக் காப்பாற்ற சென்ற கணவனும் அத்தீயில் விழுந்து இறந்து விட்டான் என்று படிக்கிறோம் . அதேபோல் ஒருவனைக்காப்பாற்ற சென்று பலர் உயிர்விட்ட கதைகள் பல பாத்தி ருக்கிறோம. காப்பாற்றச் சென்று உயிர் விட்ட பலர் நெருங்கிய உறவினர்கள்தான். துணை, பெற்றோர், பிள்ளைகள், சகோ தரர்கள் என்ற அளவில் தான் இருக்கிறது. இதில் இருந்து என்ன தெரிகிறது.

யாரைக் குறை சொல்லி தற்கொலைக்கு முயற்சித்தோமோ அவரே உயிரைத் துச்சமாக மதித்துக் காப்பாற்றியுள்ளார் என்னும் போது அவன் கொடூர மானவனா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்படியாக அவசரத்திலே தப்பான முடிவு எடுத்து விடுகிறார்கள்.

நம் நாடு மற்றும் கலாசாரத்தை பொறுத் வரை இப்படி உணர்ச்சிகரமாக ஆவேசத்தில் ஆத்திரப்பட்டு முடிவெடுப்பவர்கள் தான் அதிகம். பொருளாதாரச் சுமை, கடன் சுமை, அவமானம் , அசிங்கம், அடக்கு முறை, அத்து மீறல், தோல்வி என்று சொல்லப்படும் காரணங்கள் அனைத்திற் கும் மனிதாபிமான ரீதியாக, சமுதாய ரீதியாக, சட்ட ரீதியாக அணுகினால் உறு தியான தீர்வு கிடைக்க வாய்ப்பு உண்டு. அப்படியில்லாமல் ஆத்திரப்பட்டு, ஆவே சப்பட்டு ஒரு தற்காலிக விடயத்திற்கு நிரந்தர முடிவு சரியா என்று சிந்திக்க வேண்டும். கணவன் சரியில்லை என்றாலோ, மனைவி சரியில்லை என்றாலோ, குடும்பம் சரியில்லை என்றாலோ ஏன் அதை பிற ரிடம் சொல்லித் தீர்வு காண முடியாதா? பிறரிடம் சொன்னால் தன் கௌரவம் என்ன ஆவது? குடும்பத்தின் மதிப்பு வீணாகி விடும் என் றெல்லாம் தமக்குள் சமாதானம் சொல்லிக் கொண்டு தம்மையே ஏமாற்றிக் கொள் கிறார்கள்.

தற்கொலைக்கு பின்பு மட்டும் சமுதாயம் விட்டு விடுகிறதா என்ன ? உண்மையான காரணங்கள் மட்டும் அல்லாமல் தேவை இல்லாத காரணங்களையும் கூறி அசிங்கப் படுத்தத்தானே செய்கிறது. தற் கொலை செய்து கொள்வது மட் டும் கௌரவமான செயலா என்ன? சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்

எனவே வேகம் விவேகம் அல்ல. போக்குவரத்துக்கு மட்டும் அல்ல இவ்வாசகம் தற்கொலைக்கும் பொருந்தும்.






உரும்பிராய் ஊரெழு கலை கலாசார மன்றத்தினரால் கலை கலாசார விழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் சிவதொண்டர் முருகையாவுக்கு பொன்னாடை போர்த்தி மலர்மாலை சூடி கௌரவிப்பதை படத்தில் காணலாம்.

# கானல் நீரில் நீச்சல் அடித்த வீரன் பரிதாப மரணம்

## குடிபோதையில் நடந்த விபரீதம்

(கொழும்பு)

நீரில்லாத வெறும் தடாகத்தில் கரணம் அடித்த நீச்சல் வீரர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார்.

குடிபோதையில் நீச்சல் தடாகமொன்றில் நீந்துவதற்குச் சென்ற நபருக்கே இப் பரிதாபம் நேர்ந்துள்ளது. சிறந்த நீச்சல்காரரான சுனில் சாந்த பல நீச்சல் போட்டிகளில் கலந்து விருது பெற்றவர்.

குறித்த நபர் தனது பிறந்த தினத்தன்று நண்பர்களை அழைத்துக் கொண்டு கிளப்புக்குச் சென்று அவர்களை போதுமான அளவு மதுவினால் உபசரித்துள்ளார். அதே நேரம் அவரும் நன்றாக மது அருந்தியுள்ளார்.

போதை உச்சிக்கு ஏறிய நிலையில் சுனில் சாந்தவுக்கு திடீரென ஓர் யோசனை தோன்றியிருக்கிறது. கிளப்பில் அமைந்துள்ள நீச்சல் தடாகத்தில் நீச்சல் அடிக்க எண்ணினார்.

அப்பொழுது நேரம் இரவு 10 மணி. நீச்சல் தடா கப் பக்கம் இருள் சூழ்ந்திருந்தது. தடாகத்தின் படிக்கட்டுக்களின் ஊடாக மேலேறிய அவர் இரு கைகளையும் முன்னால் நீட்டியவாறு தடாகத்தினுள் குதித்தார்.

அவ்வளவுதான் அவ்விடத்திலேயே அவர் உயிரிழந்தார். காரணம் அன்றைய தினம் திருத்த வேலைகளுக்காக நீச்சல் தடாகத்தின் தண்ணீர் முழுவதும் அகற்றப்பட்டிருந்தது. இதனை எவரும் அறிந்திருக்கவில்லை. (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

noolaham.org | aavanaham.org

# பச்சை மலைப் பயணம்



## ஆன்மீகம் 17

27 ஆம் திகதியின் தொடர்ச்சி...

தொடர்ந்து பல காலங்களில் பல பிறவிகளை எடுத்து இஸ்லாமிய மார்க்கத்தை உலகெங்கும் பரப்பினார். அதைப்போலவே சித்தர், புலிப்பாணி பெருமான் கணையை, அகிம்சை அன்பை போதித்து அதற்காகவே தன்னையே பலியாக ஈந்த ஏசு பிரானாக பிறந்தார். இதைப்போலவே புத்தர், மகாவீரர், சங்கரர், இராமானுஜர், மாதவர், இராமலிங்கர் எனும் மகான்கள் தோன்றினார்கள்.

சித்தர் பெருமானின் சமாதிகள் அமைந்த இடத்திலுள்ள கோயில்கள் இன்று பொலிவுடன் விளங்குகின்றன. பல்லாயிரக்கணக்கான மக்கள் உணவு தேடி, சாரி, சாரியாக செல்லும் எறும்பு கூட்டங்களைப் போல பக்தி நாடி பக்தர்கள் இக்கோயிலை நோக்கி அலை அலையாக சென்று கொண்டே இருக்கிறாகள். உதாரணம் வேண்டுமென்றால் இந்த கொங்கணவரின் சமாதி திருப்பதியில் தான் உள்ளது என்றார். இடையில் குறுக்கிட்ட நான், பக்குவமில்லாத காரணத்தால், அவசரப்பட்டு அவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டேன். சாமியார்கள் அற்புதங்களை நிகழ்த்துகிறார்கள், அதனால் மக்கள் அவர்களை தெய்வமாக போற்றுகிறார்கள். ஆனால் தாங்களோ இப்படி மூலிகை தேடி மலைக்கு வருகிறார்கள். மருந்துகளை செய்து தீராத நோய்களை தீர்க்கிறார்கள். அதற்காகக் காசும் கேட்டதில்லை! அன்னதானத்துக்கு அரிசிமூட்டைதான் கேட்கிறார்கள்.

எந்த பந்தாவுமில்லாமல் அடக்கமாக வாழ்கிறார்கள். நீங்கள் மட்டும் மாயாஜாலம் செய்து, சித்து விளையாடினால், மக்கள் தங்களை தேடி ஓடி வருவார்கள். பொருளை அள்ளிக் கொடுப்பார்கள். அதைக் கொண்டு ஆயிரமாயிரம் பேருக்கு அன்னதானம் செய்யலாமே? என்று கேட்டேன். இதைக் கேட்டதும், சித்தர்



பெருமான் என்னையே உற்றுநோக்கினார்கள. அதைக் கண்ட நான் தவறாக ஏதாவது கேட்டுவிட்டோமா? என்று கலங்கிப்போனேன்! உடன் வந்திருந்த பதினைந்துபேரும்என்னை வெறுப்புாக உற்றுநோக்கினார்கள்! ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கு நான் சித்தரிடம் நெருங்கி பழகுவது கேள்விகள் கேட்பது எல்லாம் பிடிக்கவில்லை. அதோடு அப்போது எனக்கு இருபத்தி நாலு வயசுதான்! இவ்வளவு பேர்களுடைய வெறுப்பை சம்பாதித்துக் கொண்டு நான் இறுதியில் சித்தர் பெருமானிடமே வெறுப்பை சம்பாதித்து விட்டோமே, என்று எண்ணி மனம் கலக்கத்தில் ஆழ்ந்தது. இது வரை என்னை உற்று நோக்கியவாறு முகத்தில் எந்த சலனமுமில்லாமல் இருந்த சித்தர்பெருமான் ஏதொ நகைச் சுவையை ரசிப்பது போல,வாய் விட்டு நகைக்கலானார். இதைக் கண்டு நான் மேலும் மிரண்டு போனேன். சிரிப்பின் இடையே உடன் வந்தவர்களைப் பார்த்து "ராஜா என்னை மோசடி வத்தை காட்ட சொல்லுகிறார்கள்" என்று கூறியவாறே மேலும் சிரித்தார்!

இதைக் கண்டு, என்னை அவ்வளவாக பிடிக்காத ஒருவர் "யோவ், சினிமாக்காரரே! வாயை வச்சக்கிட்டு, கொஞ்ச நேரம் சும்மா இருக்க மாட்டீரா! அதிக பிரசங்கித்தனமாக நடந்துக்கிட்டு சங்கடப்படுத்துறியோ" என்றார். சமயத்தைப் பயன்படுத்திக் கொண்ட திருப்தி அவர் முகத்தில் நிலவியது. ஆனால் உடனே குறுக்கிட்ட சித்தர் பெருமான் அந்த மனிதரை பார்த்து "நீங்கள் தான் இப்ப அவசரப்படுறீங்க! ஏன் கேட்டாத்தானே விடை கிடைக்கும். அன்னதானம் நிறையப்பேருக்கு செய்யவேண்டும் என்ற, ஆர்வத்திலே தான் அப்படிக் கேட்டார். இதில் அவருக்கு சுயலாபம் ஏதுமில்லை! நீங்க வேணும்னாபாருங்க, எதிர் காலத்தில் அவர் எப்படி எல்லாம் அன்னதானம் செய்வாருன்னு" என்று கூற, அந்த மனிதர் முகத்தில் ஈயாடவில்லை.

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

(தொடரும்)

# வட அமெரிக்க தமிழ்ச் சங்கப்பேரவை
# ஈழத்தமிழர்கள்- தமிழ்நாட்டுத் தமிழர்கள்
# இடையேயான ஒரு உறவுப்பாலம்!

FeTNA
TORONTO 2013
தமிழ் விழா

தமிழர்களிடையே ஒற்றுமை இல்லை, அவிழ்த்துவிட்ட நெல்லிக்காய் மூட்டை போல இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை பலர் முன் வைக்கிறார்கள். ஒற்றுமை என்பது ஒரு ஒப்பீட்டுச்சொல். நூற்றுக்கு நூறு ஒற்றுமை எந்த இனத்தவரிடமும் இல்லை. ஒற்றுமைக்குப் பெயர் போன யூதர்கள் பற்றி ஒரு பகிடி சொல்வார்கள். பத்து யூதர்கள் இருந்தால் பதினொரு காட்சிகள் இருக்குமாம். எல்லா வீட்டுக்கு வீடு வாசல்படி என்று சொன்ன கதைதான்.

வட அமெரிக்காவில் வாழ்ந்த தமிழர்களை ஒரு குடையின்கீழ் கொண்டுவந்த பெருமை வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையைச் சாரம். இந்தப் பேரவை 1988 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. எண்ணி ஜந்து சங்கங்களுடன் தொடக்கப்பட்ட இந்தப் பேரவை இன்று தமிழ் நாடு, தமிழீழம் மற்றும் புதுச்சேரியைச் சேர்ந்த 50 தமிழ்ச் சங்கங்களையும் அது சார்ந்த 20,000 தமிழ்க்குடும்பங்களையும்சார்புபடுத்தி விளங்குகிறது. அமெரிக்க இலங்கைத் தமிழ்ச் சங்கம் பேரவையின் தொடக்க சங்கங்களில் ஒன்று என்பது ஈழத்தமிழர்களுக்கு பெருமையாக இருக்கிறது.

வ.அ.த.ச பேரவையின் தொடக்க மாநாடு Broomall, pennsylvania இல் நடைபெற்றது. அதன் முதல் தலைவர் பேரா சிரியர் ஆர்.முத்தரசன் ஆவார்.

2002 ஆம் ஆண்டு வரை வ.அ.த.ச பேரவையும் தமிழ் நாடு அறக்கட்டளையும் இணைந்து ஆண்டு விழாவைக் கொண்டாடி வந்தது.

கடந்த 25 ஆண்டுகளாக இந்த அமைப்பு தமிழ்மொழிக்கும் தமிழ்க் கலை பண்பாட்டுக்கும் அரும்பெரும் தொண்டாற்றி வருகிறது. அதன் 25 ஆவது வெள்ளி விழா கடந்த ஆண்டு (2012) போல்த்திமார், மேரிலாந்தில் கோலாகாலமாக நடந்தேறியது. வ.அ.த.ச பேரவையும் வோஷிங்டன் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடாத்தியிருந்தது.

ஆண்டுதோறும் நடைபெறும் பேரவையின் தமிழ் விழாவில் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் செழுமையும் கொழுமையும் ஏற்றமும் உயர்வும் கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு தனிநாயக அடிகளாரின் நூற்றாண்டு கொண்டாடப்படுகிறது. சென்ற ஆண்டு முனைவர் மு.வரதராசனாரின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டது.

பாரதியார் காலத்தில் தமிழ்மொழி சிறப்புற்று விளங்கவில்லை. தமிழ்நாட்டை ஆட்சி செய்த ஆங்கிலேயர் ஆங்கிலமொழிக்கே அரசுமொழிதகமை கொடுத்தார்கள். தமிழ்மொழி தாழ்வுற்று விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு திண்ணைகளில் முடங்கிக் கிடந்தது. இது பாரதியாரின் நெஞ்சில் வலியை ஏற்படுத்தியது.

மேற்குலக மொழிகளில் புதிய கலைகளான வானியல், அறிவியல், பொறியியல் வளர்ச்சி கண்டதுபோல தமிழில் வளர்ச்சி இல்லை எனபாரதியார் ஆதங்கப்பட்டார். மேற்குலக மொழிபோல் புத்தம் புதிய கலைகளையும் தமிழ்மொழியில் படைத்திட வேண்டும் அதற்காகத் தமிழர் எட்டுத் திக்கும் சென்று கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் என்று கட்டளை இட்டுச் சென்றுள்ளார்.

புத்தம் புதிய கலைகள், பஞ்சப்
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்:
மெத்த வளருதே மேற்கே, அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை! அவை
சொல்லும் திறமை அவனுக் கில்லை!
மெல்லத் தமிழினிச்சாகும், அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை ஓங்கும்.
என்றந்தப் பேதை உரைத்தான், ஆ!
இந்த வசையெனக் கெய்திட லாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும், கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந் திங்கு
சேர்ப்பீர்!

இன்று பாரதியாரின் கனவு ஓரளவு பலித்துள்ளது. மேற்கு நாடுகளில் தமிழர்கள் பெருமளவு குடியேறி விட்டனர். இங்குள்ள கலைகளை வாரிச்சேர்த்து அனுப்பும் இடத்தில் இருக்கிறார்கள்.

1993ஆம் ஆண்டென்று நினைக்கிறேன். அன்றை வ.அ.த.ச பேரவை தலைவர் திரு என். கோபாலசாமி, திரு இராவணன் உட்பட சில நண்பர்கள் வந்து எங்களைச் சந்தித்தார்கள். சந்தித்த இடம் தமிழீழ சங்கப் பணிமனை. அப்போது தமிழீழ சங்கப் பணி மனை இல.2130 லோறன்ஸ் அவனியூ கிழக்கு 204 இல் அமைந்திருந்தது. அதன் தலைவராக மறைந்த திரு. முருகேசபிள்ளை துரைச்சாமியும் செயலாளராக திரு சின்னத் தம்பி சிற்றம்பலமும் இருந்தார்கள்.

வ.அ.த.ச பேரவையில் தமிழீழச் சங்கம் சேர்ந்து கொண்டதன் மூலம் கனடிய ஈழத் தமிழர்களுக்கும் அமெரிக்க தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் இடையில் ஒரு உறவுப் பாலத்தை அமைக்கமுடிந்தது.

இந்த உறவுக்கு றொறன்ரோவில் ஜுலை 05, 06, 07 இல் நடைபெற இருக்கும் வ.அ.த.ச ரேவையின் 26ஆவது தமிழ் விழா மேலும் வளமும், வனமும், வனப்பும் சேர்க்கும் என எதிர்பார்க்கலாம். ஈழத்தமிழர்களின் விருந்தோம்பலை வெளிக்காட்ட இந்த விழா ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

வ.அ.த.ச பேரவையின் தலைவர்கள் தமிழீழச் சங்கத்தை உறுப்பினராகச் சேருமாறும் பேரவையின் மாநாட்டுக்கு வருமாறும் அழைப்பு விடுத்தார்கள். அதை ஏற்றுக் கொண்டு அண்மைக்காலம் வரைபேரவை நடத்தும் மாநாடுகளுக்கு தமிழீழ சங்கத்தின் சார்பாளர்களாக சென்று வந்தோம். அட்லாந்தா போன்ற சில தலைநகர்களுக்குச் செல்ல 24 மணித்தியாலம் பயணம் செய்த அனுபவமும் உண்டு. பல ஆண்டுகளாக திருவாளர்கள் மு.துரைசாமி, சி.சிற்றம்பலம், இரா.குணநாதன், ரேவதி குணநாதன், கா.சிவசேகரன், திருமதி சிவசேகரன், பிரான்சிஸ் சேவியர் ஆகியோர் தவறாது போய் வந்தோம்.

திரு சு. இராசரத்தினம் மாநாடுகளில் விடுதலைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் நடன நிகழ்ச்சியை அரங்கேற்றி வந்தார். அது அவையோரின் பலத்த பாராட்டுதலைப் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது.

-நக்கீரன்-

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

469

## குள்ளன் சிம்மபாலன்



ராமபுரத்தில் வசித்து வந்த சிம்மபாலன் வில்வித்தையிலும், கத்திச் சண்டையிலும் சிறந்து விளங்கியும், குட்டையாக இருந்த தால், அவனுக்கு ராஜாவின் படை யில் வேலை கிடைக்கவில்லை. அவன் பலமுறை தேர்வுக்குச் சென்றும், உபதளபதி அவனை எடுத்த எடுப்பிலேயே நிராகரித்து விட்டார்.

வாழக்கையில் விரக்தியடைந்த சிம்மபாலன், ஒரு மரத்தடியில் படுத்துப் புரண்டுகொண்டிருந்த போது அவனை யாரோ தட்டி எழுப்பினர். பார்த்தால், திடகாத்திர மான வாலிபன் ஒருவன் அவன்முன் நின்று கொண்டிருந்தான். அவன் சிம்மபாலனைப் பார்த்து, "என்னப்பா! வேலைதேடி அலைகிறாயா? நான் உனக்கு வேலை தருகிறேன். தளபதி என்னை ஒரு புலியைக் கொல்ல அனுப்பி இருக்கிறார். நீயும் வா! அதை இருவருமாகச் சேர்ந்து செய்வோம்!" என்றான்.

உடனே உற்சாகத்துடன்எழுந்த சிம்மபாலன் "அப்படியா! மிகவும் நன்றி! என்னை செல்லாக்காசு எண்று உபதளபதி நினைக்கிறார். நான் அந்தப் புலியை உயிருடன் பிடித்து அவர் முன் கொண்டுபோய் நிறுத்து கிறேன். அப்புறம் தெரிந்து கொள் வார் அவர் என் வீரத்தைப்பற்றி!" என்று தற்பெருமை பேசிவிட்டு, அந்த இளைஞனைத் தொடர்ந்து நாகபுரம் கிராமத்துக்குச் சென்றான். புலியைக் கொல்வதற்காக தளபதி அனுப்பி வைத்த நபர்கள் அவர்கள் என்று கேட்டதும், அவர்களுக்கு கிராமத்தினர் பலத்த உபசாரம் செய்தனர். "ஐயாமார்களே! அந்தப் பழிகாரப் புலி சமீபகாலமாக மனிதர்களைக் கொன்று தின்ன ஆரம்பித்து விட்டது. நீங்கள்தான் எப்படியாவது அதைக்கொல்ல வேண்டும்" என்று இருவரிடமும் கெஞ்சினார்.

உடனே சிம்மபாலன், "நான் நினைத்தால் வெறுங்கைகளினால் புலியை அடித்துக் கொன்றுவிடு வேன். ஆனால், தளபதி புலியைக் கொல்லும் வேலையை இந்த வாலிபன் விஜயனிடம் தந்து இருக்கிறார். அதனால் இவன் முதலில் முயற்சி செய்யட்டும். இவனால் முடியவில்லை என்றால், நான் அதை ஒரு கை பார்க்கிறேன்" என்று ஜம்பமாகப் பேசினான்.

அன்றிரவு, விஜயன் வில், அம்



புடன் கிராம எல்லையில் ஒரு ஆலமரத்தின் மேல் மறைந்து அமர்ந்து இருந்தான். மரத் தினடியில் ஒரு பசு மாட்டைக் கட்டிவைத் தான். ஆனால், அன்றி ரவு புலி அங்கு வர வேயில்லை. அதை யடுத்த இரண்டு இரவு களும் அது வரவி ல்லை. நான்காவது இரவு, ஊருக்குள் புகுந்தபுலி, மரத்தி னடியில் கட்டிப் போடப்பட்டிருந்த பசுவை விட்டுவிட்டு, ஒரு குடிசை யினுள் புகுந்து, அங்கு தூங்கிக் கொண்டிருந்த ஒரு ஆளை அடித்துத் தின்றுவிட்டது.



உடனே, மறுநாள், கிராமத்தினரை அழைத்து விஜயன், "மனிதர்களைக் கொன்று தின்னும் புலி, அதன்பிறகு, மிருகங்களைத் தின்னாது. எனவே, பசு மாட்டுக்கு பதிலாக மரத்தடியில் நிற்க ஒரு மனிதன் தேவை" என்று அறிவித்தான். அங்கிருந்தவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. யாருமே அதற்கு தயாராக இல்லை.

உடனே கிராமத்து நாட்டாமை, "தம்பி! வெறுங்கையினாலே என்னால் புலியை அடித்துக் கொல்ல முடியும் என்று பெருமை பேசிய உன் நண்பன் சிம்மபாலனுக்கே அதற்கு [illegible] படுத்திக் [illegible]!" என்றதும்,

ஊரார் ஏகமனதாக ஆமோதிக்க, சிம்மபாலனுக்கு அப்போதே குளிர் ஜீரம் கண்டுவிட்டது. எத்தனையோ சால்ஜாப்புகள் கூலியும் பலிக்க வில்லை. வலுக்கட்டாயமாக சிம்ம பாலன் மரத்தடியில் உட்கார, மரத்தில் மேல் வில்லும், அம்புமாக விஜயன் அமர்ந்தான்.

இரவில் சும்மாயிராமல், சிம்ம பாலன் விஜயன் மீது கற்களை வீசிக் கொண்டேயிருந்தான். காரணம் கேட்டால் "விஜயா! நீ மரத்தில் உட்கார்ந்தபடியே ஒருவேளை தூங்கிப் போய்விட்டால் என்கதி அதோ கதி தான்! அதனால்தான் நீ தூங்காமலி ருக்க இப்படிச் செய்கிறேன்" என் றான்.

"அப்படியா?" என்ற விஜயன், கீழிறங்கி, சிம்மபாலன் இடுப்பைச் சுற்றி மிக நீளமான கயிற்றைக் கட்டி, அதன் மறு முனையை மரத்தைச் சுற்றிக் கட்டிவிட்டு, "புலி வந்தால், நீ ஒரேயடியாக ஓடிவிடக் கூடா தல்லவா! அதற்குத்தான்!" என்று சொல்லிவிட்டு மரத்தின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டான்.

சரியாக நள்ளிரவு நேரத்தில், சிம்மபாலன் எதை நினைத்து பயந் தானோ அது நடந்து விட்டது. மூன்று இரவுகளாக அந்தப் பக்கம் வராத புலி, அன்று ஆலமரத்துக்கு அருகே வந்து சம்மபாலனைப் பார்த்துவிட்டது. உடனே, அவன் மீது புலி பாய, சிம்மபாலன் "ஓ" என்று அலறிக் கொண்டே "விஜயா! காப்பாற்று! காப்பாற்று!" என்று ஓட முயன்றான். கயிறு கட்டி இருந்ததால், மரத்ததைச் சுற்றிச்சுற்றி ஓடத்தான் முடிந்ததே தவிர, அவனால் ஓடியொழிய முடியவில்லை.

சிம்மபாலன் பயந்து நடுங்கி ஓலமிட்டுக்கொண்டே மரத்தைச் சுற்றி ஓடியதால், விஜயனால் புலி மீது அம்பு எய்ய முடியவில்லை.

"சிம்மா ஒரு வினாடி அப்படியே நில்! உன்னை துரத்திக் கொண்டே புலியும் உன் பின்னால் ஓடி வருவ தால் என்னால் அம்பைக் குறி பார்த்து எய்ய முடியவில்லை" என் றான் விஜயன்.

"மடையா! நான் நின்றால், மறு வினாடியே, புலி என்னைக் கொன்று விடும். அப்புறம் அதைக் கொன் றால் என்ன, விட்டால் என்ன?" என்றான் சிம்மபாலன்.

அதிர்ஷ்டவசமாக, சிம்மபா லனை மரத்துடன் இணைத்திருந்த கயிற்றில் புலியின் கால்கள் சிக்கிக் கொள்ள, சுருக்கு விழுந்து, புலி யால் ஓடவே முடியாமல் கயிறு சுருக் காக மாறி இறுக்கியது. உடனே, புலியின் மேல் தாவி ஏறிக்கொண் டான். புலியின் கழுத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டான்.


அதற்குள், புலியின் உறுமல் ஒலி, சிம்மபாலனின் கூக்குரல் கேட்டு ஓடிவந்த கிராமத்தினர், சிம்மபாலன் ஆயுதம் எதுவுமின்றி புலியின் மீதே உட்கார்ந்து, அதை கைகளினால் குத்துவதைக் கண்டு, கைதட்டி பாரா ட்டினர்.

அதற்குள் விஜயன் புலி ஓட முடியாதபடி, சங்கிலியால் அதைப் பிணைத்து, அதை அப்படியே அரண் மனைக்குக் கூட்டிச்சென்றான். அரண்

**அம்புலிமாமா கதைகள்**

மனை நெருங்கியதும் விஜயன் காணாமற்போக, சிம்மபாலன் மட்டும் புலியுடன் நுழைய, அவனு க்கு பிரதம மந்திரி, தளபதி ஆகி யோர் உற்சாக வரவேற்பளித்தனர்.

"தளபதி! நான் என் வீரத்தை நிரூபித்துக் காட்டிவிட்டேன். இப் போது எனக்கு வேலை தருவீர்களா" என்று சிம்மபாலன் வேண்ட, அப்போது, அவன் தோளில் ஒருவர் தட்டினார். ராஜ உடை தரித்திருந்த விஜயன்தான் அவன் தோளைத் தட்டியவன். விஜயன் தளபதியை நோக்கி, "தளபதி! இந்த இளை ஞனுடைய வீரத்தைக் கண்கூடாகப் பார்த்தவன் நான்! ஆகவே, இவன் உயரத்தை வைத்து எடைபோடா தீர்கள். இவனை நான் உபதளபதி களில் ஒருவராய் நியமிக்கிறேன்" என்றதும் ஸ்தம்பித்துப் போனான் சிம்மபாலன். தன்னுடன் புலி வேட்டைக்கு வந்தது மாறுவேடத் திலிருந்த மன்னர்தான் என்ற



உண்மை புரியவே அவனுக்கு நீண்ட நேரம் ஆகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகாசி மாத இராசி பலன்கள்

## 15.05.2013-14.06.2013



## கும்பம்

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள் சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

**மாதத்தின் பிற்பகுதி மகிழ்ச்சி தரும்!**

**நண்பர்களை நம்பி செயற்படும் கும்ப இராசி நேயர்களே!**

உங்களுக்கு இந்த வைகாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். அதேநேரத்தில் குருவும் அர்த்தாஷ்டம குருவாக இருக்கிறார். அதோடு இணைந்து சூரியன், சுக்ரன், புதன் ஆகியவையும் சஞ்சரிக்கின்றன. எனவே, விரயங்கள் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி தொல்லை ஏற்பட்டு அகலும். பொருளாதாரநிலை திருப்திகரமாக இருந்தாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும்.

குருப்பெயர்ச்சி மாதத்தின் பிற்பகுதி ஸ்ரீயில் நிகழவிருக்கிறது. அதன் பிறகு குருவின் பரிபூரணப் பார்வை உங்கள் இராசியில் பதியப்போகிறது. எனவே, குரு பார்க்க கோடி நன்மை என்பதற்கிணங்க ஓராண்டிற்கு நற்பலன்கள் வந்து சேரும். உன்னத வாழ்விற்கு அடித்தளமிடுவீர்கள். தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் விருப்ப ஓய்வில் தனித்து இயங்கலாமா? என்று யோசிப்பர். உறவினர் பகை அகலும்.

இதுவரை அர்த்தாஷ்டம குருவின் ஆதிக்கத்தில் சிக்கியிருந்த உங்களுக்கு பல காரியங்கள் முடிவடையாமல் பாதியிலேயே நின்று போயிருக்கலாம். இனி அவை துரிதமாக நடைபெற

# உன்னத வாழ்விற்கு அடித்தளமிடுவீர்கள்

வழிபிறக்கும். குழந்தைகளின் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துப் பிரச்சினைகள் அகலும். பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும். சகோதர ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் உடன்பிறப்புகள் வழியில் ஏற்படும் உறவுகளில் பிரச்சினைகள் உருவாகும். அனுசரித்துச் செல்வது நல்லது. குருப்பெயர்ச்சியன்று அருகிலிருக்கும் புராதனக் கோவில்களுக்குச் சென்று குரு தெட்சிணாமூர்த்திக்குரிய சிறப்பு வழிபாடுகளைச் செய்வது நல்லது. குருகவசம் பாடினால் குழப்பங்கள் தீரும்.

**இடப செவ்வாயின் சஞ்சாரம்!**

மே 21 ஆம் திகதி இடப இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக இடம், பூமி வாங்குவதில் இருந்த பிரச்சினைகள் அகலும். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் வந்து சேரலாம். எந்தக் காரியத்தையும் எடுத்தோம் முடித்தோம் என்று செய்து முடிப்பீர்கள்.

**மிதுன புதனின் சஞ்சாரம்!**


மே 25 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக பிள்ளைகள் வழியில் நல்ல சம்பவங்கள் நடப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். மாமன், மைத்துனர் வழியில் மங்கலச் செய்திகள் வந்து சேரும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். பிள்ளைகளுக்கு உத்தியோகம் கிடைத்து அதன் மூலம் உதிரிவருமானமும் வந்து சேரும்.

**மிதுன குருவின் சேர்க்கை!**

மே 28 ஆம் திகதி மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் இராசியைப் பரிபூரணமாகப் பார்ப்பதால் இதுவரை இருந்தநிலை மாறும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். துயரங்களும் துன்பங்களும் விலகும். துணையாக இருந்தவர்கள் தோள் கொடுத்து உதவுவர் பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக்கொள்வீர்கள். பொதுநல ஈடுபாடு கொண்டவர்களுக்கு புதிய பொறுப்புகள் வரும்.

மே 30 ஆம் திகதி சுக்ரனும் மிதுனத்தில் சஞ்சரிக்கப்போகிறார். பதவி மாற்றம், இலாகா மாற்றம் ஒருசிலருக்கு ஏற்படலாம். வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் வியாழன் தோறும் தெட்சிணாமூர்த்தியை வழிபடுவது நல்லது.

# சிவல்புரி சிங்காரம்



## மீனம்

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**வழிபாட்டின் மூலம் வளர்ச்சிகாண வேண்டிய நேரம்!**

**உதவி செய்வதன் மூலம் உள்ளத்தில் இடம்பிடிக்கும் மீன இராசி நேயர்களே!**

உங்களுக்கு இந்த வைகாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் சனியும் ராகுவும் சஞ்சரிப்பதால் எதையும் யோசித்துச்செய்ய வேண்டிய நேரமாகவே இருக்கிறது. பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பணிக்கு ஒத்துழைப்புச் செய்ய மறுப்பர். என்ன இருந்தாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பவர்கள் நீங்கள் என்பதால் குருப்பெயர்ச்சி வரை பொறுமையாக இருப்பது நல்லது.

வைகாசி 14 க்கு மேல் குரு உங்கள் இராசிப்படி அர்த்தாஷ்டம

# நீண்டநாள் ஆசை நிறைவேறும் நேரம்

குருவாக வந்தாலும் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் ராகுவையும் சனியையும் பார்க்கப் போகிறார். எனவே, ஓராண்டிற்கு அஷ்டமத்து சனியின் கடுமை குறையும் அல்லவா? எனவே, தாமதப்பட்ட காரியங்கள் தடையின்றி நடைபெறும். வெள்ளி, தங்கம் போன்ற பொருட்களை வாங்கிச் சேர்க்க முன்வருவீர்கள். சேமிப்பில் பாதிக்கு மேல் கரைந்துவிட்டதே என்ற கவலை இனி மாறும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும்.

விருப்ப ஓய்வில் ஒரு சிலர் சுயதொழில் செய்ய முன்வருவர். அப்படிச் செய்ய நினைத்தால் குடும்ப உறுப்பினர்களின் ஜாதகத்தை ஆராய்ந்து பார்த்தால் யாருடைய பெயரில் தொழில் செய்தால் லாபம் வரும் என்பதை ஆராய்ந்து பார்த்து முடிவெடுப்பதே நல்லது. அடுக்கடுக்காக அலைமோதிய பிரச்சினைகள் இனி குறையும்.

**இடப செவ்வாயின் சஞ்சாரம்!**

உங்கள் இராசிக்கு செவ்வாய் 2, 9 க்கு அதிபதியாகிறார். தானாதிபதியாக விளங்கும் செவ்வாய் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது பணம் பலவழிகளிலும் வந்து பையை நிரப்பும். நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க இயலும். நீண்ட நாட்களாக வாங்க நினைத்த சொத்துக்களை வாங்கி மகிழ வாய்ப்புகள் கைகூடிவரும். உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். கூட்டு முயற்சிகளில் லாபம் உண்டு.

**மிதுன புதனின் சஞ்சாரம்!**

மே 25 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன்விளைவாக உடல் ஆரோக்கியம் சீராகும். உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி அமையும். நண்பர்களின் நல் ஆதரவோடு ஒருசில காரியங்களை முடித்துக் காட்டுவீர்கள். தூரதேசப் பயணங்கள் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். தாய்வழி ஆதரவு உண்டு.

**மிதுன குருவின் சேர்க்கை!**

மே 28 ஆம் திகதி மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். அர்த்தாஷ்டம குருவாக இருந்தாலும் அதன் பார்வை பலம் உங்களுக்கு கை கொடுக்கும். அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் சனி இராகுவைப் பார்க்கிறார். எனவே, அதன் கடுமை குறையும். பத்தாம் இடத்தைப் பார்ப்பதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். பக்கபலமாக இருப்பவர்கள் உதவிக் கரம் நீட்டுவர். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும்.

குருவின் பார்வை விரய ஸ்தானத்தில் பதிவதால் சுபவிரயங்கள் அதிகரிக்கும். கட்டடம் கட்டுவதிலிருந்து கல்யாணம் நடத்துவதுவரை இருந்த பிரச்சினைகள் அகலும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

மேலும் மே 30 ஆம் திகதி மிதுனத்தில் சுக்ரனும் சஞ்சரிக்கப் போகிறார். இந்த சுக்ரப் பெயர்ச்சியின் விளைவால் இழப்புகளை ஈடுகட்டும் வாய்ப்பு வந்து சேரும். இடமாற்ற சிந்தனைகள் மேலோங்கும். இம்மாதம் வியாழக்கிழமை தோறும் குரு வழிபாடுகளையும் சனிக்கிழமை தோறும் சனி வழிபாடுகளையும் செய்வது நல்லது.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்தை திசைதிருப்ப முனைகிறதா தமிழ்நாடு?

இலங்கையிலுள்ள தமிழர்களுக்கு நன்மை செய்வதாக நினைத்துக் கொண்டும்- பிரசாரம் செய்துகொண்டும் தமிழ் நாட்டிலுள்ள சில அரசியல் கட்சிகள் அடிக்கின்ற கூத்து, நந்தவனத்து ஆண்டியைத் தான் நினைவுபடுத்துகின்றன. கடந்தவாரம் முள்ளிவாய்க்கால் பேரவலத்தின் நினைவுநாள் உலகெங்கும் போலவே தமிழ்நாட்டிலும் அனுஷ்டிக்கப்பட்டது.



சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சியின் ஏற்பாட்டில் கடலூரில் ஒருபேரணி மற்றும் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்யப்பட்டது. அந்தக் கூட்டத்தில் ஜம்மு- காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக் கலந்து கொண்டிருந்தார். அவரது வருகையை அறிந்துகொண்ட தமிழ்நாடு அரசு, அந்தப்பேரணிக்குத் தடை விதித்தது. ஆனாலும் தடையை மீறி பொதுக் கூட்டம் உள்ளக அரங்கில் நடத்தப்பட்டது. அதில் ஜம்மு- காஷ்மீர் விடுதலை முன்னணியின் தலைவர் யாசின் மாலிக் பங்கேற்று உரை யாற்றியிருந்தார். அதில் அவர் ஈழத்தமிழர்களின் போராட்டமும் காஷ்மீர் மக்களின் போராட்டமும் ஒரே வகையானது என்றும், அந்தப் போராட்டம் இன்னும் முடிந்துவிடவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார். கடலூர் கூட்டத்தில் காஷ்மீர் பிரிவினைவாத அமைப்பின் தலைவர் பங்கேற்றது குறித்து காங்கிரஸ் மற்றும் பா.ஜ.க தலைவர் கண்டனம் தெரிவித்திருந்தனர். ஆனால், ஏனைய கட்சிகள் அந்த விடயத்தில் வாய் திறக்காமல் இருந்து கொண்டன.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை நெடுங்காலமாகவே ஆதரிக்கும் பல கட்சிகள் அமைப்புகள் இருந்தாலும் அண்மைக்காலத்தில் தோற்றம் பெற்ற சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சிதாமே விடுதலைப்புலிகளின் மறுவடிவம் போன்று செயற்படத் தொடங்கியுள்ளது. தொடக்கத்தில் தம்மை அரசியல் அமைப்பல்ல என்று கூறிவிட்டு, இப்போது ஆட்சியைப் பிடிக்கும் ஆவலில்தான் அரசியலுக்கு வந்ததாக கூறுகின்ற நிலைக்கு வந்திருக்கிறார் சீமான். யாசின் மாலிக்கை கடலூர் கூட்டத்துக்கு அழைத்துவந்து பேச வைத்ததன் மூலம் தமிழ்நாடு அரசுக்கும் இந்திய மத்திய அரசுக்கும் ஈழத்தமிழர்களின் போராட்டம் பற்றிய புதிய அச்சத்துக்கு விதை போடப் பட்டுள்ளது.

ஈழத்தமிழரின் ஆயுத வழிப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், இராஜதந்திர வழிமுறையிலேயே அதுவும் இந்தியாவின் துணையுடன்தான் ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் என்ற கருத்தும் நம்பிக்கையும் வலுப்பெற்றுள்ளது. கடந்த காலங்களில் ஈழத்தமிழர்களின் போராட்டத்துக்கு இந்தியா பலவழிகளில் தடையாகவே இருந்தாலும் இந்தியாவை விலக்கியதாக ஒருதீர்வு நடைமுறைச் சாத்தியமற்றது என்பது தமிழர்களால் வலுவாக உணரப்பட்டுள்ளது. முன்னர் இந்தியாவை விலக்கி வைக்க முயன்ற விடுதலைப் புலிகள்கூட கடைசிக் காலகட்டத்தில் இந்தியாவின் தயவை நாடி நின்றனர் என்பதும் கவனத்துக்குரியது. இத்தகைய நிலையில் ஈழத் தமிழருக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பதற்கு இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கான தமிழர் தரப்பின் முயற்சிகள் அரசியல் மட்டங்களில் தீவிரமாக முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய முயற்சிகள் ஒருபுறத்தில் நடந்துகொண்டிருக்கும் சூழலில் காஷ்மீர் விடுதலை இயக்கத்துக்கும் ஈழத்தமிழர் போராட்டத்துக்கும் முடிச்சுப்போடப்படுவது எந் தளவுக்கு சரியானது என்ற கேள்வி உள்ளது.

ஏனென்றால், இது இந்தியாவுக்கும் ஈழத்தமிழருக்கும் இடையிலான உறவுகளை சீரமைக்கும் வழிகளை அடைத்துவிடக்கூடியது. அதுபோலவே தமிழ்நாடு அரசும் எங்கோ வடக்கில் உள்ள ஒரு பிரிவினைவாத அமைப்பின் செயற்பாடுகளால் தனது மாநிலத்தில் வேண்டாத விளைவுகள் ஏற்படுவதை எதிர்கொள்ளத் தயாராக இருக்காது.

ஜம்மு- காஷ்மீர் விடுதலை முன்னணி இந்தியாவில் தடை செய்யப்பட்ட ஒரு அமைப்பாக இல்லாவிட்டாலும் அது ஒரு பிரிவினைவாத அமைப்பாகவே, இந்தியாவை உடைப்பதற்கு செயற்படும் ஒரு அமைப்பாகவே பார்க்கப்படுகிறது. அதற்கும் பாகிஸ்தானுக்கும் நெருக்கமான தொடர்புகள் உள்ளன என்பது ஒன்றும் இரகசியமான விடயமல்ல. காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை மறுக்கவியலாத போதிலும் அந்தப் போராட்டத்தின் நியாயத் தன்மை மீது நிறையவே கேள்விகள் உள்ளன.

பாகிஸ்தானின்தூண்டுதல் இல்லாமல் அங்கு பிரிவினைக் கோரிக்கை எழுந்ததா என்பது முதல் விடயம். பாகிஸ்தான், தூண்டிவிட்டு ஆயுதங்களைக் கொடுத்து ஆட்களை பயிற்றுவித்தே காஷ்மீரில் ஒரு நிழல் யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறது.

காஷ்மீர் மக்கள் நடத்தும் போராட்டம் தமக்கென நாடு ஒன்றைப் பெறுவதற்கானது அல்ல. இந்தியாவை உடைத்து பாகிஸ்தானுடன் இணைந்து கொள்வதற்கானது.

காஷ்மீரிகள் தனிநாடு ஒன்றைக் கோரிப் போராட்டம் நடத்துவதானால் அதை பாகிஸ்தானின் கட்டுப்பாட்டிலுள்ள ஆசாத் காஷ்மீரிலும் நடத்தியிருக்க வேண்டும். ஆனால், அவர்கள் அவ்வாறு நடத்தவில்லை. இந்தியாவிலிருந்து காஷ்மீரை பிரிப்பதற்காக நடத்தப்படும் போராட்டத்தில் முழுக்க முழுக்க பாகிஸ்தானின் தூண்டுதல் உள்ளது என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கம் வளர்ச்சி பெற்றபோது அது இந்தியாவை பிளவுபடுத்திவிடும் என்ற அச்சம் இந்திய கொள்கை வகுப்பாளர்களுக்கு இருந்தது. அதாவது தமிழ்நாட்டில் பிரிவினையை உருவாக்கி விடுவார்கள் என்ற அச்சமே அது. அதனால்தான் இந்தியா கடைசி வரை விடுதலைப்புலிகளை பலவீனப்படுத்தவும் அழிக்கவும் கங்கணம் கட்டி நின்றது.

விடுதலைப்புலிகளின் அழிவுக்குப் பின்னர் இத்தகைய அச்சம் மெல்ல மெல்ல இந்தியாவிடமிருந்து கரையத் தொடங்கியுள்ள சூழலில்தான் காஷ்மீர் விடுதலை அமைப்பின் தலைவரை தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்து புயலைக் கிளப்பி விட்டுள்ளார் சீமான். காஷ்மீரில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களை கண்டிக்கவும் அவர்களின் போராட்டத்தை ஆதரிக்கவும் உரிமை உள்ளது என்று வலியுறுத்தும் சீமான் அதை ஏன் இவ்வளவு காலமும் செய்யாமல் இருந்தார்?

முள்ளிவாய்க்கால் நினைவு நாளைப் போலவே தனியான ஒரு நாளில் காஷ்மீரிகளுக்காக கூட்டத்தை நடத்தி அதில் யாசின் மாலிக்கை பேசவைத்திருந்தால் அதை பெரிதாக யாரும் அலட்டிக்கொண்டிருக்கமாட்டார்கள். ஆனால், மொட்ட ந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட அவர் முற்பட்டுள்ளதுதான் சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

ஒருகாலத்தில் உலக விடுதலை அமைப்புகள் எல்லாம் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்ற கருத்து வலுவாகவே இருந்தது. புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்றன பாலஸ்தீன விடுதலை அமைப்புகளுடனும் விடுதலைப்புலிகள் குர்திஷ் போராளிகள் உள்ளிட்டவற்றுடனும் தொடர்புகளை வைத்திருந்தனர். ஆனால், இந்தியாவில் உள்ள அமைப்புகளுடன் இத்தகைய உறவுகளை அவர்கள் பேணுவதில் ஆர்வம் காட்டவில்லை. அது இந்தியாவின் விரோதத்தை சம்பாதிக்க நேரிடும் என்பதனால்தான் அந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை பின்பற்றப்பட்டது. ஒருகட்டத்துக்கு மேல் உலகளவில் விடுதலைப் போராட்ட அமைப்புகளுக்கு இடையிலான நெருக்கம் குறைந்துபோனது. உலகளாவிய பயங்கரவாத எதிர்ப்புப் போர் பற்றிய அச்சமே அதற்குக் காரணம்.

அதேவேளை, முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது காஷ்மீரில் இருந்து எந்தவொரு எதிர்க் குரலும் வரவேயில்லை. இத்தகைய சூழலில் ஈழத் தமிழர்களுக்கான அஞ்சலி நிகழ்வுக்கு யாசின் மாலிக் அழைக்க்ப்பட்டுள்ளார். யாசின் மாலிக்கின் வருகை தமிழ்நாட்டில் பிரிவினைக்கான விதையைத்தூவிவிடுமோ என்ற கலக்கத்தை மத்திய மாநில அரசுகளிடையே ஏற்படுத்தியுள்ளது. காஷ்மீருக்கும் தமிழ்நாடு வழியாக ஈழத்தமிழருக்கும் தொடர்புகள் உருவாவதை இந்தியா ஒரு போதும் விரும்பாது. இத்தகைய கட்டத்தில் இந்தியா மீண்டும் ஈழத் தமிழரின் அரசியல் நலனுக்கு எதிராகத் திரும்புகின்ற நிலை ஏற்படக் கூடும். இலங்கையில் உள்ள தமிழர்கள் போதுமென்ற அளவுக்கு துயரங்களை அனுபவித்துவிட்ட நிலையில் இந்தியா உள்ளிட்ட உலகநாடுகளின் ஆதரவுடன் ஒரு நியாயமான தீர்வை எதிர்பார்த்துள்ள சூழலில் இந்த இணைப்பு முயற்சி அதையெல்லாம் தவிடுபொடியாக்கிவிடக் கூடியது. தமிழ்நாட்டில் உள்ள சில அரசியல்வாதிகள் மேடையைக் கவர்வதற்காக பேசிய பேச்சுகளும் கூட ஈழத்தமிழரின் போராட்டத்தை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டன. இப்போதும்கூட ம.தி.மு.க பொதுச்செயலாள் வைகோ, இந்தியா பல துண்டுகளாக உடையும் என்று தெரிவித்து வரும் கருத்தை இந்தியாவின் ஆளும் வர்க்கம் விடுதலைப் புலிகள் வழியாக ஊட்டப்பட்ட சித்தார்ந்தமாகவே பார்க்கின்றது.

இந்தியாவைப் பகைத்துக் கொண்டோ அதனைச் சபித்துக்கொண்டோ நிலையான தீர்வு ஒன்றை தமிழர்களால் எட்டிவிடமுடியாது. இந்தியாவைத் தந்திரமாகக் கையாளும் வித்தையை புலிகளும்சரி, அவர்களின் தமிழ்நாட்டு ஆதரவாளர்களும் சரி கடைசிவரை புரிந்துகொள்ளவேயில்லை.

பலம்மிக்கநாடுகளின் ஆதரவை வென்றெடுப்பது தான் தமிழர் தரப்பின் முன்னுள்ள பிரதானமான சவால் என்று நாடுகடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் கடந்த வாரம்தான் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, தமிழ்நாட்டில் விடுதலைப்புலிகளின் மறுவடிவமாகத் தம்மை வர்ணித்துக் கொள்கின்றவர்கள், ஈழத்தமிழரின் போராட்டத்துக்கு திசைகாட்டுபவர்களாகக் காட்டிக்கொள்பவர்கள் அதற்கு முரணாகவே செயற்படுகின்றனர்.

இது ஈழத் தமிழரின் நியாய மான உரிமைப்போராட்டத்துக்கு சர்வதேச ஆத்ரவை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடும். சீமான் போன்றவர்கள் இதையெல்லாம் தெரியாமல் செய்கின்றனரா அல்லது தெரிந்தே ஏதோவொரு நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு செயற்படுகின்றனரா என்று கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது.

-ஹரிகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பௌத்த பிக்கு தற்கொலை
# வீடியோ படமெடுத்த ஊடகவியலாளர் கைது

(கொழும்பு)

பௌத்த பிக்குதற்கொலைசெய்து கொண்டதை வீடியோ படமெடுத்த ஊடகவியலாளரை இலங்கைப் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். தலதாமாளிகைக்கு அருகாமையில் மாடுகள் வதை செய்யப்படுவதற்கு எதிராக பௌத்த பிக்கு ஒருவர் கடந்த வெசாக் பௌர்ணமி தினத்தன்று தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவத்திற்கு ஆதரவளித்ததான குற்றச்சாட்டின் பேரில் ஊடகவியலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பௌத்த பிக்கு உடலுக்கு பெற்றோல் ஊற்றும் போது அதனைத் தடுக்காது தொடர்ந்து சம்பவத்தை வீடியோ எடுத்தமையான செயற்பாட்டை தற்கொலைக்கு ஊக்கமளித்ததாகவே கருத வேண்டுமென புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டதுடன், தற்கொலை செய்து கொள்ளப்போவதாக குறித்த பௌத்த பிக்கு ஊடகவியலாளருக்கு முன்கூட்டியே தகவல் கொடுத்துள்ளார்.

இதன் அடிப்படையிலேயே தான், அந்த நேரத்தில் குறித்த தற்கொலை சம்பவத்தை வீடியோ படமெடுத்ததாக ஊடகவியலாளர் தெரிவித்துள்ளார்.

பௌத்த பிக்குவுடன் தற்கொலைக்கு முன்னதான ஊடகவியலாளரின் உரையாடலில் இருந்து அவர் தற்கொலைக்கு உதவி செய்தமை புலனாகின்றது என புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (செ-2)

## சீனா-இலங்கை உறவால் எவருக்கும் பாதிப்பில்லை
### ஜீ.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இலங்கை- சீனாவுடன் பேணி வரும் உறவுகளால் ஏனைய நாடுகளுக்கு பிரச்சினைகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் இல்லை என வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். சீனாவுடன் இலங்கைக்கு மிகவும் வலுவான தொடர்பு காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை இல்லாதொழிக்கும் முனைப்புக்குள் சீனா தொடர்ச்சியான பங்களிப்பை வழங்கியுள்ளதாகவும் பயங்கரவாத ஒழிப்பிற்கு மட்டுமன்றி பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் அது ஒத்துழைப்பு வழங்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சீனாவின் வளர்ச்சியைக் கண்டு இலங்கை அச்சமடையவில்லை எனவும் அதன்மூலம் நன்மைகளையே பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான உறவுகள் குறித்து இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் கேள்வி எழுப்பிய போதிலும் இந்த உறவானது தனிப்பட்ட ரீதியானதன்று என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-2)

## வயது முதிர்ந்த சாதனைப் பெண் இலங்கையில் வாழ்கிறார்

(கொழும்பு)

உலகின் மிகவும் வயது முதிர்ந்த பெண் இலங்கையில் வாழ்ந்து வருகின்றார். பலத்கமுவ தெஹெல் பன்னல என்னும் இடத்தில் வாழ்ந்து வரும் அப்புலெத்தா உக்கும ஹாத்மிய என்ற பெண்ணுக்கு 116 வயது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனை கின்னஸ் உலக சாதனையாக பதியுமாறு அமெரிக்க மற்றும் பிரித்தானிய அதிகாரிகளிடம் சட்டத்தரணி ஹேமந்த சிடுகே கோரியுள்ளார்.

உலகின் மிகவும் வயது முதிர்ந்த பெண் என்ற சாதனையை வழங்குவது குறித்து ஆராய கின்னஸ் அதிகாரியொருவரை இலங்கைக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தற்போது உலகின் வயது முதிர்ந்த பெண் என்ற கின்னஸ் சாதனையுடன் ஜப்பானைச் சேர்ந்த மியசோ ஒகாவா வாழ்ந்து வருகிறார். இந்த பெண்ணுக்கு 114 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இந்தப் பெண்ணை விடவும் உக்குமஹாத்மிய என்ற இலங்கைப் பெண்ணுக்கு இரண்டு வயது அதிகம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ-2)

## சரத் பொன்சேகா வழக்கில் ஜனாதிபதி செயலாளர் சாட்சியம்

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு எதிரான வழக்கு ஒன்றில் ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க சாட்சியமளிக்கவுள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களை இணைத்துக் கொண்டு நாட்டுக்கு எதிராக செயற்பட்டதாகத் தெரிவித்து இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுத் தரப்பின் சாட்சியாளராக லலித் வீரதுங்கவை நீதிமன்றில் ஆஜராகுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

படைவீரர்களின் அரசாங்க விசுவாசத்தை சீர்குலைத்து தமது அரசியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்யக் கொண்டாரென சரத் பொன்சேகா மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-2)




- ❖ *1503*-ஸ்கொட்லாந்துக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது. இது 10 ஆண்டுகளில் முறிந்தது.
- ❖ *1588* - 30 ஆயிரம் பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா எனப்படும் 130 ஸ்பானியக் கப்பல்கள் பிரித்தானியக் கடற்படையினருடன் மோதும் பொருட்டு ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து ஆரம்பித்தன.
- ❖ *1737* - வீனஸ் கோள் மேர்க்குரி கோளின் முன்னால் கடந்ததை ஜோன் பேவிஸ் என்ற வானியலாளர் அவதானித்தார்.
- ❖ *1905* - ரஷ்ய-ஜப்பானியப் போர்: சூஷிமா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ரஷ்யக் கடற்படையின் பால்ட்டிக் பிரிவு ஜப்பானியர்களால் அழிக்கப்பட்டது.
- ❖ *1815* - சிங்கள-முஸ்லிம் கலவரம், 1915: இலங்கையின் கண்டியில் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் கலவரம் ஆரம்பித்து ஜூன் 5 இல் முடிவுக்கு வந்தது.
- ❖ *1937* - கலிபோர்னியாவில் கோல்டன் கேட் பாலத்தை பிராங்கிளின் ரூஸ்வெல்ட் அதிகாரபூர்வமாக திறந்து வைத்தார்.
- ❖ *1940* - இரண்டாம் உலகப் போர்: பெல்ஜியம் ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- ❖ *1942* - இரண்டாம் உலகப் போர்: நாசிகள் தமது சகாவான ரைன்ஹார்ட் ஹைட்ரிக் படுகொலை செய்யப்பட்டமைக்குப் பதிலடியாக செக்கோசிலவாக்கியாவில் ஆயிரத்து 800 பேரைப் படு கொலை செய்தனர்.
- ❖ *1958* - இலங்கை இனக் கலவரம், 1958: இலங்கையின் ஆளுநர் சேர் ஒலிவர் குணதிலக அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வந்தார்.
- ❖ *1964* -பாலஸ்தீன விடுதலை இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது.
- ❖ *1974* - வட அயர்லாந்தில் அதிகாரப் பரவலாக்கம் குறித்த சன்னிங்டேல் உடன்பாடு முறிந்தது.
- ❖ *1987* - மேற்கு ஜேர்மனியைச் சேர்ந்த 19 வயது மத்தாயஸ் றஸ்ட் சிறிய ரக விமானம் ஒன்றில் மொஸ்கோவில் செஞ்சதுக்கத்தில் தரையிறங்கினார். உடனடியாக கைது செய்யப்பட்ட இவர் ஒகஸ்ட் 13, 1988 இல் விடுவிக்கப்பட்டார்.
- ❖ *1991* -எதியோப்பியாவின் தலைநகர் அடிஸ் அபாபாவை எதியோப்பிய மக்கள் புரட்சி ஜனநாயக முன்னணியினர் கைப்பற்றினர். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- ❖ *1995* - ரஷ்யாவின் நெஃப்டிகோர்ஸ்க் நகரில் இடம்பெற்ற 7.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.
- ❖ *1998* - பாகிஸ்தான் ஐந்து அணுவாயுதச் சோதனைகளை நிகழ்த்தியது. ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான் மற்றும் சில நாடுகள் பாகிஸ்தானுக்கெதிராக பொருளாதாரத் தடைகளை அறிவித்தன.


*பிறப்புகள்*

- ❖ *1923* - என். டி. ராமராவ், இந்திய நடிகர், அரசியல்வாதி (இ. 1996)
- ❖ *1980* - ம. சிவசுப்பிரமணியன், தமிழ் எழுத்தாளர்

*இறப்புகள்*

- ❖ *1884* -சாமுவேல் ஃபிஸ்க் கிறீன், தமிழ் மருத்துவ முன்னோடி, அமெரிக்கக் கிறிஸ்தவ ஊழியர் (பி. 1822)
- ❖ *1972* - எட்டாம்எட்வேர்ட், ஐக்கிய இராச்சியத்தின் முடி துறந்த மன்னர் (பி. 1894)

*என். டி. ராமராவ்*



என். டி. ராமராவ் அல்லது என். டி. ஆர் என அழைக்கப்படும் இவர் 1923 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆம் திகதி பிறந்தார். இவர் பிரபல தெலுங்கு திரைப்பட நடிகராகவும், இயக்குநராகவும் மற்றும் அரசியல்வாதியாகவும் இருந்து தெலுங்கு தேசம் கட்சியைத் ஆரம்பித்தார். ஆந்திரப் பிரதேசத்தின் முதலமைச்சராக மூன்று தடவை பொறுப்பு வகித்தார். தெலுங்கு திரைப்படத்துறையில் ஆற்றிய பணிகளுக்காக அவர் 1968 ஆம் ஆண்டில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றார்.

என்.டி.ஆர் 1947 இல் மனதேசம் எனும் தெலுங்குப் படத்தில் பொலிஸ் அதிகாரி வேடத்தில் நடித்தார். "பாதாள பைரவி" படத்தின் மூலம் தமிழ், தெலுங்கு என இரு மொழிகளிலும் பிரபலமடைந்தார்.

"மாயாபஜார்" படத்தில் கிருஷ்ணனாக நடித்தார். அதன் பின்னர், கிருஷ்ணர் வேடம் என்றால் என்.டி.ராமாராவ்தான் என்ற நிலை ஏற்பட்டது. "சம்பூர்ண ராமாயணம்" படத்தில் ராமராகவும் சிவாஜி நடித்த "கர்ணன்" படத்தில், கிருஷ்ணராகவும் நடித்தார். இவர் 1993 இல் லட்சுமி சிவபார்வதி என்ற கல்லூரிப் பேராசிரியரை மறுமணம் செய்து கொண்டார். அப்போது இவருக்கு 70 வயது. அதன் பின் 1994ஆம் ஆண்டு நடந்த ஆந்திர சட்டசபைத் தேர்தலில் தெலுங்குதேசம் கட்சி பெரும்பான்மை பெற்று ஆட்சியைப் பிடித்தது. என்.டி.ஆர் முதலமைச்சரானார்.

சிவபார்வதியின் ஆதிக்கம் அரசியலில் அதிகமாகியதைத் தொடர்ந்து கட்சியில் உட்பூசல்கள் எழுந்தன. இவரின் மருமகனான சந்திரபாபுவும், மகனான நடிகர் பாலகிருஷ்ணாவும் எதிர்அணியாக மாற, தெலுங்குதேசம் கட்சி உடைந்தது. 1995 இல் இவர் இராஜினாமா செய்தார். அதனையடுத்து சந்திரபாபு நாயுடு சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பில் வென்று முதல்மந்திரியானார்.

இவர் 1996 ஆம் ஆண்டு ஜனவரி 18 ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய எல்லைக்குள் சீனா ஊடுருவல்!

## எல்லையில் மீண்டும் பதற்றம்



இந்திய எல்லைக்குள் சீனா மீண்டும் ஊடுருவியது. வாபஸ் பெற்றுச்சென்ற இடத்துக்கு 5 கிலோமீற்றர் தூரத்தில் மீண்டும் தனது படைகளுடன் அத்துமீறி நுழைந்துள்ளது.

சீனப்படைகள் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்திய-சீனா எல்லையில் லடாக் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து முகாம்களை அமைத்தன.

சுமார் 19 கிலோமீற்றர் தூரத்துக்கு சீன படைகள் ஊடுருவி இருந்தன. இதன் காரணமாக எல்லையில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது. சீனாவுக்கு பதிலடி கொடுக்க வேண்டும் என்று பல்வேறு கட்சிகளும் மத்திய அரசை வலியுறுத்தின.

இந்த நிலையில், சீன பிரதமர் லீ கெகியாங் இந்தியாவுக்கு 3 நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கொண்டார். இதைத்தொடர்ந்து, இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண சீன-இந்திய இராணுவ அதிகாரிகள் கூட்டாக பேச்சு வார்த்தை நடத்தினார்கள்.

இதில் சமரசம் ஏற்பட்டு சீனா தனது படைகளை வாபஸ் பெற்றுக்கொள்ள சம்மதித்தது. அதன்படி, அத்துமீறி நுழைந்த பகுதியில் இருந்து சீன படைகள் வாபஸ் பெறப்பட்டன. சீன பிரதமர் இந்தியாவுக்கு வந்து சென்ற பின்னர் மீண்டும் சீன படைகள் வாலாட்டத் தொடங்கிவிட்டன.

ஏற்கனவே ஊடுருவிய பகுதியில் இருந்து வாபஸ் பெற்றுச்சென்ற படைகள் மீண்டும் 5 கிலோ மீற்றர் தூரம் அதே லடாக் பகுதிக்குள் ஊடுருவி வந்துள்ளன. அத்துடன் ஸ்ரீஜாப் பகுதியில் பிங்கர்-8 என்ற இடத்தில் இருந்து பிங்கர்-6 என்ற இடம்வரை 5 கிலோமீற்றர் தூரத்துக்கு மெட்டல் வீதியையும் சீன படைகள் அமைத்து உள்ளன.

இந்தப்பகுதி தங்கள் நாட்டு எல்லையுடன் சேர்ந்தது என்று சீனா கூறுகிறது. ஆனால், இது லடாக் பகுதியுடன் சேர்ந்த இந்தியப் பகுதி தான் என்று இந்திய இராணுவம் தெரிவித்துள்ளது. இந்திய ரோந்துப் படைகள் தடுக்கப்பட்டன. இந்திய-சீனா எல்லைப்பகுதியில் வழக்கமான ரோந்துப் பணிகள் மேற்கொள்ளும் இந்தோ-திபெத் எல்லைப் பொலிஸார் நேற்று முன்தினம் சீனா ஊடுருவிய பகுதியில் ரோந்துப் பணிக்காக சென்றனர்.

அவர்களை சீன படையினர் தடுத்து, திருப்பி அனுப்பி விட்டனர். பிங்கர்-8 என்று அழைக்கப்படும் ஸ்ரீஜாப் பகுதியில் இந்த சம்பவம் நடந்தது. இதைத்தொடர்ந்து அந்தப்பகுதியில் அனைத்து ரோந்துப் பணிகளும் நிறுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-2)

# உயிர்நீத்த அமைதிப்படை வீரர்களுக்கு கௌரவம்

ஐ.நாவின் சர்வதேச அமைதப் படை வீரர்கள் தினம் நாளை புதன்கிழமை அனுசரிக்கப்படுகிறது.

உயிர் நீத்த இந்திய அமைதி படை வீரர்கள் ஐந்து பேருக்கு ஐ.நா கௌரவம் அளிக்கவுள்ளது.

பணியின்போது உயிர் நீத்தவர்களுக்கே இக் கௌரவம் வழங்கப்படவுள்ளது.

உள்நாட்டு கலவரங்கள் உட்பட பல்வேறு காரணங்களில் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளில் ஐ.நா அமைதி படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

இந்த படையில் இந்திய வீரர்கள் மொத்தம் 7 ஆயிரத்து 795 பேர் உள்ளனர்.

United Nations

இதையொட்டி உயிர் நீத்த இந்திய வீரர்கள் ஐந்து பேர் உட்பட 103 பேருக்கு ஐ.நா. கௌரவமளிக்க உள்ளது.

கொங்கோவில் நடந்த தாக்குதலில் நான்கு பேரும் லெபனானில் நடந்த தாக்குதலில் ஒருவரும் உயிரிழந்தனர்.

இந்த ஐந்து பேருக்கும் மரணத்துக்கு பிந்திய விருது வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# கினியாவில் கலவரம்! 11 பேர் பலி; பலர் காயம்



(கோன்கரி)

கினியா நாட்டில் இடம்பெற்ற கலவரத்தில் 11 பேர் உயிரிழந்தனர். மேலும் ஏராளமானவர்கள் காயம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடான கினியாவில் பாராளுமன்றத்துக்கு தேர்தல் நடத்தும்படி எதிர்க் கட்சி வலியுறுத்தி வருகிறது. ஆனால், ஆளும் கட்சி இதற்கு காலம் தாழ்த்தி வருகிறது. இது எதிர்க்கட்சியினரை ஆத்திரப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் கடந்த வாரம் எதிர்கட்சியினர் பாராளுமன்றத்தை நோக்கி பேரணியாக சென்றனர். அப்போது, அவர்கள் துப்பாக்கி மற்றும் கத்தி போன்ற பயங்கர ஆயுதங்களைக் கைகளில் ஏந்திச் சென்றனர். அதை தடுத்த பொலிஸார் மீது தாக்குதல் நடத்தினர். பதிலுக்கு பொலிஸாரும் தாக்கினர். இதனால் கலவரம் மூண்டது.

இதைத் தொடர்ந்து இரு தரப்பினரும் துப்பாக்கிகளால் சரமாரியாக சுட்டுக் கொண்டனர். அதில், 11 பேர் உயிரிழந்தனர். மேலும் ஏராளமானவர்கள் காயங்களுக்குள்ளாகினர். அவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதற்கிடையே, கலவரத்தில் பலியானவர்களின் உடல்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. (செ-2)

# சவுதியின் நிதாகத் சட்டத்தால் இந்தியர்களுக்கு பாதிப்பில்லை

## இந்திய தூதரக அதிகாரி தெரிவிப்பு

(ஜெட்டா)

சவுதி அரசு அமுல்படுத்தியுள்ள நிதாகத் என்ற புதிய சட்டம் இந்தியர்களை வெளியேற்றுவதற்காக அல்ல. அவர்களுக்கு தரப்பட்ட ஒரு வாய்ப்பே அது என இந்திய தூதரக அதிகாரி சிபி ஜார்ஜ் தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் உணவகம், சிறு கடைகள், சிறிய அளவிலான தொழில் நிறுவனங்கள் போன்றவற்றை பிற நாட்டினர் நடத்தி வருகின்றனர். இந்நிலையில், இனிமேல் இவ்வகை சிறுதொழில்களை சொந்த நாட்டினர் மட்டுமே நடத்த வேண்டும் என்பதற்காக நிதாகத் என்ற பெயரில் புதிய சட்டத்தை சவுதி அரேபிய அரசு கடந்த மார்ச் மாதம் அமுல்படுத்தியது.

புதிய சட்ட விதிமுறைகளை அமுல்படுத்தாத நிறுவனங்கள் மீது, அந்நாட்டு தொழில்துறை கடும் நடவடிக்கை எடுக்கும் என ஏற்கனவே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டத்தால் அந்நாட்டில் செயற்பட்டு வரும் 7 இலட்சம் சிறு நிறுவனங்களில் 84 சதவீத நிறுவனங்களை மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இல்லையேல் அந்த நிறுவனங்களில் அந்நாட்டைச் சேர்ந்த ஒருவரையாவது வேலைக்கு நியமிக்க வேண்டும். இதனால், 5 இலட்சம் இந்தியர்கள் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் புதிய சட்டத்தின் படி வேலையை தக்க வைத்துக் கொள்ளவும் முடியாதவர்கள் விரைவில் நாடு திரும்பவும் உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ள மூன்று மாதம் அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சவுதி தூதரக அதிகாரி சிபி ஜார்ஜ் கூறியதாவது,

சவுதி அரசு அமுல்படுத்தியுள்ள நிதாகத் சட்டம், இந்தியர்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றுவதற்காக அல்ல. இது இந்தியர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஒரு வாய்ப்பு. கடந்த 1997ஆம் ஆண்டு முதல் இங்கு வந்து தங்கியவர்கள் மீண்டும் இந்தியா செல்வற்கு ஒரு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

சவுதியில் உள்ள இந்தியர்கள் தங்கள் ஆவணங்களை ஒழுங்குபடுத்தி கொள்வதற்கும் புதிய வேலையை தேடுவதற்கும் இந்த சட்டம் வழி செய்கிறது.

உரிய முறையில் ஆவணங்களை வைத்திருக்காதவர்களுக்கு அபராதமோ, சிறை தண்டனையோ இல்லாது நாடு திரும்ப வழி செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தால் இந்தியர்கள் பெரிய அளவில் பாதிக்கப்படவில்லை. ஏனென்றால், வேலை இழக்கும் இந்தியர்களுக்கு வேலை வழங்க 120 நிறுவனங்கள் தங்களை அணுகியுள்ளதாக அவர் கூறினார்.(அ-2)

# மியன்மாரில் முஸ்லிம்களுக்கு குடும்பக்கட்டுப்பாட்டு திட்டம்

(யாங்கூன்)

மியன்மாரில் முஸ்லிம்களுக்கு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமுல்படுத்த அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளதாக ராகின் மாகாண செய்தி தொடர்பாளர் வின் மியாங் தெரிவித்துள்ளார்.

அதன்படி மியன்மாரில் ராகின் மாகாண முஸ்லிம் குடும்பத்திற்கு தலா இரண்டு குழந்தைகளை மட்டுமே பிரசவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மியன்மாரின் மேற்கு பகுதியில் வங்காளதேச எல்லையில் ராகின் மாகாணம் முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியாகும். சில மாதங்களுக்கு முன்பு இங்கு முஸ்லிம்களுக்கும், புத்த மதத்தினருக்கும் இடையே கலவரம் வெடித்தது.

அப்போது முஸ்லிம்களின் ஆயிரக்கணக்கான வீடுகளை புத்த மதத்தினர் கொளுத்தினர். நூற்றுக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சத்து 25 ஆயிரம் முஸ்லிம்கள் வீடுகளை இழந்தனர்.


கலவரம் குறித்து விசாரணை நடத்த அரசு ஒரு குழுவை அமைத்தது. அக்குழு நடத்திய விசாரணையில் முஸ்லிம்களின் மக்கள் தொகை பெருக்கமே மதக் கலவரம் ஏற்பட காரணம் என தெரியவந்தது.

இந்த மாகாணத்தில் புத்தமதத்தினரைவிட முஸ்லிம்களின் மக்கள் தொகை 10 மடங்கு அதிகம் இருப்பதால்தான் இந்த கலவரம் உருவானது எனக் கண்டு பிடிக்கப்பட்டது.

எனவே, மியன்மாரில் முஸ்லிம்களுக்கும் குடும்ப கட்டுப்பாடு திட்டத்தை அமுல்படுத்த அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. அதன்படி மியுன்மாரில் ராகின் மாகாண முஸ்லிம்கள் குடும்பத்துக்கு தலா 2 குழந்தைகள் மட்டுமே பிரசவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முஸ்லிம்களின்பல தார திருமணத்துக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த தகவலை ராகின் மாகாண செய்தி தொடர்பாளர் வின்மியாங் தெரிவித்தார். (அ-2)

# இலங்கையில் பொதுவாக்கெடுப்பு நடத்தி தமிழர்களுக்கு தனி அந்தஸ்து வழங்குங்கள்



(திருச்சி)

இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்தி தமிழர்களுக்கு தனி அந்தஸ்து வழங்க வேண்டும் என ம.தி.மு.க. செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர் இல்லத்து திருமண விழாவில் கலந்து கொண்டு கூறுகையில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மது அருந்துவோரின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்நிலை நீடித்தால் வளமான தமிழகம் என்பது கேள்விக்குறியாகி விடும். இதுபோன்ற தொலைநோக்கு சிந்தனையில்தான் தமிழகத்தில் பூரண மது விலக்கை அமுல்படுத்த வேண்டும் என்று ம.தி.மு.க. பல்வேறு போராட்டங்கள், நடை பயணம் போன்றவற்றை நடத்தி வருகிறது.

இதை சிலர் கேலி செய்து வருகின்றனர். இலங்கையில் பொது வாக்கெடுப்பு நடத்தி தமிழர்களுக்கு தனி அந்தஸ்து வழங்க வேண்டும் என்ற கோரிக்கை நாடு முழுவதும் தமிழ் இளைஞர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இதை வலியுறுத்தி மாணவர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். 1940 ஆம் ஆண்டுக்கு பின் பல்வேறு நாடுகள் பொது வாக்கெடுப்பை நடத்தித்தான் சுதந்திர அந்தஸ்து பெற்றுள்ளன.

இலங்கையில் இன்னும் கொடூரம் தொடர்கிறது. தமிழர்கள் மீது தொடர்ந்து இலங்கை அரசு கொடூரங்களை நடத்தி வருகிறது.

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இந்திய வருகைக்கு எதிராக போராட்டங்கள் நடத்தப்பட்டன. இனியும் நடத்தப்படும் என்றார் வைகோ (செ-2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மருந்துகள் வழங்குவதில் நோயாளரிடையே பாரபட்சம்!

## கவனமெடுக்குமாறு அதிகாரிகள் கோரிக்கை

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு மருந்து வழங்குவதில் பாராபட்சம் காட்டப்படுவதாக நோயாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த வைத்திய சாலையின் வெளிநோயாளர் பகுதியில் மருந்து பெற்றுக் கொள்வதற்காக முழங்காவில், நாச்சிக்குடா மற்றும் ஏனைய இடங்களில் இருந்து நோயாளர்கள் அதிகாலை 4 மணிக்கே அங்கு சென்று வரிசையில் காத்திருக்கின்றனர். இவ்வாறுமுன்னரேவரும் நோயாளர்கள் வரிசையில் காத்திருக்க, நேரம் தாமதித்து வரும் நோயாளர்கள் வைத்தியசாலை ஊழியர்களின் சலுகையை. பயன்படுத்தி தாமதமின்றி மருந்துகளைப் பெற்றுச் செல்கின்றனர்.


அதிகாலை 4 மணிக்கே சென்று மருந்தைப் பெற்று மாலையான பின்பே வீடு திரும்புகின்ற நிலையில் பலரும், தாமதித்து வந்து முன்னதாகவே மருந்துகளைப் பெற்றுச் செல்லும் சிலரும் உள்ளதான இந்த பாரபட்சமான நிலை வைத்தியசாலைகளில் காணப்படுவது கவலைக்குரிய விடயமே.

இவ்வாறு நீண்ட நேரமாக காத்திருப்பவர்கள் கர்ப்பிணித்தாய்மாரும் சிறுவர்களுமேயாகும். இவர்கள் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தை கவனத்தில் எடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென நோயாளர்கள் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்துள்ளனர். (செ-3-263)

# பல இலட்சம் ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் நிர்மாணிப்பு

## அமைச்சர் பசில் இன்று திறந்து வைக்கிறார்



(சிவநகர்)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் வடக்கின் மீளெழுச்சித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்கள் இன்று செவ்வாய்க்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது. புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களான கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு மண்டபத்துக்கு அருகாமையில் 241 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நில அளவைத் திணைக்களம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் பாண்டியன்குளம் பிரதேசத்தில் 200 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கி மற்றும் மல்லாவியில் 200 இலட்சம்ரூபாசெலவில் அமைக்கப்பட்ட தண்ணீர்த் தாங்கியும் அத்துடன் 410 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை ஆகியவையே திறந்து வைக்கப்படவுள்ளன. (செ-3-254)

## அடிப்படை வசதிகள் கூட ஏற்படுத்தப்படாத

# போருக்கு பிந்திய போரொன்றை முல்லை. மக்கள் சந்திக்கின்றனர்

(றெட்பானா)


முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் தற்காலிக கொட்டகைகளில் வாழும் நிலையில் உள்ளனர். போரில் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாக முல்லைத்தீவு மாவட்டம் உள்ளது. இங்குள்ள மக்கள் போருக்குப் பிந்திய போரொன்றை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். வெறும் கையோடும் கனத்த இதயத்தோடும் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய இப்பகுதி மக்கள் மீண்டும் அதே நிலையில் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையைக் கருத்திற் கொண்டே இங்கு பலவகையான உதவிப்பணிகளை அரசாங்கமும் பல அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்னெடுத்து வருகின்றன. தற்போதும் பல உதவித்திட்டங்களும் அபிவிருத்திப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தபோதும் இங்குள்ள பலர் போரின் நெருக்கடிகளில் இருந்து மீளவுமில்லை: அவர்களின் இழப்புக்கள் ஈடுசெய்யப்படவுமில்லை.

பல இழப்புக்களின் மத்தியில் மீள்குடியேறிய பலரும் நிரந்தர வீடுகள், காணிகள், நிரந்தர தொழில், வயல்நிலங்கள், பெரும் தோட்டங்கள் முதலியன இல்லாத நிலையில் தூய நீரைப்பருகுவதற்குக்கூட வசதிகளற்று பல்வேறு குறைகளுடன் வாழ்ந்து வருகிறார்கள்.

தற்போது இவர்கள் எதிர்கொள்ளும் முதல் பிரச்சினை நிரந்தர வீடேயாகும்.

இந்த நிரந்தர வீட்டை அமைப்பதற்கு முன்னர் உடனடித்திட்டமாக அமைத்துக் கொடுக்கப்பட்டது தான் தற்காலிக வீடு.



இதன் காலம் 2 ஆண்டுகள் என வரையறை செய்யப்பட்டு சிப்போட், தென்னங்கிடுகு, சப்புமரக்கால்கள் என குறுகிய காலத்திற்கு பாவிக்கக்கூடியவைகளை கொணடே இந்தத் தற்காலிக வீடுகள் சில தொண்டு நிறுவனங்களால் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

தற்போது 4 ஆண்டுகள் கழிந்தும் அதே குடிசையில் பல துன்பதுயரங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருபவர்களின் நிலை பரிதாபகரமாகவுள்ளது. இங்கு அமைக்கப்பட்ட குடிசைகள் இரண்டு ஆண்டுகள் நீடித்த போதும் அதை வழங்கிய நிறுவனத்தின் பெயர், பலகைகள் இன்னும் 10 ஆண்டுகள் நீடிக்கக் கூடியதாகவுள்ளன.

ஒவ்வொரு கிராமத்தையும் தெரிவு செய்த நிறுவனங்களின் பெயர்ப்பலகைகள் கிராமங்களின் வீதியோரங்களில் வரவேற்பு பலகைகளாக காணப்படுவதுடன் அவற்றின் தொகைமதிப்பு, ஒதுக்கப்பட்ட நிதி, செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் என்பவை பட்டியலிட்டு காட்சிப்படுத்தப்பட்டவையாகவும் காணப்படுகின்றன.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உட்கட்டமைப்புகாக அரசு கோடிக்கணக்கான நிதியை செலவிடுகின்றது.

ஆனாலும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வு நிலையை மேம்படுத்த அரசு மேற்கொளளும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. தொடர்ந்தும் இந்நிலை இங்கு நீடிப்பதால் போர்ச்சூழலை ஒத்த நிலைமைக்குள்ளேயே இனனமும் இந்த மக்கள் வாழ்ந்து வருவதாகவே கருத முடிகின்றது.

தற்போது போரில் பல இழப்புக்களை சந்தித்த பலரில் சிலர் தமது உயிர் இழப்புக்களைத் தவிர ஏனைய உடைமைகளையும் சொத்துக் களையும் சேர்த்துக் கொண்டாலும், பல குடும்பங்கள் இன்னும் நாளாந்த அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாத நிலையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள்.

எனவே, மக்கள் மத்தியில் அளப்பெரிய சேவைகளை ஆற்றிவரும் தொண்டு நிறுவனங்கள் தாம் தெரிவு செய்த கிராமங்களை மீணடும் கருத்திற்கொண்டு அங்குள்ள தற்காலிக வீடுகளை மீள் புனர்நிர்மாணம் செய்து பாதுகாப்பான சூழலில் அவர்கள் வாழ்வதற்கு வழிவகை செய்யவேண்டும் என்பதே அனைவரின் எதிப்பார்ப்பாகவும் உள்ளது.

(செ-3-260)




# பயனற்றுப்போன குழாய்க்கிணறு

(றெட்பான)



தேராவில் கிராமத்தில் அண்மையில் அரசசார்பற்ற நிறுவனம்ஒன்றினால்அமைக்கப்பட்ட குழாய்க்கிணறு பயன்படுத்துவோர் யாருமின்றி பற்றைக்காடுகளால் சூழப்பட்டுள்ளது.

இங்கு மூன்றில் ஒரு பகுதி மக்களே கட்டுக் கிணற்றில் நீரைப் பெறுகின்றனர். ஏனையவர்கள் மண் கிணற்று நீரையே பயன்படுத்தி வருகின்றனர் .

குழாய்க்கிணறு அமைக்கும் போது மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளிலும், நீரிரைப் பெற்றுக் கொள்வதில் அல்லல்படும் மக்கள் வாழும் இடங்களிலும் அமைப்பதே சாலச்சிறந்ததாகும்.

ஆனால், தேராவில் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இக் குழாய்க்கிணற்றினால் அப்பகுதி மக்களுக்கு எதுவித நன்மையும் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (செ-3-260)

# சொத்தழிவு இழப்பீட்டிற்கான விண்ணப்ப திகதி நீடிப்பு

(மல்லாவி)

வன்னியில் இடம்பெற்ற போர் நடவடிக்கைகள் காரணமாக சொத்தழிவுகளுக்கு உட்பட்டமுல்லை.மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அரச உத்தியோகத்தர்கள் இழப்பீட்டுக்காக விண்ணப்பிக்கும் இறுதிநாள் எதிர்வரும் ஜூன் மாதம் 20 ஆம் திகதி வரை காலநீடிப்பு செய்யப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் ந.வேதநாயகன் அறிவித்துள்ளார்.

எனவே, முல்லை. மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட அனைத்து திணைக்களங்களிலும் பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்கள் இழப்பீட்டு விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தாங்கள் கடமையாற்றும் திணைக்களங்கள் ஊடாக புனர்வாழ்வு மறுசீரமைப்பு அமைச்சுக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கும்படி அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-3-15)

# விசேட கல்வி மாணவர்களுக்கான வலயமட்ட விளையாட்டுப் போட்டி

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயில்கின்ற விசேட கல்வி மாணவர்களுக்கான வலய மட்ட விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு மு/ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளதாக துணுக் காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இப் போட்டி தொடர்பான படிவத்தில் மாணவர்களின் தரவுகளையும் மாணவர்கள் பங்கு பற்றும் போட்டிகளையும் பூரணப்படுத்தி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு முன்னர் துணுக்காய் வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணை பின்தொடர்ந்த வர்த்தகருக்கு தர்ம அடி

## தொலைபேசி இலக்கத்தை கேட்டாராம்

வவுனியா தாண்டிக்கு ளம் பகுதியில் பெண்ணொ ருவரிடம் தொலைபேசி இலக் கத்தை தருமாறு தொந்தரவு செய்த வர்த்தகருக்கு அப்ப குதி இளைஞர்கள் சேர்ந்து தர்ம அடி கொடுத்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

வவுனியா கோவிலொன் றுக்கு அருகில் வர்த்தக நிலை மொன்றை நடத்திவரும் 50 வயது மதிக்கத்தக்க வர்த்தக ரொருவர் நேற்று திருமண வீடொன்றில் கலந்து கொண் டிருந்தவேளை, அங்கு வந்தி ருந்த பெண்ணிடம் தொலை பேசி இலக்கத்தை தருமாறு தொடர்ச்சியாக தொந்தரவு கொடுத்துள்ளார்.

இதனால், ஆத்திரமடை ந்த அப்பெண் திருமண வீட்டில் அவரை எச்சரித்து விட்டு அங்கிருந்து உடனடி யாக முற்சக்கர வண்டியொ ன்றில் தனது வீட்டிற்கு சென் றுள்ளார். இச்சமயம் அவ் வர்த்தகர் முற்சக்கரவண்டி யைப் பின்தொடர்ந்து வரு வதை அவதானித்த பெண் தனது வீட்டில் இருந்த உறவி னர்களிடம் முறையிட அப்ப குதியைச் சேர்ந்த இளைஞர் கள் ஒன்று திரண்டு அவ்வர் த்தகரை மடக்கிப் பிடித்து நைய ப்புடைத்துள்ளனர்.

இதன் காரணமாக வர்த்த கர் கை விரலில் பலத்த காய ங்களுக்குள்ளாகியதுடன் மோட்டார் சைக்கிளும் சேத மடைந்த நிலையில் இளைஞர் களால் விரட்டியடிக்கப்பட் டுள்ளார். (செ-250-266)

# சுகாதார பாதுகாப்பு நிலையங்களை நாடெங்கிலும் நிறுவ தீர்மானம்

கிராமிய மக்களின் சுகா தார நிலைமையை மேம்படுத் துவதற்காகநாடுபூராகவும் ஆயி ரம் ஆரம்ப சுகாதார பாதுகா ப்புநிலையங்களை நிர்மாணி க்கவுள்ளதாகவும் இதற்கு அமைச்சரவை அனுமதி வழங் கியுள்ளதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்ஷ எம்.பி. யின் வேண்டுகோளுக்க மைய முதற்கட்டத்தின் கீழ் 50 ஆரம்ப சுகாதார பாது காப்பு நிலையங்கள் அம்பா ந்தோட்டை மாவட்டத்தில் நிர் மாணிக்கப்படவுள்ளன.

சூரிய வெவ மற்றும் பெலி யத்தை ஆகிய இடங்களில் முதலிரு நிலையங்கள் நிர் மாணிக்கப்பட்டன.

நாடு பூராகவும் உள்ள பொது சுகாதார பரிசோதகர் அலுவலகங்கள் 315 உம் உள்ளடங்கும் வகையில் மேற் படி ஆரம்ப சுகாதார பாது காப்பு நிலையங்கள் நிர்மா ணிக்கப்படும் எனவும் அமை ச்சர் கூறினார். சுகாதாரத்து றைக்கு ஒதுக்கும் நிதியில் 80 வீதம் வைத்தியசாலைக ளில் நோயாளர் சிகிச்சைக் காக செலவிடப்படுவதோடு ஆரம்ப சுகாதார அபிவிரு த்திக்கு 20 வீத நிதியே வழங் கப்படுகிறது. எதிர்காலத்தில் இந்நிதியை அதிகரிக்க உள்ள தாகவும் அமைச்சர் குறிப்பிட்டு ள்ளார். (செ-2)

## நெஞ்சை உருக்கும் ஐந்தாம் ஆண்டு நினைவுகள்

மலர்வு: 09.11.1980

திதி: சதுர்த்தி (28.05.2013)

உதிர்வு: 28.05.2008



**அன்பான தம்பி ஐயா**

என்ன சொல்லி நான் அழுவேன், என் மனது ஆறவில்லை
உலகத்தில் வாழ எனக்கு உண்மையில் பிடிக்கவில்லை
என்ன சொல்லி புலம்புவதோ என் அருமை வரதன் குட்டியே
என் செல்லமே உனை நினைத்து வந்த செய்த வாள் என்
நெஞ்சை பிளந்ததையா! பரிவோடு கேட்பதற்கு
நீ இல்லையே! தீப்பாது ஒளிதந்து எமை
சந்தோசப்படுத்திய அந்நாள் நினைவுகள்தான் அழியாமல்
பதிந்திருக்க ஆண்டவனின் பாதங்களை பணிகின்றோம்
உன் ஆத்மா சாந்தியடைய் அழுதழுது வேண்டுகின்றோம்

(2862)

தகவல்:
கதிரவேலு குடும்பம்

மாவடிச் சந்தி,
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை

**மகேந்திரன் வரதன்**

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர் சிவயோகம் செல்வராசா

(இளைப்பாறிய ஆசிரியை)

பிறப்பு: 31.10.1928

இறப்பு: 07.06.2012

அழுதாலும் புரண்டாலும்
ஆண்டாண்டு சென்றாலும்
மறைந்த உம் நினைவு
மறையாது எப்போதும்

ஆண்டொன்று போனது - அம்மா
உம் குரல் கேட்டு
மீண்டு விட்டோம் என நினைத்தோம்
இல்லை இவ்வேதனைக்கு
இல்லையே ஒரு முற்று

திதி: சதுர்த்தி 28.05.2013

கண்ணீருடன் பிள்ளைகள்,
மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்.

'சபசதனம்'
சம்பியன் வீதி, கொக்குவில். (2863)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

வெளிவாரிப் பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகு.

### திசைமுகப்படுத்தும் நிகழ்வு - 2013
### Orientation Programme - 2013

- ✔ வணிகமுதற் தேர்வு (புதிய பாடத்திட்டம்)
- ✔ இரண்டாம் வணிக தேர்வு (புதிய பாடத்திட்டம்)
- ✔ மூன்றாம் வணிக தேர்வு (புதிய பாடத்திட்டம்)

மேற்படி வணிகமாணி பட்டப் பரீட்சைகளுக்கு பதிவு செய்த மாணவர்களுக்காக 01.06.2013 (சனிக்கிழமை) தொடக்கம் 21.07.2013 (ஞாயிற்றுக்கிழமை) வரை ஒவ்வொரு சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை பின்வரும் ஒழுங்கில் திசைமுகப்படுத்தும் வகுப்புகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிகத்துறை மண்டபத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வகுப்புகளில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அழைக்கப்படுகின்றீர்கள்.

**கால அட்டவணை**

| | |
|---|---|
| வணிகமுதற் தேர்வு | 01.06.2013 - 16.06.2013 |
| இரண்டாம் வணிக தேர்வு | 22.06.2013 - 07.07.2013 |
| மூன்றாம் வணிக தேர்வு | 13.07.2013 - 21.07.2013 |

நேர அட்டவணை மற்றும் மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

**முக்கிய குறிப்பு :** பழைய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றுவோரும், மேற்படி வகுப்புகளில் கலந்துகொண்டு பயன்பெற முடியும்.

**பதிவாளர்**
27.05.2013

(சி-3440)



## கல்சியம் நீக்கி Go- Clean

- ❖ Go- Clean கல்சியம் நீக்கி என்பது முதற்தரமான கல்சியம் நீக்கியாகும். கல்சியம் நீக்கி அறிமுகப்படுத்தியவர்களிடம் இருந்து இந்த Go- Clean கல்சியம் நீக்கி உற்பத்தி செய்யப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.
- ❖ Go- Clean கல்சியம் நீக்கி ரைல்ஸ் கிளினருக்கு பதிலாகப் பயன்படுத்தக்கூடியது. Go- Clean கல்சியம் நீக்கி உங்கள் வீடு, அலுவலகம், வைத்தியசாலை என்பவற்றில் இருக்கும் மலசலகூட கோப்பை, கொமெட், ரைல்ஸ் போன்றவற்றில் படிந்திருக்கும் கல்சியம் கறைகளை இலகுவாக போக்கக்கூடியது.
- ❖ Go- Cleanகல்சியம் நீக்கி உங்கள் சமையலறையில் இருக்கும் சிங், சுடுதண்ணீர் போத்தல், கேத்தல் போன்றவற்றுக்கும் சிறந்தது.
- ❖ Go- Clean கல்சியம் நீக்கி தண்ணீர்த்தாங்கி, PVC குழாய்கள் போன்றவற்றுக்கும் சிறந்தது.
- ❖ Go- Clean பாவனை முறைகளை போத்தலில் உள்ள படிமுறைகளைப் பின்பற்றி பாவிப்பதன் மூலம் சிறந்த பயனை அடையலாம்.
- ❖ Go- Clean கல்சியம் நீக்கி எச்சரிக்கைகளைக் கைக்கொள்வதன்மூலம் ஆபத்துக் களைத் தவிர்க்கலாம்.
- ❖ நீங்கள் வாங்கிப் பயன்படுத்தும் கல்சியம் நீக்கி Go- Cleanஎனும் பெயரை உடையதா என்று உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.
- ❖ அசிட் நேரடியாக ரைல்ஸ்களுக்கு இடுவதன்மூலம் உங்கள் விலையுயர்ந்த ரைல்ஸ் களை மங்கவைக்கும்.
- ❖ போலிகளைக் கண்டு ஏமாறவேண்டாம்.
- ❖ Go- Clean கல்சியம் நீக்கி என்ற பெயரை கேட்டு வாங்குவதன்மூலம் 20/- கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

கேட்டு வாங்குங்கள் Go- Clean கல்சியம் நீக்கி
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**703 சிவப்பு மற்றும் கறுப்பு சீமெந்து (காவி)**
**(Red or Black Cement)**

- ❖ No-1 கொலண்ட் காவி வகையென்றால் அது 703 காவியாகும்.
- ❖ 1 Kg ரின்களில் வெளிவருகிறது.
- ❖ 703 காவியை கேட்டு வாங்கி 50/ = பணப்பரிசினைப் பெற்றுக்கொள்ளுங்கள்

(சி-3438)

**நியூ எய்ஸர் சப்ளயர்ஸ்**
இல.325, A-9 கண்டி வீதி, சாவகச்சேரி, 0779142010 (சாவகச்சேரி வைத்தியசாலைக்கும் இந்துக் கல்லூரிக்கும் இடையில்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேற்றமான வாழ்க்கைக்குப் பாதை அமைத்துத் தரும் வழிகாட்டி பழமொழிகளே.

~ ஓர் அறிஞர்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www:valampurii.lk


## கடும் கூர் கடும் மொட்டை

தமிழ் மொழியின் சிறப்பில் பழமொழிகள் கொண்ட பங்கு காத்திரமானவை. தமிழ்ப் பழமொழிகளை எடுத்து ஆராய்ந்தால், அவற்றின் யதார்த்த நிலைகளும், முகாமைத்துவ சிந்தனைகளும் வெளிப்படும்.

இத்துணை சிறப்புமிக்க தமிழ்ப் பழமொழியில் ஒன்று, **கடும் கூர் கடும் மொட்டை** என்பதாகும்.

எந்த விடயத்தில் நாம் அதி தீவிரமாக கவனம் செலுத்துகின்றோமோ, எந்த விடயத்தை நாம் அதி உயர்வாக தூக்கி வைக்க முற்படுகின்றோமோ அதுவே நமக்கு துன்பமாகவும், தோல்வியாகவும் அவமானத்தை தருவதாகவும் அமைந்து விடுகின்றது என்பதையே இப்பழமொழி சுட்டி நிற்கின்றது.

இப்பழமொழிக்கு தக்க உதாரணம்; தென்பகுதியில் பௌத்த பிக்குகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நடைபெற்ற சச்சரவை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

பல்வேறு சமயங்களை கொண்ட இலங்கைத் தீவை பௌத்த மத நாடாக நினைத்துக் கொண்டு, பௌத்த துறவிகளுக்கு தனிமதிப்பும் மரியாதையும் வழங்குகின்ற நிலைமையும் பௌத்த பீடங்களின் கட்டளைகளுக்கு அமைய ஆட்சி பீடங்கள் இயங்குவதுமான நிலைமைகள் இந்த நாட்டில் மத பேதங்களை தோற்றுவித்தது எனலாம்.

இலங்கை இனப்பிரச்சினைக்கான அடிப்படை சிங்கள –தமிழ் மொழி என்பதாக யாரேனும் நினைப்பார்களாக இருந்தால், அது மகா தவறு.

உண்மையில் இலங்கை நாட்டில் நிலவக்கூடிய இனப்பிரச்சினையின் தோற்றுவாய் மதமாகும்.

அதாவது பௌத்த மதத்தை ஆளும் மதமாக்குவதும் அதனை நிறைவேற்றுவதுமான செயற்பாடுகளே, இந்த நாட்டில் ஏற்பட்ட அத்தனை அவலங்களுக்கும் காரணமாகும்.

இப்போது கூட தமிழர் பகுதிகளில் உள்ள அரச மரங்கள் தோறும் புத்தபெருமானை குடியிருத்தும் நடவடிக்கையும் தமிழர் பிரதேசங்களில் அளவுக்கு அதிகமாக வெசாக் பண்டிகைகள் களைகட்ட வைப்பதுமான செயற்பாடுகள் பௌத்த மதத்தின் ஆட்சி என்பதை நிலைநிறுத்துவதற்கானதாகும்.

மிகக் கொடூரமான போரைச்சந்தித்து, அதில் தங்கள் உறவுகளை பலிகொடுத்து விட்டு குடியிருக்க இடமின்றி பேரவலத்தில் விக்கி அழும் தமிழர் பிரதேசங்களில் பெரும் எடுப்பில் – பெரும் செலவில் வெசாக் சோடனைகள் செய்வது என்பது கௌதம புத்தபிரானுக்கு பிடித்தமான செயல் அன்று .

புத்தபிரானின் போதனைக்கமைய சிந்திப்பதாயின் முதலில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் காயங்கள் ஆற்றப்பட வேண்டும்.

அதற்கான மீள் கட்டுமானங்கள் முன்னெடுக்கப்படுவதே உடனடித் தேவையாக இருக்கும்.

இதைச் செய்யாமல் விடுத்து , மதக்கொண்டாட்டங்களைப் பெரும் எடுப்பில் கட்டாப்புச் செய்வது கடும் கூர் கடும் மொட்டை என்பதை குறித்து நிற்கும் என்று அறிவது அறிவுடைமையாகும்.

# 414 மில்லியன் ரூபா மின்கட்டணம் வடக்கில் வசூலிக்கப்படவேண்டியுள்ளது

## கிளி.பிராந்திய மின்பொறியியலாளர் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

வட மாகாணத்தில் நான்கு மாவட்டங்களில் 414 மில்லியன் ரூபா மின் கட்டணம் அறிவிடப்படவேண்டியுள்ளமையினால் நாம் கட்டணத்தை செலுத்தாத இணைப்புக்களை வேகமாகத் துண்டித்து வருகின்றோம் என கிளிநொச்சி பிராந்திய பிரதான மின் பொறியியலாளர் செல்வராஜா பிரபாகரன் தெரிவித்தார்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு வருவது தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவில் 65 ஆயிரத்து 534 வாடிக்கையாளர்கள் உள்ள நிலையில் 414 மில்லியன் ரூபா வசூலிக்கப்படவேண்டியுள்ள நிலை காணப்படுகின்றது.

இதன்படி ஒவ்வொரு மாதமும் சராசரியாக 100 மில்லியன் ரூபா தேக்கம் காணப்படுவதுடன் பாவனையாளர்கள் 5 மாதங்கள் வரையில் மின் கட்டணத்தை கட்டாமல் உள்ளனர்.

எனவே, நாம் 3 மாதங்கள் மின் கட்டணம் செலுத்தாதவர்களுக்கு மின் இணைப்பைத் துண்டித்து வருகிறோம். குறிப்பாக நாம் 130 மில்லியன் ரூபாவை உடனடி வசூலிப்பு என்ற இலக்கை அடிப்படையாகக்கொண்டு தற்போது செயற்படுவதுடன் சில இடங்களில் 2 மாதங்கள் மின் கட்டணம் செலுத்தாதவர்களது மின்னிணைப்பையும் துண்டித்துள்ளோம்.

மார்ச் மாதம் 4.54 மாத அளவிலான நிலுவையாகக் காணப்பட்ட இலக்கை தற்போது 4.14 மாத அளவிலான நிலுவை என்ற நிலைக்கு கொண்டு வந்துள்ளோம். எனினும் 3 மாத அளவிலான நிலுவை என்ற நிலைக்கு வெகுவிரைவாக கொண்டு வருவோம்.

குறிப்பாக வவுனியாவில் ஆயிரத்து 200 மின் இணைப்புக்களும் மன்னாரில் 700 மின்னிணைப்புக்களும் கிளிநொச்சியில் 100 மின்னிணைப்புக்களும் முல்லைத்தீவில் 80 மின் இணைப்புக்களும் இதுவரை துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான மின்னிணைப்பை துண்டிப்பதற்கு முன்னராக நாம் வவுனியா, மன்னார் போன்ற பிரதேசங்களில் ஒலிபெருக்கி மூலமாக அறிவிப்பினை மக்களுக்கு வழங்கியுள்ளோம். எனவே நாம் தொடர்ச்சியாக இச்செயற்பாட்டை முன்னெடுப்போம்.

எனவே மக்கள் இது தொடர்பில் கரிசனை கொண்டு மின்கட்டணத்தை செலுத்துவதனூடாக இவ்வாறான மின்னிணைப்பு துண்டிப்பை தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (செ-2-266)

# இலங்கை தமிழர்களுக்கு உதவ காங்கிரஸால் மட்டுமே முடியும்

## ஞானதேசிகன் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்கு காங்கிரஸ் கட்சி மட்டுமே உதவி செய்ய முடியும் என தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் பி.எஸ்.ஞானதேசிகன் தெரிவித்துள்ளார்.

கோவை சூலூர் அருகே உள்ள பட்டணம் புதூரில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் சிலை மர்ம நபர்களால் சேதப்படுத்தப்பட்டது. இது மீண்டும் புதுப்பிக்கப்பட்டு புதிய சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. இச் சிலையை பி.எஸ். ஞானதேசிகன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் அவர் உரையாற்றுகையில், சத்தீஸ்கரில் மாவோயிஸ்ட்டுகள் நடத்திய தாக்குதலில் காங்கிரஸ் தலைவர், அவரது மகன் மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் உள்ளிட்ட பலர் கொல்லப்பட்டுள்ளனர். குறித்த தாக்குதல் சம்பவம் கடும் கண்டனத்துக்குரியது.

இதுபோன்ற தாக்குதல் நடத்தும் வன்முறை இயக்கங்களை தடுத்து நிறுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பட்டணம் புதூரில் வைக்கப்பட்டிருந்த ராஜீவ்காந்தி சிலை சேதப்படுத்தப்பட்டது. தற்போது சிலை புதுப்பிக்கப்பட்டு அதே இடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு ராஜீவ் காந்தி பல்வேறு உதவிகளை செய்துள்ளார். இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அமைதிப்படையை அனுப்பியுள்ளார். ஆனால், அமைதிப்படையை அனுப்பி தமிழர்களைக் கொன்றார் என அவரது நல்லெண்ணத்துக்கு எதிராக பொய்ப் பிரசாரம் செய்கின்றனர். இலங்கை தமிழர்களுக்கென நாலாயிரம் கோடி ரூபா நிதியை ஒதுக்கி பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இந்திய அரசு செய்து வருகிறது.

இலங்கை தமிழர்களுக்கு காங்கிரஸ் கட்சியால் மட்டுமே உதவி செய்ய முடியும் என அவர் இதன்போது கூறினார்.(செ-2)

# புகையிலை மற்றும் மதுபான சட்டங்கள் திருத்தப்படவுள்ளது

## சுகாதார அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

புகையிலை மற்றும் மதுபான கட்டுப்பாட்டுச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

புகையிலை மற்றும் மதுபான பாவனை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்த சாதக தன்மைகளை கொண்டு திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாக சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொது மக்கள் நடமாடும் அனைத்து பொது இடங்களிலும் புகைப்பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும் இதில் வீதியோரங்கள் உள்ளடக்கப்படவில்லை என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக வீதிகளில் புகை பிடிப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதென அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்நிலையில் புகையிலை மற்றும் மதுபான கட்டுப் பாட்டுச் சட்டத்தில் கடுமையான திருத் தங்கள் கொண்டு வரப்படவுள்ளதென சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (செ-2)

# ஆனையிறவு ஏ-9 வீதியில் ஆட்டோ- ஹயஸ் விபத்து

## ஐவர் படுகாயம்

(கனகபுரம்)

முச்சக்கரவண்டியுடன் ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளாகியதில் முச்சக்கரவண்டி சாரதி உட்பட பயணித்தவர்கள் அனைவரும் படுகாயம் அடைந்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக தெரிய வருவதாவது, ஆனைக்கோட்டையிலிருந்து முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் திருவிழாவுக்காக ஆட்டோவில் சென்று கொண்டிருந்த போது, ஆனையிறவு ஏ9 வீதியில் பின்னால் வந்த ஹயஸ் வாகனம் ஆட்டோவுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றுள்ளது.

அதில் ஆட்டோ சாரதி சிவயோகம் என்பவரும் ஆனைக்கோட்டை மூத்த விநாயகர் கோவிலடியைச் சேர்ந்த மனோகரன் (வயது 65), பவளராணி (வயது 54) தம்பதியினரும், பிள்ளைகளான யசோதா(வயது19), டினேஸ் (வயது8) ஆகியோர் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஹயஸ் வாகனச் சாரதியை பொலிஸார் கைது செய்து மேற்படி விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-259)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## ஊக்கத்துடன் முன்னேறுங்கள்



- நம்மிடத்தில் நம்பிக்கை, கடவுளிடத்தில் நம்பிக்கை இதுவே வெற்றி பெறுவதற்கான பரம இரகசியம்.
- தன்னம்பிக்கை கொண்ட சிலரின் வாழ்க்கை வரலாறே உலக சரித்திரமாக விளங்குகிறது.
- பாவம் என்ற ஒன்று உலகில் இருக்குமானால் அது நான் பலவீனமானவன், மற்றவர்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வது ஒன்றுதான்.
- சுதந்திரமானவர்களாக வாழுங்கள். எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்த்துக் காத்திருக்காதீர்கள்.
- இல்லை என்றோ என்னால் இயலாது என்றோ ஒருபோதும் சொல்லாதீர்கள். உங்களால் எதையும் சாதிக்கமுடியும்.
- தோல்வியைப் பொருட்படுத்தாதீர்கள். ஆயிரம் முறை தோற்றாலும் மீண்டும் ஒருமுறை முயற்சியில் இறங்குங்கள்.
- சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்மகனையே திருமகள் விரும்பி சேர்கிறாள். கடந்து வந்த பாதையைப் பின்னால் திரும்பிப் பார்க்கத் தேவையில்லை. ஊக்கத்துடன் முன்னோக்கிச் செல்லுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூது கௌவிய 6 ஆவது PEPSI IPL

இதுவரை நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகளை விட பல சர்ச்சைகளுக்கு முகம் கொடுத்து சூதாட்டத்தினால் சிக்கித் திணறி முடிவுக்கு வந்துள்ளது 6 ஆவது ஐ.பி.எல.

கிரிக்கெட் வீரர்களில் ஆரம பித்து தரகர்கள், திரையுலக நடிகர்கள், இயக்குநர்கள், கிரிக்கெட் சபை பிரபலங்கள், ஹொட்டல் அதிகாரிகள் என நீண்டு கொண்டே செல்கின்றது சூதாட்ட பட்டியல். இதுவரை சூதாட்டத்துடன் சம்பந்தப்பட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். சிலர் வெளிநாடுகளுக்கு தப்பி ஓடி விட்டனர். அதிகளவானோர் பொலிஸ் விசாரணையில் சிக்கியுள்ளனர். அத்துடன் சூதாட்ட சர்ச்சையில் ராஜஸ்தான் ரோயல், சென்னை சுப்பர் கிங்ஸ், பஞ்சாப் என பல அணிகளில் உள்நாட்டு, வெளிநாட்டு வீரர்கள் சிக்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


### இறுதி ஆட்டம்

பலத்த சூதாட்ட சர்ச்சைகளுடன் இறுதி ஆட்டத்தில் களமிறங்கிய சென்னை அணியை 23 ஓட்டங்களால் வெற்றிகொண்டு முதன் முதலில் ஐ.பி.எல். இல் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது மும்பை இந்தியன்ஸ்.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பை அணி முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கெட்டுக்களை இழந்து 148 ஓட்டங்களைப் பெற்றது. அதிரடியாக ஆடிய பொலட் 60 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு வெற்றிகொள்ளக்கூடிய இலக்கைத் துரத்திய சென்னை அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 125 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. தனி மனிதனாக நின்று போராடிய தோனி ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆட்டநாயகனாக பொலட்டும் தொடர் நாயகனாக வொட்சனும் தெரிவாகினர்.



மைக்கல் ஹசி



டுவைன் பிராவோ

### தோல்விக்கு வித்திட்டனர்

சென்னை அணியின் ரெய்னா, பத்ரிநாத், ரவீந்திர ஜடேஜா, கிறிஸ் மோரிஸ் ஆகியோர் எதுவித ஓட்டங்களையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்கள்.

### தொப்பிகள்

அதிக ஓட்டங்கள் எடுத்தவருக்கான ஒரேஞ் தொப்பியும், அதிக விக்கெட் வீழ்த்தியவருக்கான ஊதாத் தொப்பியும் சென்னைக்கே கிடைத்தது.

### ஒரேஞ் தொப்பி

இம்முறை அதிக ஓட்டங்கள் எடுத்த வீரர்கள் வரிசையில் சென்னை அணியின் மைக்கல் ஹசி முதலிடம் பிடித்தார். இவர், 17 போட்டியில் 6 அரைசதம் உட்பட 733 ஓட்டங்கள் எடுத்தார். இதன்மூலம் அதிக ஓட்டங்கள் எடுத்தவர்களுக்கான 'ஒரேஞ்' தொப்பியை கைப்பற்றினார். இதன்மூலம் 2012இல் அதிக ஓட்டங்களைக் குவித்த கெய்லுடன் தன்னை இணைத்துக் கொண்டார்.

### ஊதா தொப்பி

அதிக விக்கெட் கைப்பற்றிய பந்து வீச்சாளர்கள் பட்டியலில் சென்னை அணியின் டுவைன் பிராவோ முதலிடத்தை கைப்பற்றினார். இவர் 18 போட்டியில் 32 விக்கெட் வீழ்த்தினார். இதன்மூலம் அதிக விக்கெட் கைப்பற்றியவர்களுக்கான ஊதா நிற தொப்பியை வென்றார்.

### பதிலடி

கடந்த 2010இல் மும்பையில் நடந்த இறுதியாட்டத்தில் சென்னை அணி 22 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பை அணியை வீழ்த்தியது. இதற்கு இம்முறை மும்பை அணி பதிலடி கொடுத்து கிண்ணத்தை சுவீகரித்தது.

### குறைந்த ஓட்டம்

இறுதியாட்டத்தில் 125 ஓட்டங்கள் எடுத்த சென்னை அணி, பிறீமியர் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் வரலாற்றில் மிகக் குறைந்த ஓட்டத்தை பதிவு செய்தது. முன்னதாக 2009 இல் நடந்த டெக்கான் அணிக்கு எதிரான இறுதியாட்டத்தில் பெங்களூர் அணி 137 ஓட்டங்கள் எடுத்தது.

### இதுவரை சம்பியன்கள்


பிறீமியர் கிரிக்கெட் வரலாற்றில் சென்னை அணி இரண்டு முறை (2010, 11) ராஜஸ்தான் (2008), டெக்கான் (2009), கொல்கத்தா (2012), மும்பை (2013) அணிகள் தலா ஒரு முறை சம்பியன் பட்டம் வென்றன

### 10 கோடி பரிசு

ஆறாவது பிறீமியர் கிரிக்கெட் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற மும்பை அணிக்கு கிண்ணத்துடன், ரூ. 10 கோடி பரிசு வழங்கப்பட்டது. இரண்டாவது இடம் பிடித்த சென்னை அணிக்கு ரூ. 7.5 கோடி வழங்கப் பட்டது.



ஷேன் வொட்சன்



கிரன் பொலட்

## 76 போட்டிகளில்....

- 6ஆவது ஐபிஎல் தொடரில் மொத்தம் 76 போட்டிகள் நடைபெற்றன.
- மொத்தம் 22,541 ஓட்டங்கள் குவிக்கப்பட்டன.
- இவற்றுள் 2051 பவுண்டரிகள்
- 674 சிக்ஸர்கள்
- அதிக சிக்ஸர்களை விளாசிய அணி சம்பியனான மும்பை இந்தியன்ஸ் தான். மொத்தம் 117 சிக்ஸர்களை அந்த அணி விளாசியது.
- ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி அதிக அளவிலான பவுண்டரிகளை பெற்றது. மொத்தமம் 267பவுண்டரிகளை அந்த அணியின் வீரர்கள் பெற்றனர்.
- இந்தப் போட்டிகளில் மொத்தம் 909 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டுள்ளன
- இந்தத் தொடரில் மொத்தம் 4 சதங்களே எடுக்கப்பட்டன. பெறப்பட்ட அரைசதங்களின் எண்ணிக்கை 97 ஆகும்.
- பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ் அணியின் சிக்ஸர் மன்னன் கெய்ல் அதிக அளவிலான சிக்ஸர்களை விளாசினார். இவர் 16 போட்டிகளில் 61 சிக்ஸர்களை பறக்கவிட்டார்.
- தனி ஒரு வீரர் எடுத்த அதிக ஓட்டங்கள் என்ற பெருமையும் கெய்லுக்கே. புனே வாரியர்ஸ்க்கு எதிராக 175 ஓட்டங்களை குவித்து இந்த சாதனையை படைத்தார்.
- அணியின் அதிகபட்ச ஓட்டமாக ரோயல் சலஞ்சேர்ஸ், புனே வாரியர்ஸ்க்கு எதிராக பெற்ற 263 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது.
- ஒரு அணியின் குறைந்தபட்ச ஓட்டமாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி எடுத்த 79 ஓட்டங்கள் பதிவாகியுள்ளது.

## சச்சின் ஓய்வு



6ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட்டின் சென்னை சுப்பர் கிங்ஸ் உடனான இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்று முதற் தடவையாக கிண்ணத்தைக் கைப்பற்றியது.

இந்த வெற்றியை அடுத்து மும்பை இந்தியன்ஸ் அணியில் விளையாடிய சச்சின் டெண்டுல்கர் ஐ.பி.எல். விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

இதுகுறித்து சச்சின் கூறுகையில்,

உலகக்கிண்ணத்தை பெறுவதற்கு நான் 21 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், இந்த ஐ.பி.எல். கிண்ணத்தை பெற நான் 6 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது.

எனவே இந்த நல்ல தருணத்தில் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இருந்து விலகுகிறேன். இனி அடுத்த ஐ.பி.எல். கிரிக்கெட்டில் நான் விளையாடமாட்டேன் இவ்வாறு கூறினார் சச்சின் .

# ஏன் தோற்றோம்

## விபரிக்கிறார் தோனி

லீக் போட்டி, பிளே ஒவ் சுற்று இல் சிறப்பாக விளையாடிய சென்னை அணி, மும்பை இந்தியன்ஸ் உடனான இறுதியாட்டத்தில் மண் கவ்வியது.

இந்த தோல்வி குறித்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி கூறுகையில்,

மோசமான துடுப்பாட்டத்தால் கிண்ணத்தை இழந்ததாக கருதுகிறேன். மைக் ஹஸ்சி, ரெய்னாவும் எளிதில் ஆட்டமிழந்து விட்டனர். அவர்கள் ஆட்டம் இழந்த அந்த பந்துகள் மிகவும் சிறப்பாக வீசப்பட்டவையாகும். அடுத்து வந்த வீரர்கள் யாரும் நிலைத்து நிற்கவில்லை. நல்ல இணைப்பாட்டம் அமைவது முக்கியமானது. அப்படி நடக்கவில்லை.

மும்பை அணியை 148 ஓட்டங்களுக்குள் கட்டுப்பத்தியது சிறப்பானதுதான். ஏனென்றால் எங்களது துடுப்பாட்டம் பலம் வாய்ந்தது. ஆனால் துடுப்பாட்டத்துறை முற்றிலும் தோல்வி அடைந்துவிட்டது. "லீக்" ஆட்டத்தில் நெருக்கடி எதுவும் ஏற்படாமல் இறுதிப்போட்டிக்கு நாங்கள் நுழைந்தது இதுவே முதல் முறையாகும் என்றார்.

# மெய்யப்பனுக்கு தடை

சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் குருநாத் மெய்யப்பன் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் தடைசெய்யப்பட்டுள்ளார். விசாரணைகள் முடிவடையும்வரை இந்தத் தடை அமுலில் இருக்கும். இந்தியன் பிறீமியர் லீக் தொடரின் விதிகளுக்குப் புறம்பாகச் செயற்பட்டார் என்பதற்காகக் கைது செய்யப்பட்டுள்ள நிலையிலேயே குருநாத் மெய்யப்பனுக்கு எதிராக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விசாரணைகள் முடிவடையும்வரை கிரிக்கெட் சம்பந்தமான எந்தவொரு நடவடிக்கைகளிலும், சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தொடர்பான எந்த நடவடிக்கைகளிலும் குருநாத் மெய்யப்பன் ஈடுபட முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.


அகில இலங்கையில் முதன்முதலாக ஆகம முறைப்படி நடைபெறும் துவாரகமயி பாபா விக்ரக

மஹா கும்பாபிஷேகம் (29.05.2013)

அன்பான பக்தர்களே!
**பிரதிஷ்டை** : (28.05.2013) இன்று
இரவு 10.22 முதல் 11.52 இற்குள்
**பாற்காப்பு** : (29.05.2013)
நாளை புதன்கிழமை
காலை 6 மணிமுதல் 10.30 மணிவரை
**பாற்குட பவனி** : காலை 9 மணிக்கு
**மஹா கும்பாபிஷேகம்** : புதன்கிழமை
(29.05.2013) காலை 11.52 இற்குள்
நண்பகல் 12 மணிக்கு பூசை அன்னதானம்
**பிரதம குரு** : பிரம்மஸ்ரீ
தா.வாசுதேவசிவாச்சாரியார் தலைமையில்



**சீரடி சாயி மந்திர்,**
314, நாவலர் வீதி, நல்லூர்.
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777 222 568
021 321 1605
பா.ராகவன் (ஸ்தாபகர்),
அடியார்கள்.
(2825)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர்லாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான்




அயர்லாந்துக்கு எதிரான இரண்டாவது ஒருநாள்போட்டியில் பாகிஸ்தான் அணி 2 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அயர்லாந்து சென்ற பாகிஸ்தான் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது.

இரு அணிகளுக்குமிடையிலான முதல் போட்டி சமநிலையில் முடிபடைந்தது. இந்நிலையில் இரண்டாவது போட்டி டப்ளின் நகரில் நேற்று முன்தினம் நடந்தது.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாநது அணி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுகளை இழந்து 229 ஓட்டங்களை எடுத்தது. இதில் பொறுப்பாக ஆடிய எட் ஜாய்சி 116 ஓட்டங்களை எடுத்தார்.

பாகிஸ்தான் சாரில் அப்துர் ரஹ்மான் 4, யூனைட்கான 2 விக்கெட் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.4 ஓவர்களில் எட்டு விக்கெட்டுகளை இழந்து 230 ஓட்டங்களை எடுத்து வெற்றியை தனதாக்கியது. பாகிஸ்தான் அணி சார்பாக சொயிப் மலிக் (43), கம்ரான அக்மல் (81), வாகாப் றியாஸ் (47) ஓட்டங்களை எடுத்தனர்.

இந்த வெற்றியின்மூலம் இரண்டு போட்டிகள் கொணட தொடரை பாகிஸ்தான் அணி 1-0 என கைப்பற்றியது.

ஆட்டநாயகன் விருதை பாகிஸ்தானின் கம்ரான் அக்மல் வென்றார்.

தொடர் நாயகன் விருது அயர்லாந்தின் கெவின் ஓபிரையனுக்கு வழங்கப்பட்டது.




## துடுப்பாட்ட சுற்றுப் போட்டி நியூஸ்டாரை வீழ்த்தியது ஸ்டான்லி

ஜொலிஸ்டார்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் 30 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் இந்து கல்லூரி மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இச் சுற்றுப்போட்டியின் ஆட்டமொன்றில் ஸ்டான்லி விளையாட்டுக்கழக அணியினை எதிர்த்து நியூஸ்டார்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத தாடிய ஸ்டான்லி விளையாட்டுக்கழகம் 22.4 பந்துபரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் லெனின 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பந்துவீச்சில் நியூஸ்டார்ஸ அணி சார்பாக சஞ்சீபன் 4 இலக்குகளைக் கைப்பற்றினர்.

128 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூஸ்டார்ஸ் விளையாட்டுக்கழக அணி 124 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்து 3 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் றொசான 32, கஜேந்திரா 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் வசீகரன் 5 இலக்குகளைக் கைப்பற்றினார்.

## பொன்னையா சிவலிங்கம் ஞாபகார்த்த வலைப்பந்தாட்டம்

அரியாலை சனசமூக நிலையத்தினால் தமது 64 ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு அமரர் பொன்னையா சிவலிங்கம் ஞாபகார்த்தமாக வலைப்பந்தாட்டச்சுற்றுப்போட்டியொன்றை நேற்று முன்தினம் தமது விளையாட்டு மைதானத்தில் நடத்தியது.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆறு விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றிய மேற்படி சுற்றுப்போட்டியின் முதல் அரையிறுதியாட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழக ஏ அணியினை எதிர்த்து ஒளி ஸ்டார்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் யூனியன் விளையாட்டுக்கழக ஏ அணி 23:05 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் யூனியன் விளையாட்டுக்கழக பி அணியினை எதிர்த்து அரி யாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் மோதியது.

இப்போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம 18:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

# இனப் படுகொலையாளி...

அவர் இது தொடர்பாக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

நாஜிக்கள் என்ற ஹிட்லர், யூதர் இனத்தை அழித்ததற்கு உரிய தண்டனையை பல்வேறு வகைகளில் தீர்ப்புகளில் பெற்று, குற்றம் புரிந்த கொடுங்கோலன் என்று தீர்ப்பாகியது.

உகண்டா நாட்டு இடிஅமீன்கள் இருந்த இடத்தை வரலாற்றுக் குப்பைத் தொட்டியல் எங்கு தேடினாலும் கண்டுபிடிக்க முடியபில்லை!

இலங்கையில் ஈழத்தமிழர் எழுச்சியை அறவே அடக்கி விட்டோம் அந்த இனத்தையே பூண்டற்றுப் போக அழித்தே தீருவோம் என்று சபதமேற்ற இலங்கை அரசு அந்தப் பணியில் பெரும் பகுதியை செய்து முடித்து வெற்றியை முத்தமிட்டு விட்டோம் என்று முழங்குகிறார்கள்.

முள்ளிவாய்க்கால் படுகொலை சாதாரணமானதா? விடுதலைப்புலிகளின்வேட்டை என்ற பெயரால் ஈழத்து எழுச்சிச் சின்னங்களான இளைஞர்களை அறவே அழித்திட பல வகை முறைகளைக் கையாண்டுள்ளன.

ஈழத்துத் தமிழிச்சிகள் சுமார் 90 ஆயிரம் பேர் விதவைகள் என்ற கொடுமையைக கண்டு வெற்றிப் புன்னகை புரிகின்றன - மனிதாபிமான மற்ற மரக்கட்டைகள்.

இந்தக் கொடுமையாளர்களுக்கு - போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனையே கிடையாதா என்று வேதனையோடும், வெந்த நெஞ்சின் புண்களோடும் கேள்வி கேட்கும் மனிதநேயர்களுக்கு ஓர் அருமையான வரலாற்று நிகழ்வு அண்மையில் நடந்துள்ளதைச் சுட்டிக் காட்ட விழைகிறோம்.

1982இல் மத்திய அமெரிக்கக் கண்டத்து நாடுகளில் ஒன்றான கவுதமாலா என்ற நாட்டின் இன்றைய நடப்பு ஒரு நல்ல எடுத்துக்காட்டாகும்.

கவுதமாலா நாடு, ஒரு சிறிய மத்திய அமெரிக்க நாடு. அங்குள்ள பூர்வீக குடியினர், மாயர்கள் என்பது வரலாற்றில் முக்கியமானது.

அந்த நாட்டில் 1982ல் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார் இராணுவத் தளபதி ஜெனரல் எப்ரெயின் ரியோஸ் மாண்ட என்பவர். இந்தப் புரட்சி மூலம் மலைப் பகுதிகளில் இருந்த மண்ணின் மைந்தர்களான 'இக்சில்மாயன்' என்ற பூர்வீக இன மக்களைக் கொன்று குவித்தான். மொத்தமுள்ள ஜனத்தொகை ஆறரைக் கோடியில், 2 லட்சத்து 50 ஆயிரம் மாயர்கள் கொலலப்பட்டனர்.

17 மாதங்கள் கொண்ட குறுகிய கால ஆட்சியில் ஈவிரக்கமற்ற முறையில் இந்த சர்வாதிகாரி இச்சில் மாயன் இன மக்களில் 5 விழுக்காடுகளுக்கு மேல் படுகொலை செய்தான்.

இந்த இனப்படு கொலைக்காக நீதி கேட்டு, கடந்த 30 ஆண்டுகளாக மனித உரிமை இயக்கங்கள் போராடி வந்தன. அதில் நீதி கிடைக்காமல் தாமதிக்கப்பட்டே வந்தது.

30 ஆண்டுகளுக்குப் பின் நீதி கிடைத்துள்ளது இப்போது அவர் ஆட்சியை இழந்ததின் நல்ல விளைவு இது.

பல வகை சூழ்ச்சி, சாமர்த்தியங்களால் தேர்தலில் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குள் நுழைந்ததின் மூலம் இந்தக் குற்றச்சாட்டுக்களிலிருந்து விதிவிலக்குப் பெற்று நியாயம் நீதியின் கரங்களிலிருந்து தப்பித்தே வந்தான்.

இரண்டாண்டுகளுக்கு முன் முதல் முறையாக அவன் தேர்தலில் தோல்வியுற்றான்.

அந்த மகிழ்ச்சியின் செய்தியை அறிந்த மனித உரிமை இயக்கங்களும், மற்ற உள்நாட்டு அமைப்புகளும் அவன் மீது வழக்குத் தொடுக்கக் கோரிக்கை வைத்தனர்.

இந்த வழக்கு நீதிமன்றத்தில் நடந்த போது நீதிபதி கவுதமாலாவின் பெரும்பான்மையராக இருக்கும் 21 மாயன் இனக் குடிகளில், இக்சில் மாயன் இனத்தவர்களை, அடியோடு அழிக்கும் செயல் திட்டமிட்டே ரியா மாண்டிற்கு நன்கு தெரிந்தே நடந்துள்ளது. அவர் நினைத்திருந்தால் இந்தப் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தியிருக்கலாம்!" என்று கூறியுள்ளார்.

நாட்டின் உயர்நீதிமன்றம், கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற விசாரணையை மீண்டும் மறுபரிசீலனை செய்யுமாறு ஆணையிட்டது.

காரணம் தற்போது நாட்டின் தலைவராக இருக்கும் பூட்டோபெரே மோலினா எனபவர் 1980-களில் இக்சில் மாயன்கள் என்ற இனத்தவர் வாழ்ந்த் பகுதியில் இராணுவத் தளபதியாக இருந்த போது அவர்களின் குடிசைகளை எரிப்பதற்கு ஆணையிட்டார் என்ற குற்றச்சாட்டு கொண்டு வரப்பட்டது. இதனால் ரியாமாண்ட் மீதான வழக்கு கால தாமதம் ஆனது.

ஆனால் இறுதி நீதி வென்று விட்டது.

இதற்குமுன் லத்தின் அமெரிக்க நாடுகளில், சில சர்வாதிகாரிகள் தண்டிக்கப்பட்டு சிறைக்குப் அனுப்பப்பட்டார்கள் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-2)

## தீக்குளி...

தினர்.

அதன் பின்னர், கண்டி நகரின் வீதிகள் ஊடாக சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் வர்த்தக நிலையங்கள், கட்டடங்கள் மற்றும் வீடுகளில் இன்று மஞ்சள்நிற கொடியைப் பறக்க விடு மாறும் மக்களிடம் கோரிக்கை விடுத்தனர். (செ-11)

## சீர்குலைந்த நிலை...

தாக்குதல் நடத்தப்பட் டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

மேலும் கடந்த ஏப்ரல் மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற பொது பல சேனா இயக்கத்திற்கு எதிரான மெழுகுவர்த்தி விழிப்புணர்வு போரா்ட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

வடக்கில் இந்த நிலைமை மிகவும் மோசமாக காணப்படுகின்றது என அவ் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை சூழல் பாதுகாப்பு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இம் மாநாட்டில் கலந்து கொண்டார்.

இலங்கை பிரதிநிதிகள் முன்னர் இம் மாநாட்டில் கலந்து கொள்ள மாட்டார்கள என செய்திகள் வெளியாகியிருந்த நிலையில் அமைச்சர் சுசில் இந்த மாநாட்டில் கலந்து கொணடிருந்தமை குறிபபிடத்தக்கது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதிக்கான உரிமைகள்...

வாழ்வதற்கான அங்கீகாரம் அரசியல்யாப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் முஸ்லிம்களுக்கு பள்ளிவாசல்கள் அளவுக்கு அதிகமாகக் காணப்படுகின்றன. எனவே அவற்றை உடைக்க வேண்டும் என்று சில அடிப்படைவாத அமைப்புக்கள் கூறிவருகின்றன.

இந்தப் பள்ளிவாசல்கள் அவர்கள் குறிப்பிடுவது போல் சட்டவிரோத கட்டிடங்களாக இருக்குமானால் அவற்றை உடைக்க நாம் தயாா. ஆனால் அவை பள்ளி வாசல்களாக மட்டும் இருக்கக் கூடாது. சட்ட விரோதமான முறையில் மற்றவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ள எல்லா வழிபாட்டுத் தலங்களும் தகர்க்கப்பட வேண்டும் என்பதுதான் எமது கருத்தாகும்.

தம்புள்ள பள்ளிவாசலை இவாகள் உடைக்கப் போகின்றார்கள் என்பதை அறிந்து நான் ஜனாதிபதியிடம் அது பற்றி முன் கூட்டியே தெரிவித்தேன். ஆனார்ல் அதுபற்றி எந்த நடவடிக்கையும்எடுக்கப் படவில்லை.

இதற்கு மாறாக முஸ்லிம்களுக்கு எதிரான போக்குகள்நாளுக்கு நாள் அதிகரிகக் தொடங்கின. ஹலால் பிரச்சினையை அவர்கள் தொடங்கிய போது பிரதான பிரச்சினை ஹலால விடயமல்ல முஸ்லிம்களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்ற மனோபாவமேயாகும். இது தொடர்பான உண்மை நிலைகளை நாம் அவ்வப்போது ஊடகங்கள் வாயிலாக மக்களுக்கு தெரியப் படுத்தினோம். அதன் பலன் என்னை பயங்கரவாதி என்றும் பயங்கரவாத தலைவன் என்றும் கூறி பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்தார்கள்.

நான் ஜனாதிபதியிடம் மன்னிப்புக் கேட்ட பிறகே விடுதலை செய்யப்பட்டதாக அரச ஊடகங்களில் பொய்யான பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நான் அவ்வாறு யாரிடமும் மன்னிப்புக் கோரவில்லை.

நான் இன்றும் சொல்கிறேன் நான் பயங்கரவாதி அல்ல. எந்தவொரு பயங்கரவாத குழுவையும் ஆதரித்தவனும் அல்ல.

நான் பயங்கரவாதி என்பதை முடியுமானால் நிரூபித்துக்காட்டுங்கள். நான் சகல மக்களினதும் அமைதிக்காகவும் சமாதானத்துக்காகவும், சம உரிமைக்காகவும் குரல் கொடுப்பவன்.

இந்த நாட்டில் சமாதானத்துக்கு கேடு விளைவித்தவர்கள். இராணுவத்தினரையும், அப்பாவி பொதுமக்களையும், மதகுருமாரையும் துடிக்கத் துடிக்க கொன்று குவித்தவர்கள் இன்று இந்த நாட்டில் அரசாங்கத்தின் சகல வசதிகளுடனும், பாதுகாப்புடனும், பிரபுக்கள் நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களெல்லாம் இப்படியே இருக்க மக்களின் சமாதானத்துக்காக குரல்கொடுத்தவர்களை பயங்கரவாதி என கின்றனர்.

அநுராதபுரத்தில் ஒரு பள்ளிவாசலை உடைக்குமாறு நகரபிதாவே கடிதம் அனுப்பி வைத்துள்ளார். நீங்களாக உடைக்காவிட்டால் நாங்கள உடைப்போம் என்றும் அதில் எச்சரிக்கப் பட்டுள்ளது.

அதேபோல் அக்குறனை பிரதேசத்தில் எட்டு பள்ளிவாசல்களில் பங்கர்கள் உள்ளதாக இதே அடிப்படைவாத குழுவினர் கூறுகின்றனர். இதை சட்டப்படி நிரூபித்தால் நாம் சட்டத்துக்கு கட்டுப்படும் பிரஜைகள் என்ற வகையில் தேவையான நடவடிக்கைகளை எடுக்கத் தயாராக உள்ளோம்.

மாவனல்லை பிரதேசத்திலும்ஒரு பள்ளிவாசல்அமைநதுள்ள இடத்தில் புதையல் இருப்பதாகவும் எனவே அந்தப் பள்ளிவாசலை அகற்ற வேண்டும் என்றும் இவாகள கோஷமிடத் தொடங்கியுள்ளனர்.

முஸ்லிம்களும் அவர்களின்வழிபாட்டுத்தலங்களும் எதிர்நோக்கியுள்ள ஆபத்துக்கள் குறித்து நாம் தொடர்ந்து குரல் கொடுப்பதோடு அவற்றுக்கு எதிரான நடவடிக்கைகளையும் மேற்கொள்வோம் என்று அசாத் சாலி கூறினார். (செ-11)


## வீடு விற்பனைக்கு

பலாலி வீதி – கோண்டாவில் சந்திக்கு அருகில் நிலப்பரப்பு1 குளி 15.50 விஸ்தீரணமும் கொண்ட கல்வீட்டுடன் கூடிய ஆதனம் விற்பனைக்குண்டு. (2856)

தொடர்பு: 0777 111 400

## சோதிடம்

இலங்கை வாழ் வட பகுதி மக்களின் அமோக வரவேற்பைப் பெற்ற

S.பேகன்

தஞ்சாவூரிலிருந்து இலங்கை வந்துள்ளார்

சந்திப்பு நேரம்: 9 AM - 5 PM

தொடர்புகட்கு – 075 087 4661, 021 222 2829

பிள்ளையார் இன் ஹோட்டல்

No. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (c-3436)


## நவநீதம்...

உரிமைகள் சபையின் 23 ஆவது ஒழுங்குமுறை அமர்வின்போது இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்ஹ தெரிவித்துள்ளார்.

நவநீதம் பிள்ளையின் விஜயம், இலங்கையின் நல்லிணக்கத்துக்கு உந்துதலை வழங்கும் என றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நவநீதம் பிள்ளையின் விஜயம்மூலம்இலங்கைக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவைக்கும் இடையில் நட்புறவு ஏற்படும் என்றும் ஆரியசிங்ஹ தெரிவித்துள்ளார். (செ-11)

## மற்று...

அவர்களில் இருந்த மாளிகாநத சுதத்த தேரர் பெற்றோல் போத்தல் ஒன்றை கொண்டு வந்து தன் மீது அதனை ஊற்றி தீ குளிக்க முயற்சித்துள்ளார். இதனையடுத்து பாதுகாப்பு தரப்பினர் தலையிட்டு அதனை தடுத்து நிறுத்தியுள்ளனர். (செ-11)


## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில் பகுதியில் நான்கு பேர் கொண்ட குடும்பமொன்றுக்கு வீடு வாடகைக்குத் தேவை

தொடர்பு: 077 542 0567 (இ)

## வேலையாள் தேவை

செல்வா ரெலிகொமினிகேசன்

124, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி நிறுவனத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். (2835)

T.P.0777 193 173

## Direct Marketing International Pvt (Ltd)

**வேலைவாய்ப்பு** புதியதோர் எதிர்காலத்தை நோக்கி...


நீங்கள் Management துறையில் ஆர்வம் கொண்டவரா? தனியாக ஒரு அலுவலகத்தைக் கொண்டு நடத்தும் திறன் படைத்தவரா? அப்படியானால் உங்களுக்கான ஒரு புதிய சந்தர்ப்பம். வடக்கில் ஆரம்பிக்கவுள்ள எமது புதிய கிளைகளுக்கு office Administration, Management Trainee, Supervisors, customer care, Account ஆகிய பதவிகளுக்காக துடிப்பான ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் தேவைப்படுகின்றனர்.

- அடிப்படைத் தகைமைகள்: O/L
- 6, 8 மாதகால பதவி உயர்வு அனுபவப் பயிற்சி வழங்கப்படும். அதன்மூலம் அடிப்படையாக 12,000-14,000/= பெறலாம்.
- தங்குமிட வசதிகள் உண்டு.
- வயதெல்லை: 18-35

தொடர்புகளுக்கு: 0775566226, 0770771377, 0217200867,

உங்கள் திறமைகளை வெளிப்படுத்த புதிய சந்தர்ப்பம்: www.grantonsrilanka.com


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்: 10.03.1947

மறைவு: 28.04.2013

அன்புடையீர்!
கடந்த 28.04.2013 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

**அமரர்**
## வேலுப்பிள்ளை செல்வராசா
**அவர்களின்**

அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 26.05.2013 ஞாயிற்றுக்கிழமை கீரிமலை புனிதத் தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (28.05.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

35. முள்ளி வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(சி-3435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.